# அரங்கம்

செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

www.arangamnews.com

வெள்ளி, வைகாசி 18, 2018. இதழ் - 13







# “எதிர்ப்புக்கு மத்தியிலும் எட்கா உடன்படிக்கை கைச்சாத்தாகும்”

## தொழிற் சங்கங்கள் போராட முடிவு

தகவல் தொழில் நுட்பம் மற்றும் அதனுடான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் அடங்கிய எட்கா உடன்படிக்கை மிக விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது. இந்திய மத்தி அரசுடன் இலங்கை அரசாங்கம் செய்யவுள்ள இந்த உடன்படிக்கை இந்த ஆண்டு இறுதியில் செயற்படுத்தப்படும் என கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரி ஒருவர் கூறினார்.

தகவல் தொழில் நுட்பத்தின் ஊடான பொருளாதார அபிவிருத்திக்கு முற்று முழுதான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் இந்த உடன்படிக்கை தொடர்பான சில திருத்தங்கள் இலங்கை அரசாங்கத்தின் விருப்பத்திற்கு ஏற்ப செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆலோசனையுடன் இலங்கை அரசின் உயர் மட்ட அதிகாரிகள் குழு ஒன்று புதுடில்லியில் கலந்துரையாடியுள்ளது.

உடன்படிக்கையை கைச்சாத்திடுவது குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூடிய விரைவில் இரு நாட்டு தலைவர்களும் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவர் எனவும் அந்த அதிகாரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு எதிராக 12 தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக கூறப்படுகின்றன. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட தொழிற் சங்க கூட்டமைப்பு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்

அதேவேளை எட்கா உடன்படிக்கையின் பிரதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் ராஜித சேனரட்ன தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிங்கப்பூர் அரசாங்கத்துடன் செய்யவுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அரச மருத்தவர் சங்கம் வியாழக்கிழமை அடையாளப் பணி பகிஸ்கரிப்பு போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 11 தமிழர் கடத்தல்:

## முன்னாள் கடற்படை அதிகாரிக்கு சிவப்பு எச்சரிக்கை பிடியாணை

கொழும்பில் 2008/9 காலப்பகுதியில் கடத்தப்பட்டு காணாமல் போன 11 தமிழர்கள் தொடர்பான வழக்கு வியாழனன்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

கொட்டாஞ்சேனை மற்றும் தெஹிவளை ஆகிய இடங்களில் கடத்தப்பட்ட இவர்களில் 5 பேர் தமிழ் மாணவர்களாவர்.

இந்த வழக்கின் சந்தேக நபர்களில்


தொடர்ச்சி... (பக்கம் -15 )


# விமானப்படை பயிற்சி முகாமில் கைக்குண்டு வெடிப்பு




தியத்தலாவை விமானப்படை பயிற்சி முகாமில் கைக்குண்டு வெடித்ததில் மூவர் காயமடைந்ததாக விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

பயிற்சி நடவடிக்கையின் போதே கைக்குண்டு வெடித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் போது 3 பெண் விமானப்படை வீராங்கனைகள் படு காயமடைந்த நிலையில் தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




## "யுத்த சூழலில் இடம்பெயர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் சத்தியக் கடதாசி சமர்ப்பித்து மேன்முறையீடு செய்ய முடியும்" - ஆளுனர்

யுத்த சூழலில் இடம்பெயர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் சத்தியக் கடதாசி சமர்ப்பித்து மேன்முறையீடு செய்ய முடியும் என்று கிழக்கு மாகாண ஆளுனர் ரோகித்த போகொல்லா கம தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர், முன்னாள் விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம், பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் மற்றும் தொண்டர் ஆசிரியர்களின் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெற்று முடிந்திருந்தது. இதனையடுத்து தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல் இணையத்தில் வெளியிடப்பட்டிருந்தது. இது தொடர்பான ஆட்சேபனைகள், முறைப்பாடுகள் என்பவற்றை 17ம் திகதிக்கு முன்னர் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

2006ல் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகள் காரணமாக பல தொண்டர் ஆசிரியர்கள் இடம்பெயர்ந்திருந்தமையால் 2006ம் ஆண்டு மற்றும் 2007ம் ஆண்டு நடுப்பகுதி வரையான காலப்பகுதிக்குரிய ஆவணங்களைத் தங்களால் சமர்ப்பிக்க முடியாமல் இருந்ததாகவும் இதனடிப்படையில் தங்களின்

தொடர்ச்சி... (பக்கம் -22 )

## தென்கொரிய உதவியில் கிளிநொச்சியில் 13 பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய ஒப்பந்தம்



தென்கொரியாவின் கொய்கா சர்வதேச அபிவிருத்தி செயல்திட்டத்தின் மூலம் 7.5மில்லியன் அமெரிக்க டொலர்களை கல்வி அமைச்சிற்கு நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது. இதற்கான கைச்சாத்து (15.05.2018) கல்வி அமைச்சில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் முன்னிலையில் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சிக்கும் தென்கொரியாவின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி வீடொங்கூ தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஏ.எம்.பி ரத்நாயக்க ஆகியோருக்கு இடையில் நடைபெற்றது

இந் நிகழ்வில் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள், பணிப்பாளர்கள் உட்பட தென்கொரிய நாட்டின் கொய்கா நிறுவன அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சி திட்டத்தின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 13 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்த அபிவிருத்தியில் பாடசாலை கட்டிடங்கள், விசேட தேவையுடையோருக்கான வகுப்பு உபகரணங்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்வி பணிப்பாளர்கள் ஆகியோருக்கான வெளிநாட்டு உள்நாட்டு பயிற்சிகள், மாணர்களுக்கான தொழில் வழிகாட்டல், கணணி தொழில்நுட்பம் ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இந்த திட்டத்திற்கு கல்வியியல் அளவை மேம்படுத்தும் செயல் திட்டம் என பெயரிடப்பட்டுள்ளது.

## சிறுவர் வன்முறையைத் தடுக்க ஒரு லட்சம் விரல் அடையாளம்



18 நாட்கள் திட்டத்தின் கீழ் சிறுவர் வன்முறையைத் தடுக்கும் நோக்கில் ஒரு லட்சம் பேரின் விரல் அடையாளங்களைச் சேகரித்து ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கும் செயற்பாடு மட்டக்களப்பு சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுக்கும் இளைஞர் சமூகத்தின் ஏற்பாட்டில் புதனன்று ஆரம்பமானது.

புதன்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமாரிடம் முதல் விரல் அடையாளம் பெறப்பட்டது.

சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுக்கும் இளைஞர் சமூகத்தினருடன் இணைந்து மட்டக்களப்பு இளைஞர் சமூகமும் செயற்படவுள்ளது.

சிறுவர் வன்முறைகள் தடுக்கப்படவேண்டும், வன்முறையில் ஈடுபடுவோருக்கு உடனடியாக தண்டனை, பாதுகாப்பான சமூகத்தை உருவாக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு ஜுன் மாதம் 4ஆம் திகதி பெறப்படும் விரல் அடையாளங்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில், மாவட்ட செயலகத்தின் திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், வவுணதீவு அபிவிருத்தி அமைப்பின் பிரதம அதிகாரி எல்.ஆர்.டிலிமா, திட்ட முகாமையாளர் தவராஜா நிலக்ஷி, திட்ட அதிகாரிகளான கே.சதீஸ்குமார், அன்ரன் ஜெகன், ராஜரத்தினம், வவுணதீவு பிரதேச இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

## சமுர்த்தி சிப்தொர கல்விக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவு



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் மாணவர்களுக்கான சமுர்த்தி சிப்தொர கல்விக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது .

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி வங்கி கிளைகள் ஊடாக நடத்தப்பட்ட நேர்முக தேர்வில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி உதவிபெறும் பயனாளிகளின் 46 பாடசாலை மாணவர்களுக்கான சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசிலும் கல்விக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்கும் நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் கே. குணநாதன் தலைமையில் பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்றது .

இந்த திட்டத்தின் கீழ் 2017 ஆண்டு கல்வி பொது சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்த சமுர்த்தி உதவி பெரும் பயனாளிகளின் மாணவர்களில் உயர்தர கல்வியை தொடர்கின்ற மாணவர்களுக்கான கல்விக்கான ஊக்குவிப்பு தொகையாக வழங்கி வைக்கப்பட்டது

இந்த கல்விக்கான ஊக்குவிப்பு நிதியானது சமுர்த்தி அபிவிருத்தி வங்கி ஊடாக மாதாந்தம் தலா 1500 ரூபா வீதம் மாணவர்களின் உயர்தர கல்வியை நிறைவு செய்யும் வரை வழங்கப்படவுள்ளது .

இந்நிகழ்வில் மண்முனை வடக்கு வாழ்வின் எழுச்சி முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி . கிரிதராஜ் நிர்மலா , மண்முனை வடக்கு வாழ்வின் எழுச்சி தலைமையாக முகாமையாளர் திருமதி. கலைச் செல்வி வாமதேவன், கருத்திட்ட முகாமையாளர் திருமதி கே . சுபந்தினி ,சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம் சாருலதா , சமுர்த்தி வங்கி முகாமையாளர்களான திருமதி குமுதினி இருதயதாசன், கே. நவரஞ்சன், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டனர் .

## ஈச்சந்தீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் உற்சவம் 20ம் திகதி ஆரம்பம் (விளாவூர் நிருபர்)



மட்டக்களப்பு - ஈச்சந்தீவு அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவச் சடங்குப் பெருவிழா 20/05/2018 இல் பால்குட பவனி மற்றும் சங்காபிஷேகத்துடன் ஆரம்பித்து 29/05/2018 இல் நிறைவுபெறவுள்ளது.

## 'மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி உள்ளிட்ட நகரங்களிலுள்ள இராணுவ முகாம்கள் விரைவில் அகற்றப்படும்'

முக்கியமான நகரங்களில் இருக்கின்ற இராணுவத்தின் தலைமையகங்கள் அமைந்துள்ள 530 ஏக்கர் காணிகளின் விடுவிப்புக்காக தேவைப்படும் 820 மில்லியனுக்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நிதி கிடைத்ததும் அந்த நிலங்கல் விடுவிக்கப்படவுள்ளன என்று புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் கலாநிதி பொன்னையா சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பாதுகாப்புத் தரப்பினரின் வசம் உள்ள காணிகளின் விடுவிப்பு மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற உயர்

தொடர்ச்சி... (பக்கம் -22 )

## மட்டக்களப்பு மாவட்ட செயலக விளையாட்டுப் போட்டி



ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புரைக்கமைய உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வேண்டுகோளின் பேரில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக அரச உத்தியோகத்தர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்றது.

அரச பணியாளர்களின் விளையாட்டு மற்றும் உடல் உள மேம்பாட்டுத் தேசிய வாரத்தினையொட்டியதாக நடத்தப்படும் இவ் விளையாட்டுப் போட்டியில் உத்தியோகத்தர்கள் பங்குகொள்ளும் வகையில் பாடும் மீன்கள், வாவி நாயகர்கள், நட்சத்திரப்படையினர், சூரியக்கதிர்கள் ஆகிய நான்கு இல்லங்கள் அமைக்கப்பட்டு விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பிரதம அதிதிகளாக மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார், மாநகர சபை முதலர்வர் ரி.சரவணபவன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இப்போட்டியில், பாடுமீன்கள் இல்லம் முதலிடத்தினைப் பெற்றது. முறையே இரண்டாம் மூன்றாம் நான்காம் இடங்களை நட்சத்திரப்படையணி, சூரியக்கதிர்கள், வாவிநாயகர்கள் ஆகிய இல்லங்கள் பெற்றுக் கொண்டன.

ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புரையில் மேற்படி விளையாட்டு மற்றும் உடல் உள மேம்பாட்டுத் தேசிய வார விளையாட்டுப் போட்டிகள் நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.



# இப்போதைக்கும் எப்போதைக்கும் தேவையான அரசியல் அறம்

"தமிழர்களும் எமது நாட்டு மக்களே. அவர்களுக்கும் தமது உறவுகளை நினைவுகூர உரிமை இருக்கிறது" என்று அடித்துக்கூறியிருக்கிறார் அமைச்சர் ராஜித சேனரத்ன.

சில செய்தியாளர்களால், மே 18 நினைவுகூரல்கள் குறித்து கடுமையான தொனியில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தயங்காமல் அவர் பதிலளித்துள்ளார். ஜேவிபியில் இருந்து இறந்தவர்களை நினைவுகூர முடியுமானால், தமிழ் மக்கள் ஏன் நினைவுகூர முடியாது என்று அவர் பதில் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

### உங்கள் தந்தை மனிதனாக இருந்தார் என்று உரக்கக் கூறத் தயாராகுங்கள்

இது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

சில சிங்கள கடும்போக்கு அமைப்புக்கள் மே 18 நாளைப் பற்றி கடுமையாக கருத்துக்களை வெளியிட்டு வந்த நிலையில் அமைச்சரின் இந்தக் கருத்தும் வந்துள்ளது.

உண்மையில் இந்த விடயத்தில் செய்தியாளர்களுக்கு பூசி மெழுகினாற்போல் பதில் சொல்ல அமைச்சருக்கு வாய்ப்பு இருந்தது. தனது அரசியல் எதிர்காலத்தை மனதில் எடுத்திருந்தால் அப்படி அவர் சொல்லவேண்டிய தேவையும் இருக்கிறது. ஆனாலும் அவர் அதனைப் பொருட்படுத்தாமல் தமிழ் மக்களுக்கு நினைவுகூர உரிமை இருக்கிறது என்பதை அடித்துக் கூறியுள்ளார்.

இந்தவிடயம் சில அம்சங்களை கோடிட்டுக் காட்டுகிறது. தமது இன மக்கள் மத்தியில், தனக்கு வாக்களிக்க வேண்டியவர்களை நோக்கி எந்தவிதமான அரசியல் பயமும் இன்றி, நியாயம் என்று தனக்குப் பட்ட ஒரு கருத்தை, மாற்று இனத்துக்கு சாதகமான கருத்தை அவர் அடித்துப் பேசியிருக்கிறார். கிட்டத்தட்ட தமிழ் தலைவர்கள் சிங்களை மக்களை நோக்கி கூறக்கூடிய ஒரு கருத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். இது நல்ல தலைவருக்கு தேவையான ஒன்று. இதே குணாதிசயத்தை தமிழ் அரசியல்தலைவர்களிடம் எதிர்பார்க்கிறோம். தமது மக்களுக்கு நல்லது என்று தாம் நினைக்கும் விடயத்தை, அவர்களுக்கு பிடிக்காவிட்டாலும் கூட, அடித்துக்கூற வேண்டிய அவசியம் தற்போது தமிழ் தலைவர்களுக்கு கூடுதலாகவே இருக்கின்றது. இந்த விடயத்தில் வாக்கு அரசியலை அவர்கள் கருத்தில் கொள்ளாமல், இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும்.

மக்கள் ஒரு போரில் அடிபட்டு வீழ்ந்துகிடக்கும் நிலையில், அவர்களை மேலும் தேவையற்ற உணர்ச்சிகளுக்கு உள்ளாக்கி வாக்குப்பெறும் முனைப்புகளைவிட்டு, தமிழ் தலைவர்கள் துணிச்சலுடன் மக்களுக்கு நல்லதை தயங்காமல் கூறவேண்டும்.
இதுதான் இப்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கு தேவை.

அதுவும் அவர்கள் தமது இறந்துபோன உறவுகளை நினைவுகூர நினைக்கும் நாட்களில், இனிமேலும் அப்படியான அழிவுகள் ஏற்படாமல், அவர்களது தீர்வுக்கான வழிகளைக் கூற தமிழ்த் தலைவர்கள் துணிச்சலாக முன்வரவேண்டும். சில வேளைகளில் தமிழ் மக்கள் மாற்று வழிகளை மறுக்க அல்லது நிராகரிக்க முற்படக் கூடும். அவர்களது கடந்தகால மனவலிகள் அதற்கு காரணமாகவும் இருக்கலாம். ஆனால், அதற்காக அவர்களுக்கு அழிவைத்தரும்

**பூபாலரட்ணம் சீவகன்**

பாதையில் அவர்களை தொடர்ந்தும் கொண்டு செல்ல தமிழ் தலைவர்கள் முயலக் கூடாது. மக்களுக்கு கசப்பாக இருந்தாலும் கடந்தகால தவறுகளை சுட்டிக்காட்டத் தலைவர்கள் தவறக்கூடாது.

இது இப்போதைக்கும் எப்போதைக்கும் தேவையான அரசியல் அறம்.

### துரோகிதான் என்ற பழிச் சொல் கேட்கவும் தயாராகுங்கள்

இங்கு சில செய்தியாளர்களும் இனவாதத்துடன் கேள்விகளை கேட்டதாக செய்திகள் வந்திருந்தன. அவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். இதே விடயம் எமது தமிழ் செய்தியாளர்களுக்கும் பொருந்தும். மக்களுக்கு இனிப்பான உணர்வூட்டும் தகவல்களை மாத்திரம் நாம் கூற முடியாது. யதார்த்தத்தை, அது புளிப்பாக இருந்தாலும் கூற வேண்டும். நஞ்சு இனிக்கிறது என்பதற்காக மக்களுக்கு அதனையே சுவைபட மீண்டும் மீண்டும் கூற முடியாது. இதுவரை காலத்தில் சொர்க்கமாக தெரிந்த பல கனவுகள் இதனால், நொறுங்கிப் போகலாம். உண்மை உறைக்கலாம். ஆனால், அதுதான் உண்மை என்று தெரிந்தபின்னர் அதனை கூறாது இருக்க இயலாது.

வன்செயல் பாதை எமக்கு பலன் தரவில்லை என்பது தெளிந்த உண்மையாகியிருக்கிறது. இது அனைவரும் உணர்ந்த உண்மை. ஆகவே, அடுத்த பாதையில் மக்களை வழிநடத்த செய்தியாளர்கள் தயாராக வேண்டும். அரசியல்வாதிகள் அதில் தவறும் போது சுட்டிக்காட்ட வேண்டும். இப்படிச் செய்ய நீங்கள் முனையும் போது நிச்சயமாக துரோகி என்ற பட்டம் உங்களுக்கு வழங்கப்படும். நீங்கள் தமிழன் அல்ல உங்கள் தந்தை தமிழன் அல்ல என்றெல்லாம் (இன்னும் மோசமான வார்த்தைகளில்) பழி சொல்வார்கள். ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். உங்கள் தந்தை மனிதனாக இருந்தார் என்று உரக்கக் கூறத் தயாராகுங்கள். நீங்கள் மனிதம் நிறைந்தவர்கள் என்று உரக்கக் கூறுங்கள்.

## கல்வியாளர் கோணேசபிள்ளை மறைந்தார்

மண்டூரின் கல்விப் பாரம்பரியத்தின் மூத்த கல்வியாளரும் சிறந்த சிந்தனையாளருமான கலாநிதி



கோணாமலை கோணேசபிள்ளை அவர்கள் 15.05.2018 செவ்வாய்க்கிழமை காலமானார். அவரின் இழப்பு மண்டூரில் பெரும் தலைமுறை இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேசப் பல்கலைக் கழகங்களிலும் கடமையாற்றி பல் இனத்தவர்களின் உயர்வுக்கும் பங்காற்றியவராகவும், அமேரிக்காவில் இருபத்தைந்து (25) ஆண்டுகளாக கல்விப்பணியிலும், ஆய்வுகளிலும் ஈடுபட்டு வந்த இவர், தனது சொந்த இடமான மட்டக்களப்பு மண்டூருக்கு 2009ம் ஆண்டு திரும்பினார். கற்றுச் சேர்த்த பட்டங்களையும் உயர்த்திய மாணவர்களின் மரியாதையும், அன்பையும் தவிர அவரிடம் எதுவுமில்லாத போதும் அவரது சர்வதேச கல்வித் தரத்தை இனிவரும் காலங்களில் எவருமே நிரப்ப முடியாத இடைவெளியொன்றை ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ளார்.

சுவாமி விபுலானந்தரின் விருப்புக்குரிய மாணவர்களின் ஒருவரான கல்வியியலாளர் கோணாமலை கோணேசபிள்ளை அவர்கள் விசேட கணித ஆசிரியராகவும், ஆங்கில ஆசிரியராகவும், கண்டி ஆசிரிய கல்லூரியிலும் விரிவுரையாளராக கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பணியாற்றினார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்று அங்கேயே முதுவிஞ்ஞானமாணி, முதுகலைமாணி பட்டங்களைப்பெற்றார். "சர்வதேசக் கல்வியும் ஐக்கிய நாடுகள் சபையும்" எனும் கற்கையில் பங்குபற்றி, அதில் உச்சப்புள்ளியைப் பெற்றார். மீண்டும்

**ருத்ரா**

அமேரிக்கா சென்று கலாநிதிப் பட்டத்துக்குரிய ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்து, கல்விக்கலாநிதி, தத்துவக்கலாநிதி ஆகிய பட்டங்களைப் பெற்று பொட்சுவானாவுக்குச் சென்று அங்குள்ள பல்கலைக் கழகத்தில் பணியாற்றி இலங்கை திரும்பினார். கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் வருகைதரு விரிவுரையாளராக பணியாற்றியதுடன் மண்டூர் கலை இலக்கிய அவையின் ஆலோசகராகவும் பணியாற்றிய கோணாமலை கோணேசபிள்ளை அவர்களின் இழப்பு முழு கல்விச்சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

அரங்கம் செய்திகள்
தொடர்புகளுக்கு
ஆசிரியர்- பூ.சீவகன்
227, பார் வீதி, மட்டக்களப்பு

அரங்கம் பத்திரிகை நிறுவனத்தின் விளம்பர முகவர்கள்

| மட்டக்களப்பு | கொழும்பு |
| --- | --- |
| ARANGAM 071 399 9091 070 300 9001 | ARANGAM arangamads@gmail.com 070 345 6800 071 399 9091 |
| EAST LINK AGENCY POST OFFICE 077 180 1400 196,TRINCO ROAD,BATTICALOA | |
| SHALOM DIGITAL STUDIO 077 632 1079 63,ST ANTONIS LANE,BATTICALOA | SIVA 077 503 8997 077 721 7341 |
| DINA ADVERTISING 077 712 0809 183/1,NEW KALMUNAI ROAD, KALLADY,BATTICALOA | |
| ST.ANTONY 077 470 1373 MAIN STREET, VALAICHCHENAI | J. PONNUTHURAI 077 187 7999 |
| TERRY 077 618 5 209 | S.K. RAMESH 077 360 0161 65.MANNING PLACE WELLAWATTA |

UK +44 776 935 409 +44 208 422 5917
67,KEMPTON AVENUE NORTHOLT,UB5 4HG,UK

# நிலைமாற்று நீதியில்லா நல்லிணக்கம் நோயறியா மருத்துவமே!


## நினைவுகூரலுக்கு ஒரு நல்லிணக்க அங்கீகாரம் அவசியம்

முள்ளிவாய்க்கால் நினைவுதினம் மீண்டும் நிகழ்கின்றது. ஆனால் முள்ளிவாய்க்கால் அவலம் போன்ற ஒன்று மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கான நிகழ்ச்சிநிரல் மாத்திரம் முன்னேற்றமின்றியே இருக்கின்றது.

இந்த வேலைத்திட்டங்களை முன்னகர்த்தும் அரசியல் சமூகமும், சிவில் சமூகமும் (பல்கலைகழக மாணவர் உட்பட) வெறும் ஆன்மீக சடங்குடன் நிறுத்தாமல், தமிழருக்கான நிலைமாற்றுநீதியின் முழுமையான வேலைத்திட்டத்தின் ஒரு நிரலாக இவற்றை முன்நகர்த்த வேண்டிய காலம் இது.

தமிழருக்கான நிலைமாற்றுநீதி அடிப்படையாக (1) உண்மையை கண்டறிதல், (2). நீதிவிசாரணை, (3). மீள்நிகழாமை, (4). நஷ்ட ஈடு என்னும் நான்கு தூண்களை கொண்டுள்ளது. அப்போ இந்த முள்ளிவாய்க்கால் நினைவுநாள் எங்கிருந்து வருகின்றது என்ற கேள்வி எழும்? இந்த நாலு கடமைப்பாட்டு தூண்களிலும் குறிப்பாக உண்மையை கண்டறிதல், மீள்நிகழாமை தூண்களில் இருந்து புறப்படுகின்றது. Memorialisation எனப்படும் நினைவூருதல் தனித்தனியே நினைவுகூருவது மாத்திரமின்றி கூட்டாக நினைவுகூருவதும், ஈடு செய்ய முடியாத உயிர் இழப்புகளுக்கு ஆறுதல் அளிப்பதாகவும், பாதிக்கப்பட்ட சமூகத்தின் ஒருமித்த புலம்பல் அல்லது ஒப்பாரியாக அமையும்போது ஒருவரையொருவர் தாங்கும் சமூக பலமாகவும் அமையும். இங்கு நடக்கும் மரியாதைக்குரிய நினைவுதினம், சமயச் சடங்கு மத்திரமல்ல, உளவியல் நிவாரணத்துக்கும், சமூக ஒருமைப்பாட்டுக்கும் ஒப்புரவு அளிக்கும்.

நினைவூரல் என்பது முள்ளிவைக்காலில் தொடங்கவுமில்லை. அதில் முடியவுமில்லை. அங்கிருந்து சரணடைந்து, பழைய தொடர்புள்ள போராளிகள் அல்லது பக்கபலமாக இருந்து குடும்பத்தினரால் கையளிக்கப்பட்டோர் என்பவர்கள் இன்னும் பாதுகாப்பாக இருகின்றார்களா? எங்கு இருக்கின்றார்கள்?? என்ற பதிலைக்கூட இத்தனை வருடங்களாக அரசு சொல்லமுடியாது இருப்பது பாரதூரமான அரசாட்சிக்கான குறைபாடு.



**பாதிக்கப்பட்ட சமூகத்தின் ஒருமித்த புலம்பல் அல்லது ஒப்பாரி ஒருவரையொருவர் தாங்கும் சமூக பலமாக உருவெடுக்கும்**

தமிழ் மக்களுக்கான பாதுகாப்பை இந்த அரசு வழங்ககூடிய உரிமையை இழந்து நிற்கின்றது. தமிழ் மக்களுக்கான பாதுகாப்பை, பாதுகாப்பு படையினரிடம் இருந்தும், நீதித்துறையிலும் இருந்தும், சட்டவாக்கதுறையிடம் இருந்து கிடைக்காதது இறுதியில் சர்வேதேச சுயாதீன நீதியை நோக்கிச் செல்ல வைத்துள்ளது.

காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் கண்துடைப்புக்கு மாத்திரமே. பதில் கொடுக்கமுடியா ஜனாதிபதி நம்பிக்கை இழந்துவிட்டார். நல்லிணக்க வேலைத்திட்டத்தில் இருந்து ஸ்ரீலங்கா அரசு விடாப்பிடியாகப் பிரிந்து செல்வது, ஸ்ரீலங்கா அரசின் தார்மீக வீழ்ச்சிக்கும், சர்வதேச அந்நியமாக்கலுக்கும் வழிவகுக்கின்றது. இதனால் பாதிக்கப்படப் போவது இலங்கைத்தீவில் வாழும் எல்லா மக்களும் தான். ஆகவே, எல்லா நாட்டுப்பற்றுள்ள மக்களும், தங்கள் நலனை காப்பாற்ற காலம் தாமதிக்காமல் முன் வரவேண்டும். ஸ்ரீலங்கா அரசு மாத்திரமின்றி, தமிழ் மக்களும் நினைவூரல் வேலைத் திட்டங்களை முள்ளிவைக்கால் நினைவுதினத்துக்குள் முடக்க முடியாது. அதற்கு முன்னர் நடந்த படுகொலைகளும்,



சாள்ஸ் அண்டனி

கூட்டுக்கொலைகளும், சித்திரவதைகளும், பாலியல் கொடுமைகளும் மன்னிக்கமுடியாத சர்வதேச குற்றங்களாகக் கருதப்படுகின்றது. பல சகாப்தங்களுக்கு பின்னரும் சர்வதேச குற்றவிசாரணை மீண்டும் நடாத்தப்படுவது உலக நடைமுறை. ஸ்ரீலங்கா அதற்கு விதிவிலக்கல்ல.

நினைவூரல் பல விடயங்களை உள்ளடக்கும். அவற்றுள் முக்கியமானவை;

(1). சரித்திர நிகழ்வுகள், ஒரு நபர் அல்லது ஒரு சமூகம் – கடந்துவந்த சரித்திரத்தை நினைவில் வைக்கும் முறைகள்.

(2). நினைவுகளுக்கு ஒருவித நல்லிணக்க அங்கீகாரம் அளித்து, நினைவூரல் வழங்குவதற்கும், நடந்த தாக்கத்தை பற்றி சிந்திக்கவும், மீள்நிகழாமைக்கு தேவையான நடைமுறைகளுக்கும் வாய்ப்பளிக்கின்றன

(3). நினைவுத் துபிகள், சிலைகள், சிற்பங்கள், சித்திரங்கள்

(4). அருங்காட்சியகங்கள், நினைவிடங்கள், பூங்கா அடங்கும்

(5). போரில் பாதிக்கப்பட்டவர்களின் பொது நினைவகம், தார்மீக திடத்தை உயர்த்தும்.

(6). கடந்த துஷ்பிரயோகம் இனியும் தொடராத மறுநிகழாமைக்கு ஒரு அரண் கட்டியமைக்க உதவும்.

ஸ்ரீலங்கா அரசு கடந்தகால சிங்கள இளைஞர்களுக்கு காட்டிய நல்லிணக்கம் தமிழருக்கு காட்டாமல் இருப்பது இனப்பாகுபாடு இன்னும் அழியவில்லை என்பதை எடுத்து இயம்புகின்றது. செத்த தமிழன் தான் சிறந்த தமிழன் என்று இனச்சங்காரம் செய்த காலஞ்சென்ற மந்திரி சிறில் மத்தியு கூறுவார். இன்று, செத்த தமிழனைக் கூட அந்த சிங்கள இளைஞர் கூட்டம் பாராமுகமாக இருப்பது கவலைக்குரியது. இந்தச் சமூகம் 1971, 1988 போன்ற வருடங்களில் நடந்த சிங்கள இளைஞர் படுகொலைகளுக்கு சரியான நடவடிக்கை எடுக்காதது கண்டனத்துக்குரியது. பாரிய கொலைகளுக்கு எதிரான நடவடிக்கை அன்று நடந்து இருக்குமானால், அதே இராணுவ தலைமைகள் இன்று முள்ளிவைக்கால் கொலையை செய்திருக்க முடியாது.

உண்மையை கண்டறிதல் என்ற நிலைமாற்று நீதியின் முதல் கடமை நடக்காமல், மற்ற விடயங்களை அரசாங்கம் முன்னெடுப்பது, குறிப்பாக நல்லிணக்கம், புதிய அரசியல் சாசனம், கட்டமைப்பு மாற்றங்கள் என்பன வருத்தத்தை அறியாமல் வைத்தியர் கொடுக்கும் மருந்துக்கு சமம். அது ஆளையே கொன்றுவிடும்.

## பாழாகிப் போச்சுதையோ!

பக்குவமாய்க் காய்நகர்த்திப்
பதவியிலே அமர்ந்தவர்கள்

தக்கபடி அரசியலை மக்களுக்காய்
நடத்தாமல்

மிக்கபல செல்வமுடன் வெகுமதியும்
பெற்றதனால்

நக்குண்டா ரானார்கள் நாவிழந்து
போனார்கள்

இப்போது மக்களை எழுச்சிபெறச்
சொல்வதெல்லாம்

எதிர்காலத் தேர்தலுக்காய் என்பதனை
அறியாமல்

எப்போதும்போல இவர்களையே
நம்புகின்ற

ஏமாந்த இனமுலகில் இதுபோல
எங்குமில்லை!

உரிமைக்கும், உடைமைகளை மீளப்
பெறுதற்கும்

உத்தியோகத் தெரிவுக்கும்

உள்ளிருப்போர் விடுகைக்கும்

வீதிக்கு வந்துமக்கள் போராட
வேண்டுமென்றால்

ஏதுக்குத் தேர்தலிலே இவர்களைநாம்
தெரிவு செய்தோம்?
வக்கணையாய்ப் பேசி வாக்குக்களைப்
பெற்றவர்கள்

மக்களால் பாராளும் மன்றுக்குச்
சென்றவர்கள்

மக்களைப் போராட மறுபடியும்
இழுக்காமல்

தக்கபடி போராடல் தார்மீகக்
கடமையன்றோ

பதவியிலே அமர்வதற்கும்
பணம்பொருள் சேர்ப்பதற்கும்

உதவிகேட்டு வருபவரை உதாசீனம்
செய்வதற்கும்

எதுவுமே செய்யாமல் செய்ததாய்
சொல்வதற்கும்

பதவிகளென் றரசியலே பாழாகிப்
போச்சுதையோ

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா



# வடக்குக் கிழக்கிற்கு வெளியே வடக்குக் கிழக்குத் தமிழர்கள்(பகுதி 02)

கொழும்பிலும் பிற தென்பகுதிகளிலும் வாழ்கின்ற வடக்குக் கிழக்குத் தமிழர்கள் யதார்த்தத்தில் அரசியல் அநாதைகளாகவே இருக்கிறார்கள்.

இவர்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் இவர்களுக்கென அடையாளம் தெரிந்த அரசியல் தலைமைகள் எவையும் இல்லை. அல்லது வெளிப்படையாக அடையாளம் காட்டி ஆதரிக்கக் கூடிய எந்த அரசியல் தரப்பையும் காணக்கிடைக்கவில்லை.

ஏற்கனவே கூறப்பட்டதைப்போல மகேஸ்வரன் ஐ.தே.க.வின் சார்பில் போட்டியிட்டபோதுமட்டும் கொழும்பைச் சேர்ந்த வடக்குக் கிழக்குத் தமிழர்கள் அவரை வெளிப்படையாக ஆதரித்தனர்.

கடைசியாக நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மனோ கணேசனை ஆதரித்திருக்கிறார்கள்.

குமார் பொன்னம்பலம் இருந்த காலத்தில் "கொழும்புத்தமிழ்த் தலைமை" என்றொரு அடையாளம் கொண்ட கொழும்புத் தமிழ் அரசியலாளர்களாக உள்ளனர். ஆனாலும் அருணாசலத்தையும் இராமநாதனையும் விட ஏனையவர்கள் கொழும்பில் இருந்தாலும் வடக்குக் கிழக்கில்தான் "மந்தை" மேய்த்தனர். ஆகவே கொழும்பில் தமிழ்த் தலைமைத்துவமோ தமிழ் அடையாளமே சரியாக மேற்கிளம்பியிருக்கவில்லை.

இதற்கு 1958 இலிருந்து நிகழ்ந்த இன வன்முறையும் பிறகு தீவிரமடைந்த யுத்தமும் காரணமாகின என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

இன வன்முறைச் சூழலிலும் யுத்தத்தின்போதும் கொழும்பிலோ தென்பகுதியிலோ குரலை உயர்த்திப் பேச முடியாத நிலையிலே – உளவியல் அச்சத்திற்குள்ளாகியிருந்தனர் தமிழர்கள்.

நடைப்பிணங்கள் என்று சொல்வார்களே, ஏறக்குறைய அந்த நிலையில்தான் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர்.

அப்பொழுது கொழும்புத்தமிழர்களின்

## தலைநகரில் தமிழர்கள் " பேசாமடைந்தை"களாக அரசியல் அநாதைகளாகவே உள்ளனர்.

அடையாளம் தொனித்தது. ஆனால், அது மக்கள் ஆதரவோடு பலமடையவும் பரிணமிக்கவும் இல்லை. அதைப் பெறும் வகையில் அல்லது அதை உருவாக்கும் வகையில் ஆளுமையோடும் அரசியல் நுணுக்கங்களோடும் குமார் செயற்பட்டிருக்கவும் இல்லை.

குமாருடைய "அரசியற் தடுமாற்றங்கள்" (தற்பொழுது கஜேந்திரகுமாருக்குள்ள தடுமாற்றங்களைப்போல – கஜேந்திரகுமாருக்கும் நல்வாய்ப்புகளும் சாத்தியங்களும் அதிகமுண்டு. ஆனால், அவருடைய அரசியல் தடுமாற்றங்களால் அவற்றை அவர் பலமிழக்கச் செய்து வருகிறார்) அவரை ஒரு அரசியல் சக்தியாகக் கட்டியெழுப்ப முடியாமலாக்கி விட்டன.

மற்றும்படி தமக்கான ஒரு அரசியல் தொடர்ச்சியையோ அரசியற் பாரம்பரியத்தையோ வடக்குக் கிழக்கிற்கு வெளியே உள்ள – கொழும்பு வாழ் - தமிழர்கள் கொண்டிருக்கவில்லை.

இவ்வளவுக்கும் சேர்.பொன் இராமநாதன், சேர். பொன். அருணாசலம் காலத்துக்கு முன்பிருந்தே கொழும்பில் தமிழர்கள் இருந்து வருகிறார்கள். ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக.

ஆனால், இதுவரையான வரலாற்றில் இராமநாதனும் அருணாசலமும் பிறகு திருச்செல்வம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், வி.சுந்தரலிங்கம், நாகநாதன், தேவநாயகம் போன்றவர்கள் மட்டுமே வரலாற்று

ஒரேயொரு செயற்பாட்டியக்க மையமாகத் திகழ்ந்தது தமிழ்ச்சங்கம் மட்டுமே.

அதற்கடுத்தது, அகில இலங்கைக் கம்பன் கழகம்.

இதைத் தவிர்த்துப் பார்த்தால், வேறு சமூக, அரசியல் செயற்பாட்டியக்கங்களையோ ஆளுமைகளையோ நாம் அடையாளம் காண முடியவில்லை.

ஆனாலும் தென்பகுதியில் குறிப்பாகக் கொழும்பில் தொடர்ச்சியாக இருந்து வருவோரில் அதிகமானவர்கள் வெளிப்படையாக அரசியலில் செயற்படாது விட்டாலும் ஐ.தே.கவுக்கே வாக்களித்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது மீள் குடியேற்ற அமைச்சராக இருக்கும் சுவாமிநாதன் இந்தப் பாரம்பரியத்தின் வெளிப்பாடே.

கருணாகரன்

மிகச் சில எண்ணிக்கையானவர்களே பிற கட்சிகளை ஆதரித்துள்ளனர்.

## கொழும்புத்தமிழர்களின் ஒரேயொரு செயற்பாட்டியக்க மையமாகத் திகழ்ந்தது தமிழ்ச்சங்கம், இப்போது கம்பன் கழகமும்

ஆகவே தங்களுடைய சுயாதீனத்தை வெளிப்படுத்த முடியாத நிலையில்தான் தென்பகுதியில் வாழ்கின்ற வடக்குக் கிழக்குத் தமிழர்கள் இருக்கிறார்கள்.

நூற்றாண்டுகள் பாரம்பரியத்தைக் கொண்டு வாழ்கின்றபோதும் இதுதான் யதார்த்த நிலை.



இதேவேளை மிகக் குறுகிய கால புலம்பெயர் வாழ்வில் அங்குள்ள தமிழர்கள் தங்களுடைய அரசியல் அடையாளங்களை இன்று மேம்படுத்தி வருகின்றனர்.

கனடாவில் ராதிகா, ஹரி ஆனந்தசங்கரி தொடக்கம் லண்டன், அவுஸ்திரேலியா, நோர்வே, பிரான்ஸ், ஜேர்மனி என ஒவ்வொரு நாடுகளிலும் தங்கள் அரசியல் அடையாளத்தை நிறுவ முயற்சிக்கின்றனர்.

அங்கே தமிழ்த்தரப்பு என்று தனி அடையாளம் கொள்ள முடியாது. ஆகவே அங்குள்ள அரசியற்கட்சிகளோடு இணைந்தே தங்கள் அரசியல் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும். அந்த வகையில் இதைச் செய்து வருகின்றனர். அதாவது, தமிழ்த்தரப்பின் அடையாளத்தை அங்குள்ள மைய அரசியல் சக்திகள் உணரக் கூடிய வகையில் செயற்பட்டு வருகின்றனர்.

இதற்கான சிறப்பான அடையாளம் கனடியப் பிரதமர் தமிழ்த்தரப்பின் அடையாளங்களைப் பிரதிபலிக்கும் வகையில் கடந்த தைப்பொங்கல் நிகழ்வில் பங்கேற்றதும் பிற தமிழ் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டமையுமாகும்.

இவ்வாறே அவுஸ்திரேலியா, பிரத்தானியா போன்ற நாடுகளிலும் ஒரு வளர்ச்சி நிலை தென்படுவதை நாம் அவதானிக்கலாம்.

ஆனால், இலங்கையில் இது எதிர்மாறாகவே உள்ளது. சொந்த நாட்டில், அதன் தலைநகரில் தமிழர்கள் "பேசாமடைந்தை"களாக அரசியல் அநாதைகளாகவே உள்ளனர்.

இது மிகத் தீங்கானது. அபாயகரமானது. எதிர்கால வாழ்வுக்குச் சவாலானது.

அரசியல் உணர்வும் அடையாளமும் இருந்தால்தான் அந்தச் சமூகத்தினால் மொழி, பண்பாடு போன்ற தன்னுடைய பிற அடையாளங்களைப் பேணிக் கொள்ள முடியும். அதற்கான சமூக செயற்பாட்டியக்கங்களை வலுப்படுத்தி இயங்க வைக்க இயலும்.

இதைக் குறித்துச் சிந்திப்பதற்கு இன்று யாருமே இல்லை. இதுதான் உண்மை.

இது எளிதான விடயம் இல்லை என்கிறார் நண்பர் ஒருவர்.

"கொழும்பில் பாதிக்கும் மேலான வடக்குக் கிழக்குத் தமிழர்கள் கொழும்பில் வணிகத்தை மையமாகக் கொண்டு இயங்குகின்றவர்கள். அப்படி இயங்குவோர் முரண்நிலை அரசியலை ஒரு போதுமே முன்னெடுக்க மாட்டார்கள். இங்கே முரண்நிலை என்பது அடையாள அரசியலையே குறிக்கும். ஆகவே கொழும்பு மைய அரசியலாக இருக்கும் ஐ.தே.க – சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசியலுக்கு எதிரான – மாறான – தமிழ் அடையாள அரசியலை ஒருபோதுமே யாரும் மேற்கொள்ள முன்வர மாட்டார்கள். அப்படி வந்தாலும் அதை அங்குள்ள தமிழர்கள் ஆதரிக்க மாட்டார்கள்" என்கிறார் அவர்.

இதில் ஓரளவுக்கு உண்மை உண்டு. ஆனால், நோகாமல் பிள்ளைப் பெற முடியாது என்பது இன்னொரு நடைமுறை உண்மை.

அப்படியென்றால், வடக்குக் கிழக்கிற்கு வெளியே உள்ள வடக்குக் கிழக்குத் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் எப்படி அமையும்?

வீடு விற்பனைக்கு



அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு இத்தியடியில் சகல வசதிகளுடன் 10 பேர்ச்சஸ் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

CONTACT
0766479532

# நடந்தாய் வாழி களனிகங்கை...... அங்கம் - 02

## அரசமரத்தின் பின்னணியில் நிகழ்ந்த அரசியல் சதி



மக்கள்திலகம் எம்.ஜி.ஆர். நடித்த சந்திரோதயம் படத்தில்

“புத்தன், யேசு, காந்தி பிறந்தது பூமியில் எதற்காக?
தோழா ஏழை நமக்காக!
கங்கை, யமுனை, காவிரி, வைகை ஓடுவதெதற்காக?
நாளும் உழைத்து தாகம் எடுத்த தோழர்கள் நமக்காக! “

என்ற பாடல் வருகிறது.

இந்தப்பாடலை கவிஞர் வாலி இயற்றியிருப்பார். டி.எம். சௌந்தரராஜன் பின்னணிக்குரல் கொடுத்திருப்பார்.

இலங்கைக்கு முதலில் புத்தரும் பின்னர் காந்தியும் வந்திருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். இலங்கையில் கண்டியில் பிறந்தவர்.

இலங்கையில் ஓடும் கங்கைகளும் நாளும் உழைத்து தாகம் எடுத்த மக்களுக்காகத்தான்.

கங்கைக்கரைகளில் விவசாயம் நடக்கிறது. வர்த்தக பொருளாதாரத்திற்கும் இந்த கங்கைகள் உதவுகின்றன.



மக்களின் குடிநீரும் கங்கைகளிலிருந்தே பெறப்படுகிறது.

தமிழகத்திலும் கர்நாடகாவிலும் காவிரி நதி அரசியலாகியிருக்கிறது. இலங்கையில் நதிகளினால் இதுவரையில் பிரச்சினை இல்லை. அவை வற்றாத ஜீவநதிகளாக ஓடிக்கொண்டிருக்கின்றன.

தலைநகரத்தை ஊடறுத்துச்செல்லும் களனி கங்கையின் பின்னணியில் அரசியல் மாற்றங்கள், அதிர்வுகள் நிகழ்ந்துள்ளன.

கௌதம புத்தர் இலங்கை வந்த சமயத்தில் அவர் நீராடிய களனிகங்கையின் அருகில்தான் களனி ரஜமகா விஹாரை அமைக்கப்பட்டது. இங்கும் அரசமரம் இருக்கிறது. இவ்விடத்தில்தான் இந்தியாவில் சுட்டுக்கொல்லப்பட்ட மகாத்மா காந்தியின் அஸ்தி 18-02-1948 ஆம் திகதி கலசங்களில் எடுத்துவரப்பட்டு களனி கங்கையில் கரைக்கப்பட்டது.

இவ்வாறு புனிதம் பெற்றிருந்த களனி கங்கையில்தான் 1971 ஆம் ஆண்டும் அதன்பின்னர் 1989 ஆம் ஆண்டும் சிங்கள இளைஞர்கள், யுவதிகளின் பிரேதங்களும் மிதந்தன.

அன்பையும் அஹிம்சையையும் போதித்த இரண்டு புனிதர்கள் சம்பந்தப்பட்டுள்ள இந்த களனியிலிருந்துதான் அரசியல் சதிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. இங்கிருந்துதான், இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வாக உருவாக்கப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து, ஜே.ஆர். ஜெயவர்தனா கண்டி தலதா மாளிகை நோக்கி பாத யாத்திரையை ஆரம்பித்தார்.

இந்தக்களனி ரஜமகா விஹாரையின் பிரதம குரு மாபிட்டி கம புத்தரகித்த தேரோ (1921-1967) தலைமையில் தல்துவே சோமராம தேரோ (1915-1962), திருமதி விமலா விஜயவர்தனா என்ற சுகாதார நலத்துறை அமைச்சர் உள்ளிட்ட எட்டுப்பேர் அன்றைய பிரதமர் பண்டாரநாயக்காவை கொலைசெய்யச் சதித்திட்டம் உருவாக்கி செயல்படுத்தினர்.

களனி ரஜமஹாவிகாரையின் நலன்கள் முன்னேற்றங்களில் பெரும் பங்களிப்புச் செய்தவர்கள்தான் விமலா விஜயவர்தனாவின் தாயாரும் சகோதரர்களும். அதனால் விமலாவுக்கும் விஹாரையின் பிரதம குருவுடன் அந்நியோன்னிய நெருக்கமும் நீடித்தது.

அவர்களின் திட்டத்தின் பிரகாரம் பண்டாரநாயக்கா, 1959 செப்டெம்பர் 25 ஆம் திகதியன்று அவரது ரோஸ்மீட் பிளேஸ் வாசஸ்தலத்தில் சுடப்பட்டு,



மறுநாள் இறந்தார்.

25 ஆம் திகதி அவர் ஐ.நா. சபைக்கூட்டத்தொடருக்கு

**புத்தரும் காந்தியும் தரிசித்த களனி கங்கையின் அருகில் இருந்தே படுகொலைக்கான சதி திட்டப்பட்டது**

பயணமாகவிருந்த தருணத்தில்தான் இந்த துன்பியல் சம்பவம் நடந்தது.

உலகநாடுகளில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்குவதற்காகவும் அமைக்கப்பட்டதுதான் ஐக்கியநாடுகள் சபை. அதற்குப்புறப்படவிருந்த வேளையில்- அமைதியையும் சமாதானத்தையும் அன்பு மார்க்கத்தையும் போதிக்க அவதரித்த புத்தரின் புனித பாதம் பதிந்த, அவர் நீராடிய களனி கங்கைக்கரையிலிருந்து, அண்ணல் காந்தியின் புனித அஸ்தி கரைக்கப்பட்ட இடத்திலிருந்து தொடங்கிய அரசியல் சதி இன்றும் வேறு வேறு ரூபங்களில் தொடருகின்றது.

வரலாற்றில்தான் எத்தனை முரண் நகைகள் நிரம்பியிருக்கின்றன!

விமலா விஜயவர்தனா அன்றைய தேர்தலில் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு, யூ. என். பி. சார்பில் போட்டியிட்ட ஜே.ஆர். ஜெயவர்தனாவை ஆறாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து, வென்று நாடாளுமன்றம் சென்றதும் இந்த களனி தொகுதியில்தான்.

பண்டாரநாயக்கா கொலைச்சம்பவத்துடன் அரசியல் அரங்கிலிருந்து விமலா விஜயவர்தனா ஒதுங்கியமையால், அதன் பின்னர் நடந்த தேர்தலில் இதே களனி தொகுதியிலிருந்துதான் ஜே.ஆர். வெற்றி பெற்றார்.

இதே களனி தொகுதியில் இருந்துதான் பின்னாட்களில் சிறில்மத்தியூ

**ரஸஞானி**

என்ற சிங்கள கடும்போக்காளரும் வெற்றிபெற்றார்.

இவர் 1977இலும் அதன் பின்னர் நடந்த தேர்தலிலும் யூ.என். பி. சார்பில் வெற்றிபெற்று ஜே.ஆரின் அமைச்சரவையிலும் அங்கம் வகித்தார். இவரால் ஜே.ஆர். பல அரசியல் தொல்லைகளுக்கு ஆளாகியிருந்தார். இந்தியாவின் நெருக்குதலினால், சிறில் மத்தியூவின் அமைச்சர் பதவியையும் ஜே.ஆர். பறித்தார்.

1981 யாழ். பொது நூலக எரிப்பு, 1983 இனக்கலவரம் ஆகியவற்றின் சூத்திரதாரிகளில் ஒருவர்தான் இந்த சிறில் மத்தியூ!

களனியும் களனி கங்கையும் இலங்கை அரசியலில் ஏற்படுத்தியிருக்கும் அதிர்வுகளை வரலாற்று ஏடுகள் பதிவுசெய்துள்ளன.

எனினும், இந்த அமளிகள் எதனையும் கண்டுகொள்ளாமல் முகத்துவாரத்தை நோக்கி களனி கங்கை அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது.

களனியிலிருந்து கண்டி நோக்கிச்செல்லும் பதையில் நிட்டம்புவ என்னுமிடத்திற்கு அருகில் ஹொரகொல்லையில் அமரர் பண்டாரநாயக்காவின் நினைவுத்தூபி அமைந்துள்ளது. அவரது ஞாபகார்த்தமாக தலைநகரின்



Mrs. Vimala Wijayawardhana

கறுவாக்காடு என்னும் பிரதேசத்தில் சீன அரசினால் அமைத்துத்தரப்பட்டுள்ள சர்வதேச மாநாட்டு மண்டபமும், அவரது வாழ்வையும் பணிகளையும் மறைவையும் காட்சிப்படுத்தும் ஆவணக்காப்பகமும் அமைந்துள்ளன.

காலிமுகத்தில் அமைந்திருக்கும் பழைய நாடாளுமன்ற முன்றலில் ஒரு சிலையும் காலி முகத்திடலில் ருஷ்யாவின் சிற்பி லெவ் கேர்பில் என்றவர் வடிவமைத்த மற்றும் ஒரு வெண்கலச்சிலையும் பண்டாரநாயக்காவை

**சிறிமாவுக்கு சேலையின் வடிவத்தை வரைந்துகொடுத்த தமிழர்**

நினைவூட்டிக்கொண்டிருக்கின்றன.

பண்டாரநாயக்கா மீது இனரீதியாக கடும்போக்காளர் என்ற விமர்சனம் இருந்தபோதிலும் அவர் உண்மையிலேயே அவ்வாறில்லை. அவர் இங்கிலாந்தில் படித்து பரீஸ்டர் பட்டம் பெற்றவர். அவருக்கு சிங்கள மொழி அதிகம் பரிச்சியம் இல்லை. இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ். சேனாநாயக்கா, அதன்பின்னர் பிரதமர்களாக வந்த சேர் ஜோன். கொத்தலாவல, டட்லி சேனா நாயக்கா ஆகியோர் அந்நிய பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் நலன்விரும்பிகளாகவே இருந்தவர்கள்.

ஆனால், பண்டாரநாயக்கா தேசிய உணர்வுடன் தேசிய பொருளாதாரக் கொள்கைச்சிந்தனையுடன் வாழ்ந்தவர். வெள்ளைத் தேசிய உடை அணிந்தவர். தந்தை செல்வநாயகத்துடன் அவர் செய்துகொண்ட ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்குமானால் இலங்கையில் இத்தனை அழிவுகள் தோன்றியிருக்காது.

பண்டாரநாயக்காவை சுற்றியிருந்தவர்களினால் சூழ்நிலையின் கைதியாகி இறுதியில் உயிரையும் விட்டார்.

அவரது சிந்தனையின் வழியில் வந்த அவரது துணைவியார் ஶ்ரீமாவோ, அவரைப்போன்று அதிகம் படித்து பட்டங்கள் பெற்றவர் அல்ல. ரோஸ்மீட் பிளேஸ் வாசஸ்தலத்தின் சமையலறையிலிருந்து கணவருக்குப் பின்னர் நேரடியாக அரசியலுக்கு வந்து, உலகின் முதல் பெண்பிரதமர் என்ற பெருமையும் பெற்றதுடன் சிறிது காலம் அணிசேரா நாடுகளின் தலைவியாகவும் விளங்கினார். இவரது காலத்தில்தான், 1972 இல் இலங்கை பிரித்தானியாவின் ஆளுகையிலிருந்து முற்றாக விடுபட்டு, ஜனநாயக சோசலிஸ குடியரசாக மாறியது.

அவர் முதல் முதலில் நாடாளுமன்றம் செல்லும் வேளையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்தறிச்சேலையையே அணிந்து செல்ல விரும்பினார். அதன் வடிவத்தை வரைந்துகொடுத்தவர் ஒரு யாழ்ப்பாணத் தமிழர்தான் என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்!

அவர்தான் ஓவியர் கே.ரீ. செல்வத்துரை. யாழ்ப்பாணம் உரும்பராயைச்சேர்ந்த அவர் அவுஸ்திரேலியா மெல்பனில் சில வருடங்களுக்கு முன்னர் மறைந்தார்.

(தொடரும்)



# அம்பாறையில் தனது ஆதரவாளர்களை தமிழ் அரசுக் கட்சி புறக்கணிக்கிறது’ - சந்திரகாந்தன் குற்றச்சாட்டு

## இளைஞர்கள் வசம் கட்சியின் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்கிறார் அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி, தனது ஆதரவாளர்களையும், இளைஞர்களையும் புறக்கணிக்கிறது என்று அந்த மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினருமான சந்திரகாந்தன்




சந்திரநேரு குற்றஞ்சாட்டுகிறார்.

இதன் காரணத்தினால், தமிழ் அரசுக் கட்சியின் நீண்டகால ஆதரவாளர்கள் மிகுந்த விரக்தியில் இருப்பதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

பொத்துவில் தொகுதி அமைப்பாளரான தன்னை கடந்த மே தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளில் எந்தவிதத்திலும் கட்சி கலந்தாலோசிக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டுகின்றார். அதுமாத்திரமன்றி 2015க்குப் பிறகு மூன்று வருடமாக தமிழ் அரசுக் கட்சி தனக்கு எந்தவொரு கூட்டத்துக்கு அழைப்பு அனுப்பவில்லை என்றும் அவர் கூறுகிறார்.

போரின் இறுதிக்காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் சில உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் சரணடைவதற்கான ஏற்பாடுகளில் சர்வதேச ஊடகவியலாளர் மேரி கொல்வினுடன் இணைந்து செயற்பட்டவராக பெரிதும் பேசப்பட்டவர், சந்திரகாந்தன்.

ஆனால், அந்த நடவடிக்கைகள் தோல்வியடைய தனக்கான பாதுகாப்பும் மோசமானதாக கூறும் சந்திரகாந்தன், யுத்தகாலத்தில் 13 தடவைகள் போர்

**கட்சிக்காக உயிர் கொடுத்த சந்திரநேரு மற்றும் யோசப் பரராசசிங்கத்தை கட்சி புறக்கணிக்கிறது**

நடந்த இடத்துக்கு சென்றுவந்த தான், அதற்கான முயற்சிகளினால் பல இன்னல்களை சந்தித்ததாக கூறுகிறார்.

ஆனால், அந்தக் காலகட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்த ஒருசில உறுப்பினர்களைத்தவிர ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் போரில் அகப்பட்டிருந்த வேளையில் பார்வையாளர்களாக இருந்ததாக அவர் குற்றஞ்சாட்டுகிறார். அதுமாத்திரமன்றி, மக்களையும் போராளிகளையும் உயிர்



பிழைக்கச் செய்ய தான் மேற்கொண்ட முயற்சிகளால் தனக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துவிடும் என்ற தயக்கம் காரணமாகவே கட்சியில் சிலரால் தான் ஓரங்கட்டப்படுவதாக தான் சந்தேகிப்பதாகவும் அவர் கூறினார்.

ஆயுதக்குழுக்கள் அம்பாறை மாவட்டத்தில் செல்வாக்குச் செலுத்திய காலத்தில் அங்கு கட்சியை வளர்த்த தானும் தனது ஆதரவாளர்களும், இன்று புறக்கணிக்கப்படுவதாக அவர் கூறுகிறார். துப்பாக்கிகள் அங்கு ஆட்சி செய்த காலத்தில் கட்சியின் அனைத்துப் பணிகளையும் தானே அங்கு செய்ததாகக் கூறும் அவர், இன்று தம்மை கேட்காமல், கலந்தாலோசிக்காமலேயே அங்கு அனைத்தும் நடப்பதாகவும், அதனால், கட்சியில் ஆரம்பம் முதல் விசுவாசிகளாக இருந்தவர்கள் விரக்தியில் உள்ளதாகவும் கூறுகின்றார். இதன் காரணமாகவே அம்பாறை மாவட்டத்தில் தற்போது தமிழ் அரசுக் கட்சிக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

கடந்த உள்ளூராட்சி சபை தேர்தல் காலத்தில் தான் பல தடவைகள் கட்சியின் தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்ட போதும் அவர்களிடம் இருந்து எந்தவிதமான பதில் தொடர்புகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் தமிழ் அரசுக் கட்சியின் வசம் இருந்த அம்பாறை மாவட்டம் மற்றுமொரு கட்சிக்கு தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டுவிட்டது போன்ற ஒரு நிலை உருவானதும் உள்ளூ ராட்சி சபை தேர்தல் பின்னடைவுக்கு ஒரு காரணம் என்றும் அவர் கூறினார்.

இதற்கு முன்னதாக நடந்த உள்ளூராட்சி தேர்தலில் தானே முன்னின்று கட்சி நடவடிக்கைகளை கவனித்ததாகவும், அது அப்போது கட்சிக்கு நல்ல வெற்றியை ஈட்டிக் கொடுத்தது என்றும் சந்திரகாந்தன் சுட்டிக் காட்டுகிறார்.

பணம் உள்ளவர்களுக்கே கட்சியில் இடம் என்ற ஒரு நிலை அங்கு காணப்படுவதாகவும், இளைஞர்களுக்கு அங்கு போதிய இடமளிக்கப்படவில்லை என்றும் கூறும் அவர் அம்பாறையின் 4 பிரிவுகளிலும், கட்சியின் அதிகாரம் அடிமட்டத்துக்கு போகவில்லை என்றும்,



அடுத்த தலைமுறைக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான தனது தந்தை சந்திரநேரு அவர்கள் படுகொலை செய்யப்பட்டு கடந்த 13 வருடங்களில் அவருக்கு எந்தவிதமான நினைவுகூரலும் கட்சியால் செய்யப்படவில்லை என்று கூறும் அவர், அதேபோல படுகொலை செய்யப்பட்ட கட்சியின் மற்றுமொரு மூத்த பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராசசிங்கம் அவர்களையும் கட்சி புறக்கணிப்பதாக கூறுகிறார். அவரது படுகொலை தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடக்கும் நிலையில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் எத்தனை தடவை நீதிமன்றத்துக்கு சென்றார்கள்? என்றும் அவர் கேள்வி எழுப்புகிறார்.

உண்மையில் கட்சியின் வளர்ச்சிக்காக உழைத்து, உயிர் நீத்தவர்களை கட்சி மறந்துவிட்டது என்றும் அவர்களது அர்ப்பணிப்புகள் கண்டுகொள்ளப்படவில்லை என்றும் சந்திரகாந்தன் குற்றஞ்சாட்டுகிறார்.

# நீதிபதிகள் இடமாற்றம்



வருடாந்த இடமாற்றத்தின் கீழ் மூன்று ஆண்டுகள் ஒரே மாகாணத்தில் மேல்நீதிமன்ற அமர்வில் கடமையாற்றியதன் அடிப்படையில் நாடு முழுவதும் மேல்நீதிமன்ற நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டு வருகின்றது.

மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்ற சிறிநிதி நந்தசேகரன், கல்முனை மேல்நீதிமன்ற நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சட்டமா அதிபர் திணைக்கள மூத்த அரச சட்டவாதியான டெனிஸ் சாந்தன் சூசைதாஸன், கல்முனை மற்றும் மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்களின் நீதிபதியாக நியமிக்கப்படுகிறார். அத்துடன், அவருடன் இணைந்து கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி சிறிநிதி நந்தசேகரனும் கடமையாற்றவுள்ளார்.

இதனடிப்படையில், யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்றுள்ளார்.

**காரைதீவு நிருபர் சகா**

மேலும், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக மாற்றம் பெற்றுள்ளதுடன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்றுள்ளார்.

# பரசுராமபூமி வெளியீட்டு விழா

மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் பௌர்ணமி தின கலை இலக்கிய நிகழ்வின் முப்பத்தி மூன்றாவது நிகழ்வாக வி.மைக்கல் கொலினின் பரசுராம பூமி சிறுகதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 20-05-2018 ஞாயிறு மாலை 4.00 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்டோர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்பணி. யு.யு. நவரட்ணம் அடிகளார் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திரு.மாணிக்கம் உதயகுமார் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கிறார்.
நூலின் முதல் பிரதியை மட்டக்களப்பு




தமிழ்ச் சங்க பொருளாளர் சைவப்புரவலர் திரு.வி.றஞ்சிதமூர்த்தி அவர்கள் பெற்றுக் கொள்வார்.

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 02

## 1959ம் ஆண்டின் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயமும் அதன் விளைவுகளும்



1946ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின்போது அப்போதைய மட்டக்களப்பு மாவட்டமானது கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில் ஆகிய ஐந்து தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பெற்றன என்பதையும் இத்தேர்தல் தொகுதிகளின் அடிப்படையிலேயே 1947, 1952, 1956ஆம் ஆண்டின் பாராளுமன்ற பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன என்பதையும், தற்போது “அம்பாறைமாவட்ட தமிழர்கள்“ என அடையாளப்படுத்தப்பெறுவோர் அன்று பிரதானமாக வாழ்ந்த கல்முனை, பொத்துவில் ஆகிய இரு தேர்தல் தொகுதிகளையும் இம் மூன்று தேர்தல்களிலும் பாராளுமன்றத்தில் முஸ்லிம் உறுப்பினர்களே பிரதிநிதித்துவப்படுத்தினார்கள் என்பதனையும் கடந்த வாரம் பார்த்தோம்.

1946ம் ஆண்டிற்கு பின்னர் அடுத்த தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயம் 1959ம் ஆண்டு நடைபெற்றது. 1959ம் ஆண்டின் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது அப்போதைய மட்டக்களப்பு மாவட்டமானது கல்குடா, மட்டக்களப்பு (இரட்டையங்கத்தவர் தொகுதி) பட்டிருப்பு, அம்பாறை, கல்முனை, நிந்தவூர், பொத்துவில் ஆகிய ஏழு தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பெற்றது.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான பட்டிப்பளையாற்றுப் பிரதேசத்தில் கல்லோயாத் திட்டத்தின் கீழ் வெளிமாவட்டங்களில் இருந்து குடியேற்றப்பெற்ற சிங்களவர்கள் பல்கிப்பெருகி அவர்களின் நன்மை கருதி அவர்களுக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை எதிர்காலத்தில் வழங்கும் வகையில் சிங்களப் பெரும்பான்மைத் தொகுதியாக “அம்பாறை“ என்னும் தேர்தல் தொகுதி உருவாக்கப்பெற்றது.


முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட “நிந்தவூர்“ தொகுதியும் புதிதாக உருவாகப்பெற்றது.

புதிய அம்பாறைத் தொகுதியானது அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய தொகுதிகளை விட நிலப்பரப்பில் கூடியவாறு உருவாக்கப்பட்டது. இதனால், சிங்களவர்கள் இத்தொகுதியில் மென்மேலும் குடியேறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பெற்றது. அம்பாறை தேர்தல் தொகுதி உருவாகக் காரணம் கல்லோயாத் திட்டமேயாகும்.

இக் கல்லோயா நீர்ப்பாசன திட்டத்தின் முக்கிய பகுதியாக சேனநாயக்கா சமுத்திரத்தை உருவாகக் காரணமாயிருந்து இத் திட்ட நிறைவேற்றத்திற்கு பாரிய பங்களிப்பு செய்தவர் காலஞ்சென்ற கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஆவார். அப்போது அவர் கல்முனைத் தொகுதியின் ஐ.தே.க பாராளுமண்ற உறுப்பினராக இருந்தவர். இவருக்குத்தான் தமிழரசுக் கட்சி 1956ம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சியின் வேட்பாளர் நியமனத்தை வழங்கியிருநந்தது. அத்தேர்தலில் கல்முனைத் தொகுதியின் தமிழர்களுடைய வாக்குகளையும் கொண்டு அவர் வெற்றியும் பெற்றிருந்தார். அப்போது காரைதீவு அப்போதைய கல்முனை தொகுதியில் அடங்கியிருந்தது.

சுகந்திர இலங்கையின் போது “விந்தனைப்பற்று“ பிரதேசம் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்கு மாகாணத்தில் அமைந்திருந்தது. இது பின்னர் மொனராகல மாவட்டத்துடன் இணைக்கப்பெற்று ஊவா மாகாணத்தின் கீழ் கொண்டுவரப்பெற்றதுடன் விந்தனைப்பற்று தெற்கு (பதியத்தலாவ), விந்தனைப்பற்று வடக்கு (மகாஓயா) என இரு பிரிவுகளாக ஆக்கப் பெற்றது. 1959இல் புதிதாக “அம்பாறை“ தேர்தல் தொகுதி உருவாக்கப்பெற்ற போது மேற்கூறப்பெற்ற விந்தனைப்பற்று இத்தொகுதியினுள் அடங்கவில்லை.

அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியை அதாவது 1947-1959 வரை அப்போதைய கல்முனை, பொத்துவில் தொகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்திய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு



ஆட்சியில் உள்ளோரிடமிருந்த அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் தங்கள் தேர்தல் வெற்றிகளை உறுதிசெய்யும் வகையிலே இப் பிரதேசத்தில் வாழ்ந்த தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்காத வகையிலேயும் புதிதாக 1959இல் உருவான கல்முனை, பொத்துவில், நிந்தவூர் தொகுதிகளின் எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பெற்றன.

அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய தேர்தல் தொகுதிகளை விட நிலப்பரப்பில் கூடியதாக அரசினால் அம்பாறை சிங்கள பெரும்பான்மைத் தொகுதி புதிதாக உருவாக்கப்பெற்ற அதேவேளை புதிய கல்முனை, நிந்தவூர், பொத்துவில் ஆகிய தொகுதிகள் அப்பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகளினால் திட்டமிட்டு முஸ்லிம் பெரும்பான்மையாக வரக்கூடியவாறு எல்லைகள் வகுக்கப் பெற்றன.

இத் தொகுதிகள் யாவும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வரக்கூடியவாறு உருவாக்கப் பெற்றமை. இப்பிரதேச தமிழ் மக்களுக்கு இப்பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகளினால் இழைக்கப்பெற்ற அரசியல் பாரபட்சமாகும். மறைந்த எம்.எஸ். காரியப்பர் அவர்கள் தமிழரசுக் கட்சியுடன் நல்ல உறவை வைத்துக் கொண்டுதான் தமிழர்களுக்கு பாரபட்சமான இப்படியான அரசியல் செயற்பாடுகளை மேற்கொண்டார்.

1959 தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது மட்டக்களப்பில் தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் தேர்ந்தெடுக்கப் பெறகூடியவாறு புதிய மட்டக்களப்பு தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பெற்றது. அதேபோல் முஸ்லிம் உறுப்பினர் ஒவ்வொருவரும் தமிழ் உறுப்பினர் ஒருவரும் தெரிவு செய்யப் பெறக்கூடியவாறு திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பெற்றது. ஆனால் இதேவாய்ப்பு அப்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் வாழ்ந்த தமிழர்களுக்கு அதாவது தற்போதைய அம்பாறை மாவட்ட தமிழர்களுக்கு வழங்கப்பெறாது அரசியல் ரீதியாக புறக்கணிக்கப்பெற்றார்கள். இப்பிரதேச தமிழ் மக்களுக்கென பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்காத வண்ணம் 1959இல் புதிய பொத்துவில், நிந்தவூர், கல்முனை தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைத் தங்கள்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்**

வசதிக்கேற்றவாறு வகுத்துக் கொள்வதில் இப்பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகள் வெற்றிகண்டனர். இதற்கு காரணம் இப்பிரதேச தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தக்கூடியவாறு தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணய யோசனைகளை இப்பிரதேச தமிழ் பிரபுக்களான முன்னால் மல்வத்தை கிராமசபைத் தலைவர் காலஞ்சென்ற செல்லத்துரை, கல்முனையை சேர்ந்த காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மாஸ்டர் ஆகியோர் தமிழரசுக் கட்சியிடமும் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணய ஆணைக்குளுவிடம் சமர்ப்பித்திருந்த போதிலும் கூட தங்கள் கட்சி அரசியல் நலன்களுக்காகவும் பாராளுமன்ற அரசியல் நலன்களுக்காகவும் எம்.எஸ். காரியப்பருடன் முகத்தை முறித்துக் கொள்ளவிரும்பாத தமிழரசுக்கட்சி, தமிழ் பிரமுகர்களும் சமர்ப்பித்த யோசனைகளை ஆதரிக்காது எம்.எஸ். காரியப்பருக்கு அனுசரணையாகவே நடந்துகொண்டது.

1959இல் உருவான புதிய பட்டிருப்பு மற்றும் கல்முனை ஆகிய தொகுதிகளில் எதிர்காலத்தில் தங்கள் தேர்தல் வெற்றிகளை உறுதி செய்யும் நோக்கில் எஸ்.எம். இராசமாணிக்கமும் (முன்னால் பட்டிருப்பு தொகுதி பா.உ) எம்.எஸ் காரியப்பரும் (முன்னால் கல்முனை தொகுதி பா.உ) ஒருத்தருக்கு ஒருத்தர் அனுசரணையாக நடந்து கொண்டனரே தவிர இப்பிரதேச தமிழர்களின் அரசியல் எதிர்காலம் அக்கறையோடு கவனிக்கப்பெறவில்லை. இதனையிட்டு அப்போது தமிழரசுக்கட்சி அக்கறை செலுத்தாதது இப்பிரதேச மக்களுக்கு அதாவது தற்போதைய அம்பாறை மாவட்ட தமிழர்களுக்கு அக்கட்சி இழைத்த மாபெரும் அரசியல் தவறாகும். இத்தவறினால் “அம்பாறை மாவட்ட தமிழர்கள்“ சுதந்திர இலங்கையில் 1947ம் ஆண்டிலிருந்து பின்னாளில் 1976ம் ஆண்டின் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள்நிர்ணயத்தின் போது உருவான புதிய பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக உருவாக்கப்பெற்று அதன் அடிப்படையில் நடந்த 1977 பாராளுமன்ற பொது தேர்தலில் பொத்துவில் தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராக காலஞ்சென்ற ம. கனகரட்ணம் அவர்கள் தெரிவுசெய்யப் பெறும்வரை சுமார் 30 ஆண்டுகள் (1947-1977) தங்களுக்கென்று தங்களால் தெரிவு செய்யப்பெற்ற தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை கொண்டிருக்கவில்லை.

1959இல் சுமார் 35000 முஸ்லிம்களுக்காக மட்டக்களப்பு தொகுதி இரட்டையங்கத்துவ தொகுதியாக்கப்பெற்றது. இந்த வாய்ப்பு



SM Rasamanickam

அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியில் வாழ்ந்த (தற்போதைய அம்பாறை மாவட்ட தமிழர்களுக்கு) சுமார் 45000 தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை. சுமார் 45000 சிங்களவர்களுக்கு ஒரு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் அம்பாறை தேர்தல் தொகுதி மூலமும் சுமார் 90000 முஸ்லிம்களுக்கு மூன்று பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கல்முனை, நிந்தவூர், பொத்துவில் ஆகிய தொகுதிகள் மூலமும் கிடைக்கப்பெற சுமார் 45000 தமிழர்கள் அரசியல் பிரதிநிதித்துவம் இன்றி நிராதரவாக விடப்பெற்றார்கள்.

உண்மையில் என்ன நடந்திருக்கவேண்டுமென்றால் 1959இல் உருவான கல்முனை, நிந்தவூர், பொத்துவில் ஆகிய மூன்று தொகுதிகளில் ஒற்றை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக தமிழர்களுக்கு ஒரு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் வழங்க ஆவன செய்யப்பெற்றிருக்க வேண்டும் அல்லது இப்பிரதேசத்தில் இருந்து தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்படக்கூடியவாறு தமிழ் பெரும்பான்மைத் தேர்தல் தொகுதி ஒன்றிற்காக எல்லைகள் வகுக்கப்பெற்றிருக்க வேண்டும். ஆனால் தமிழரசுக்கட்சி இதில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. தமிழரசுக் கட்சியை பொறுத்தவரை இப்பிரதேச தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் முன்னேற்றங்களை விட தங்கள் கட்சிக்கென பாராளுமன்ற பிரதிநிதிகளைப் பெற்றுக் கொள்வதில் தான் அக்கறையாக இருந்தார்கள். மக்கள் நலனை விட கட்சி நலன்களுக்கே முன்னுரிமை அளித்தார்கள். இப்பிரதேச தமிழ் மக்களுக்கு இப்பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகளால் திட்டமிட்டு பாரபட்சம் இழைக்கப்பட்ட வேளைகளிலெல்லாம் தமிழரசுக்கட்சி தமது கட்சி நலன்களுக்காக பாராமுகமாக நடந்து கொண்டமை இப்பிரதேச தமிழ் மக்களின் வரலாற்றில் வேதனையுடன் பதிவு செய்யப்பெற வேண்டிய கசப்பான அனுபவங்களாகும். யாழ் மேலாதிக்கவாத சிந்தனைகளால் வளர்த்தெடுக்கப்பட்ட தமிழரசுக்கட்சிக்கு கிழக்கு மாகாண தமிழர்கள் மீது உண்மையான வாஞ்சை கிடையாது. அம்பாறை மாவட்ட தமிழர்கள் மீது அக்கட்சிக்கு ஆத்மார்த்தமான அக்கறை கிடையாது. அக்கட்சிக்கு தேவைப்பட்டதெல்லாம் பாராளுமன்றத்தில் தங்கள் கட்சிக்கான ஆசனங்களின் எண்ணிக்கையை கூட்டிக் கொள்வதற்காக இம்மக்களின் வாக்குகள் மட்டுமே. இன்றும் கூட இதுதான் தொடர் கதையாக தொடர்கிறது.

(தொடரும்....)




# “மட்டக்களப்பின் தலைநகராகும் காரைதீவு!” வான்கூன்சின் அறிக்கையிலிருந்து

இதென்ன புதுக்கதை! எப்போது நிகழ்ந்தது இது? யார் காரைதீவை மட்டக்களப்பின் தலைநகர் ஆக்கியது? என்றெல்லாம் பதற்றம் கொள்ள வேண்டாம். கொஞ்சம் மூச்சை இழுத்து விட்டு ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். என்ன ஏதென்று போய் ஆறுதலாக விசாரிப்போம்.

இலங்கை ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த காலப்பகுதி அது. அப்போது (1664 - 1675) இலங்கையின் டச்சு ஆளுநராக பதவி வகித்தவர், ரைக்லொவ் வொல்கேர்ட்ஸ் வான்கூன்ஸ் (Rijcklof Volckertsz. van Goens). அவர் பதவியா என்று அழைக்கப்பட்ட இந்தோனேசியாவின் ஜகார்த்தாவுக்கு, 1675இல் ஆளுநர் நாயகமாக இடமாற்றம் பெற்றுச் சென்றார். அப்போது அவர் எழுதிச் சென்ற இலங்கை பற்றிய அறிக்கையில் மட்டக்களப்பு பற்றிய விரிவான சித்திரம் வருகின்றது. அதில் சில குறிப்புகள் வரலாற்று ரீதியாக முக்கியமானவை.

“மட்டக்களப்பில், காலம் காலமாக, மூன்று திசாவைகள் அல்லது மூன்று பண்டாரங்கள் ஆண்டு வந்த மூன்று பெரும் பிரிவுகள் இருக்கின்றன. நாங்கள் இன்று வசதிக்காக ஒரு பிரிவாக ஆண்டாலும், அவை மூன்றும் இன்றும் வழக்கில் இருக்கின்றன. கல்லாறு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று என்பன அவை. கல்லாற்றின் கீழ், போரைதீவு, எருவில், மண்முனை, ஏறாவூர் எனும் நான்கு பற்றுகளும், சம்மாந்துறையின் கீழ் சம்மாந்துறை, கரைவாகு எனும்



இரு பற்றுகளும், அக்கரை ஒரு பற்று என்றும், மொத்தம் ஏழு பற்றுகளாலானது மட்டக்களப்பு.” என்கிறார் வான்கூன்ஸ். தொடர்ந்து, ஏறாவூரின் வட எல்லை நட்டூர் ஆறு (இன்று கல்குடாவில் கடலில் கலக்கும் மாதுரு ஓயா), அக்கரைப்பற்றின் தென் எல்லை சங்கமன்கண்டி என்றும் அவர் எல்லை வகுக்கும் பாங்கு, பழைய மட்டக்களப்புக்

## வரலாற்றின் புன்னகை எத்தனை விசித்திரமானது!


தேசத்தின் “பற்று” நிர்வாக முறைமை, அதன் வடக்கு - தெற்கு எல்லைகள் எப்படியெல்லாம் மாற்றம் கண்டிருக்கக் கூடும் என்பது பற்றி நம்மை மேலும் சிந்திக்கவைக்கின்றது.

நாம் இனி முக்கியமாகக் கவனிக்கவேண்டிய வான்கூன்சின் வரிகளை கீழே அப்படியே தருகிறோம். “புலியனின் தீவும் அதற்கு அருகிலுள்ள தீவும், மண்முனைப் பிரிவில் அடங்குபவை. புலியனின் தீவின் உட்புறமாக, ஆற்றிலிருந்து பீரங்கி சுடும் தூரத்தில் பழைய போர்த்துக்கேயரின்



கோட்டை அமைந்துள்ளது. தற்போது வெளிப்புறம் சேர்த்துக்கட்டப்பட்டு, அது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது........... ஆனால் இங்குள்ள காற்று உலர்வாக இல்லை. அருகிலுள்ள சதுப்புநிலங்கள், குளங்களால், காற்று கெடுமணம் கொண்டதாக இருக்கிறது. எரிபொருளும் நீரும் வெளியிலிருந்து தான் கொண்டு வர வேண்டும். இதெல்லாம் ஒரு மாகாணத்தின் தலைநகராக இருப்பதற்கு இக்கோட்டையைப் பொருத்தமற்றதாக ஆக்குகின்றன.

எனவே சுத்தமான – பொருத்தமான ஒரு இடத்தைத் தேடினால், “சொரட்ஜன் கொண்டேவே”யை விட்டால் வேறு இடமில்லை. கடற்கரைக்கு அருகில் இருக்கிறது. களப்புக்கும் அருகில்




இருக்கிறது. முழுப்பிராந்தியத்துக்கும் நடுவில் அமைந்திருக்கிறது. வற்றாத நன்னீர் ஆறு ஓடுகின்றது. எப்போதும் தூய்மையான தண்ணீர் கிடைக்கக்கூடிய இடம். மிகப்பரந்த நன்னிலங்கள் உண்டு. இலங்கையில் வேறெங்கும் கிடைக்கக்கூடிய புத்துணர்வூட்டும் காற்று.........எல்லாவற்றுக்கும் மேல், மோசமான தெற்குப் பருவகாலத்தில், எவ்வித சிக்கலும் இன்றி, எத்தனை நாட்களும் இங்கு கப்பல்கள் தரித்து நிற்கலாம். அதுவும் பழைய யாழ்ப்பாணப்பட்டினம் போல கரையிலிருந்து துப்பாக்கி சுடும் தூரத்தில்.”

இந்த விவரணத்துக்குப் பின் ‘சொரட்ஜன் கொண்டேவே’யில் அமைக்க இருக்கும் கோட்டை பற்றிய விவரங்கள், கோட்டைக்கல்லாற்றில் இருக்கின்ற இடச்சு வீரர்களை இங்கு வரவழைப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியெல்லாம் வான்கூன்ஸ் விரிவாக எழுதியிருக்கிறார்.

மட்டக்களப்பின் தலைநகரை “சொரட்ஜன் கொண்டேவே”க்கு இடமாற்றுகின்ற திட்டத்தை வான்கூன்சின் இந்த அறிக்கையில் மட்டுமே நாம் அறிகிறோம். இது பற்றி அதற்கு முன்போ, பின்போ வேறெந்த ஐரோப்பிய ஆவணங்களும் விரிவாகப் பேசவில்லை. எனவே புளியந்தீவில் இருந்த தலைநகரை வேறொரு இடத்துக்கு மாற்றுவது, வான்கூன்சே முன்னெடுத்த திட்டம் என்பது தெரியவருகிறது. அவர் இடமாற்றம் பெற்றுச் சென்றபின்னர், அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

புலியன் என்ற வேடர் தலைவனின் தீவு, பின்னாளில் புளியந்தீவு ஆனது என்று பல வாய்மொழி மரபுகள் கூறினாலும், அதை


**மைங்கணான் மகிழறிவன்**

உறுதிப்படுத்த நம்பகமான சான்றுகள் கிடைக்கவில்லை. வான்கூன்சின் இந்த அறிக்கை அதை உறுதிப்படுத்தப் போதுமானதாக இருக்கிறது. அடுத்து,

## “கரச்சைக் காரைதீவு” எனும் பெயருக்கும் “சொரச்சன் கொர்தீவே”க்கும் தொடர்புள்ளதா என்றும் ஆராய வேண்டும்.

“சொரட்ஜன் கொண்டேவே” (Soratjan Condave) என்று வான்கூன்ஸ் குறிப்பிடும் இடம் வேறு எதுவும் அல்ல. இன்றைய காரைதீவு தான். காரைதீவைத்தான் மட்டக்களப்பின் தலைநகராக மாற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார் அவர். சொரட்ஜன் கொண்டேவே தான் காரைதீவா? அந்தப்பெயரே ஒழுங்காக வாய்க்குள் நுழையவில்லை. எந்த ஆதாரத்துடன் அதுதான் காரைதீவு என்று அடித்துச் சொல்கிறாய் என்று நீங்கள் கேட்பது விளங்குகின்றது.

அதைக் கண்டுபிடிக்க நாம், ஒல்லாந்து வரைபடங்களிடம் போகவேண்டும். யாழ்ப்பாணப்பட்டினம், கொழும்பு, காலி, சோரொட்ஜன் கொண்டேவே ஆகிய நான்கு இடங்களையும் இலங்கையின் நான்கு திசைகளிலுமிருந்த முக்கிய கோட்டைகளாகக் குறிப்பிட்டு, ஒல்லாந்தர் வரைந்துள்ள 1600களின் வரைபடமொன்று நமக்குக் கிடைக்கின்றது. பதினேழாம் நூற்றாண்டில் வரையப்பட்ட சில இடச்சு வரைபடங்களில் “சொரட்ஜன் கொண்டேவே” எனும் பெயர், சாய்ந்தமருதுக்குத் தெற்கே, வம்மிமடுக்கு வடக்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. வம்மிமடு என்பது இன்றைய நிந்தவூரின் பழைய பெயர். இன்னொரு வரைபடத்தில் சாய்ந்தமருதுக்கும் பனிச்சைவெட்டுவானுக்கும் இடையில் சொரொட்ஜன் கொண்டேவே குறிக்கப்பட்டுள்ளதால், அது காரைதீவு




தான் என்பதற்கான சான்று இன்னும் வலுக்கின்றது.

“சொரொட்ஜன் கொண்டேவே” என்ற பெயருக்கும் இன்று உள்ள காரைதீவு என்ற பெயருக்கும் என்ன சம்பந்தம் என்பதில் தெளிவில்லை. டச்சு நாவிலோ, அல்லது அதை ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்த பிரித்தானியக் கைகளிலோ சரியான பெயர் சிதைந்திருக்க வாய்ப்புகள் அதிகம். காரைதீவைத்தான் “கோர்தீவே” என்று எழுதி அது கொண்டேவே என்று தவறாகப் படியெடுக்கப்பட்டதா என்று எண்ணத்தோன்றுகின்றது. அதிலுள்ள “சோரொட்ஜன்” அல்லது “சவுரட்ஜன்” என்ற முன்னொட்டு இன்னும் குழப்பத்தை ஊட்டுவதால், அதன் சரியான தமிழ் வடிவத்தை இனங்காண்பதற்குக் கடினமாக உள்ளது. காரைதீவிலுள்ள “கரைச்சை” நீர்நிலையால் வரக்கூடிய “கரச்சைக் காரைதீவு” எனும் பெயருக்கும் “சொரச்சன் கொர்தீவே”க்கும் தொடர்புள்ளதா என்றும் ஆராய வேண்டும். காரைதீவு மக்கள், அதையொத்த உச்சரிப்பைக் கொண்ட வேறு ஏதும் இடங்கள் இன்று தம்மூரில் எஞ்சியிருக்கிறதா என்று தேடிப்பார்க்கலாம்.

சொரொட்ஜன் கொண்டேவேயின் அமைவிடத்தை இன்னொரு விதமாகவும் சிந்தித்துப் பார்க்கலாம். காரைதீவின் வடக்கு அந்தத்திலுள்ள ஊர், மாளிகைக்காடு. அப்பகுதியில் இருந்த மட்டக்களப்பு வன்னிமையின் மாளிகை ஒன்று, பின் பாழடைந்து காடு மண்டியது என்பது ஐதிகம். அது மாளிகை அல்லாமல், சொரட்ஜன் கொண்டேவே கோட்டையாக இருப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு.

எது எப்படியோ, புளியந்தீவைக் கைவிட்டு, காரைதீவைத் தலைநகராக்கும் ஒல்லாந்தரின் திட்டம் பலித்திருந்தால், இன்று காரைதீவே மட்டுநகர் என்று அழைக்கப்பட்டிருக்கும். இன்றைய மட்டு - அம்பாறை மாவட்டங்கள், அவற்றின் பற்றுகள், அவற்றின் பிரதேச செயலகங்கள் எல்லாம் நாம் எண்ணியிராதபடி எப்படி எப்படி எல்லாமோ மாற்றம் கண்டிருக்கும். எத்தனையோ சம்பவங்கள், சரித்திரங்கள் எதிர்பாராதபடியெல்லாம் நிகழ்ந்திருக்கும். இந்த வரலாற்றின் புன்னகை தான் எத்தனை விசித்திரமானது!



# தாதியர் பணி என்பது அடிமைத் தொழிலல்ல

## தாதியரின் தொழில் வைத்தியருக்கு கீழே வேலை பார்ப்பதல்ல

ஒவ்வொருமுறை உயர்தர பரீட்சை முடிவு வந்ததும், என்னிடம் ஒருவராவது அடுத்தது என்ன செய்யலாம் என்று கேட்பதுண்டு.

இப்படிக்கேட்ட பலருக்கு நான் சொல்கிற முதல் தெரிவு தாதியர் கற்கைநெறி. இப்படி பலருக்குச் சொன்னாலும், இதுவரை யாரும் நான் சொல்லி இதை செய்யவில்லை.



நேர்ஸிங்கா? என்று ஒரு நக்கலாக கேட்டுவிட்டு, மறுத்துவிடுவார்கள். இப்படிச் சொன்ன அநேகமானோர் கடைசியில் ஏதாவது ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் பணத்தைக்கொட்டி டிக்கிரி எடுத்துவிட்டு, வேலைக்கு அலைந்துகொண்டிருக்கிறார்கள்.

### இதற்கான காரணம் என்ன?

வைத்தியசாலை என்றாலே வைத்தியர்தான் என்ற மனநிலை. பலர் இதை விரும்பாததற்குக்காரணம், தாதி என்றாலே அழுக்கான வேலை செய்யவேண்டும், வைத்தியரின் கீழே அடிமையாக வேலை செய்யவேண்டும் என்று நினைப்பதாகும்.

இதனாலேயே சில வருடங்களுக்கு முன் யாழ்ப்பாண தாதிய கற்கைநெறிக்கு போதிய மாணவர்கள் இல்லாமல் குறைந்தளவானோரோடு பயிற்சிநெறி ஆரம்பித்ததை நானறிவேன் (இப்போதைய நிலை தெரியவில்லை).

உண்மையில் இந்த தாதியர்கள் என்னமாதிரியான வேலைகளைச் செய்கிறார்கள்?

### தாதியர் மருத்துவம் தொழில் பங்கீடு

ஒருநோயாளரின் கவனிப்பில், மருத்துவருக்கென சில கடமைகள் இருக்கின்றன, தாதியருக்கென வேறாகச் சில கடமைகள் இருக்கின்றன.

மருத்துவர்களின் கடமை நோய் நிலைமையை ஆராய்ந்து மருத்துவத்தை முடிவு செய்வதாகும். இவ்வாறு முடிவு செய்த மருத்துவத்தை நடைமுறைப்படுத்துவதில் தாதியரின் கடமை முக்கியமானது.

உதாரணத்துக்கு, வைத்தியர் மருந்துகளை பரிந்துரைத்தபின், அந்த மருந்துகளை பரிந்துரைத்தபடி கொடுப்பது தாதியர்கள்தான்.

அதுபோல் வைத்தியர்கள், என்ன மாதிரியான பரிசோதனைகள் என்று முடிவெடுத்தபின், அவற்றைச் செய்விப்பதில் தாதியரின் கடமை முக்கியமானது. உதாரணத்துக்கு ஒரு இரத்தப்பரிசோதனை ஒன்று செய்ய முடிவெடுத்தபின், நோயாளியில் இரத்தத்தை எடுத்து சரியான முறையில் பரிசோதனைக்கூடத்துக்கு அனுப்பி வைப்பது இந்த தாதியர்கள்.

சிவச்சந்திரன் சிவஞானம்

அதுதவிர ஒரு வைத்தியசாலை விடுதியின் முகாமைத்துவத்திலும் தாதியர்களின் பொறுப்பு முக்கியமானது. விடுதியில் இருக்கும் மருத்துவ உபகரணங்களை சரியாக பேணுதல், மருத்துகளை சரியாகப் பேணுதல் என்பவையும் இந்த தாதியர்களின் கடமைதான்.

அதைவிட முக்கியமான இன்னொரு கடமை, நோயாளியின் நோய் நிலமையை கண்காணித்து வைத்தியருக்கு அறிவிப்பது இவர்களின் முக்கிய பொறுப்பு.

உதாரணத்து, ஒரு நோயாளிக்கு இரத்தப்போக்கு ஏற்படச் சந்தர்ப்பம் உள்ளது என்றால், அவரை குறிப்பிட்ட இடைவெளிநேரத்தில் பரிசோதித்து கொண்டிருந்து, இரத்தப்போக்கு ஏற்படுவதற்கான அறிகுறி தெரிந்ததும், வைத்தியருக்கு அறிவிப்பதும் இந்த தாதியர்களின் முக்கிய கடமை.

இதுதவிர நோயாளியின் சுத்தம் பேணுதல், வைத்தியசாலை விடுதியின் சுத்தம் பேணுவதும் இவர்களின் முக்கிய பொறுப்பாகும்.

### சத்திரசிகிச்சையில் தாதியர் வகிபாகம்

சத்திரசிகிச்சை நேரத்திலும் இவர்களின் கடமை மிக முக்கியமானது. ஒரு சத்திரசிகிச்சை செய்யும்போது, அதற்குத் தேவையான உபகரணங்களைக் கொடுத்து, சத்திரசிகிச்சை செய்ய உதவுவதும் தாதியின் கடமை.



ஆகவே தாதியர் தொழில் என்பது நீங்கள் நினைப்பதுபோல விரும்பத்தகாத தொழில் அல்ல. இது ஒரு வைத்தியரோடு சேர்ந்து உதவியாக இருந்து ஒரு நோயாளியைக் கவனிப்பதேயன்றி, வைத்தியருக்கு கீழே வேலை செய்வதல்ல.

இந்தத் தாதியர் கற்கை நெறியினை நான் பரிந்துரைப்பதற்கான காரணம், பயிற்சி நெறியில் சேர்ந்த ஆரம்பத்திலிருந்தே உங்களுக்கு சம்பளம் கிடைக்கும். சம்பளத்தோடேயே படிக்கலாம். படித்து முடித்ததும் கட்டாயம் வேலை நிச்சயம்.

சம்பளமும் ஒரு பட்டதாரியைவிட அதிகம். இந்த வசதியெல்லாம், தாதியர் பாடசாலையில் கற்பவர்களுக்குத்தான். அவர்களுக்கு இறுதியில் டிப்ளோமா கிடைக்கும்.
(இப்போது, உயர்தர வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையிலும் பல்கலைக்கழகங்களில் தாதியர் கற்கை நெறிகள் இருக்கின்றன. அவர்களுக்கு முடிவில் டிக்கிரி கிடைத்தாலும், படிக்கும்போது சம்பளம் கிடைக்காது.)

ஆகவே, உயிரியல் பிரிவில் உயர்தரம் படித்து போதியளவு வெட்டுப்புள்ளிகள் கிடைக்காதவர்கள், இந்த தாதிய கற்கை நெறியினை தெரிவு செய்வது நல்லது.

பொருளாதார ரீதியாக கஷ்டப்படுபவர்களுக்கு, பல்கலைக்கழகம் செல்வதைவிடவும் இது சிறந்தது என்பேன். டிக்கிரி எடுத்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் பலரைப்பார்த்துள்ளேன். ஆனால் இந்த கற்கைநெறியினை தெரிவு செய்தால் படிக்கும்போதே சம்பளமும், படித்து முடித்த பின் வேலையும் நிச்சயம்.

**ஏதோவொரு பட்டத்தை கற்பதைவிட தாதியர் பயிற்சி பல சாதகங்களை தரும்**

வைத்தியசாலையில் இருந்து சுகமாகி வீடுசெல்லுவதில் இந்த தாதியரின் பங்கும் அளப்பரியது. அடுத்தமுறை வைத்தியசாலையில் இருந்து வீடு செல்லும்போது இவர்களுக்கும் நன்றி சொல்ல மறக்காதீர்கள்.

# மோர்சாப்பிட்டி சாந்தேஸ்வரன் குடும்ப ஞாபகார்த்த மின்னொளி கரப்பந்தாட்டப் போட்டி

மட்டக்களப்பு மாவட்ட கரப்பந்தாட்ட வீரர்களை ஊக்குவிக்கும் நோக்கோடு மோர்சாப்பிட்டி எஸ். சாந்தேஸ்வரன் குடும்ப ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட மின்னொளி கரப்பந்தாட்டப் போட்டியில் வை.எம்.ஏ.சி விளையாட்டுக் கழகம் கல்லடி ஸ்ரீ முருகன் கழகங்கத்தை வெற்றி கொண்டு 2018 ஆம் ஆண்டுக்கான சம்பியனாகத் தெரிவானது.
மட்டக்களப்பு மோர்சாப்பிட்டி வை.எம்.ஏ.சி விளையாட்டுக் கழகத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய சுற்றுப்போட்டியில் மாவட்டத்திலிருந்து 32 கழகங்கள் பங்கு பற்றிய நிகழ்வு சனிக்கிழமை (12) மட்டக்களப்பு பயனியர் வீதியிலுள்ள அதன் மைதானத்தில் நடைபெற்றது.



அணிக்கு 4 பேர் கொண்ட போட்டிகளில் அரை இறுதிப் போட்டிகளுக்கு திராய்மடு சுவிஸ் லயன், மோர்சாப்பிட்டி வை.எம்.ஏ.சி, மங்கிக்கட்டு கதிரவன் மற்றும் கல்லடி ஸ்ரீ முருகன் என்பனவற்றுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் இறுதிச் சுற்றுக்கு வை.எம்.ஏ.சி மற்றும் கல்லடி ஸ்ரீ முருகன் கழகங்கள் தெரிவாகின.

விளையாட்டுக் கழகத்தின் தலைவர் இ. வைரமுத்து தலைமையில் நடைபெற்ற போட்டியில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர் சிவம் பாக்கியநாதன் மற்றும் எஸ். ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சம்பியனாகத் தெரிவான கழகத்திற்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்கினர்.

முதலாம் இடத்தைப் பெற்ற வை.எம்.ஏ.சி விளையாட்டுக் கழகத்திற்கு பரமேஸ்வரி சுப்பிரமணியம் ஞாபகார்த்த சம்பியன் கிண்ணமும், இரண்டாம் இடத்தைப் பெற்ற கல்லடி ஸ்ரீ முருகன் கழகத்திற்கு சோமசுந்தரம் சீவரத்தினம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணமும், மூன்றாம் இடத்தைப் பெற்ற மங்கிக்கட்டு கதிரவன் கழகத்திற்கு ஆறுமுகம் சுப்பிரமணியம் ஞாபகார்த்தக் கிண்ணமும் மற்றும் நான்காம் இடத்தைப் பெற்ற திராய்மடு சுவிஸ் லயன் கழகத்திற்கு சுப்பிரமணியம் சாந்தமலர் ஞாபகார்த்தக் கிண்ணமும் வழங்கப்பட்டன.

போட்டியின் சிறந்த வீரராக வை.எம்.ஏ.சி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஏ.தர்சன் தெரிவானதோடு அவருக்கான வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. இதே கழகத்தின் வீரர்களுள் ஒருவராக வாழைச்சேனை பிரதேச செயலகத்தின செயலாளர் எஸ்.எச் முசமில் கலந்து கொண்டு விளையாடியமை குறிப்பிடத்தக்கது.



# மூதாதையரின் காலடிகள்

## இராஜ இராஜப் பெரும் பள்ளி எனும் வெல்கம் விகாரை நாதனார் கோயில்

தமிழ் நாட்டில் பௌத்தத்தின் தாக்கம் இருந்த காலகட்டத்தில் ஈழத்தின் வடக்கு கிழக்கு தமிழர் வாழும் பிரதேசங்களில் தமிழ் பௌத்தச் செல்வாக்கு இருந்ததற்கான ஆதாரங்கள் காணப் படுகின்றன. அவை சிங்கள பௌத்த பண்பாட்டிலிருந்து வேறுபட்ட ஒரு பண்பாட்டுத் தளம். ஆனால் இன்று அவை தமிழர் அடையாளங்களாக அல்லாமல் சிங்கள அடையாளங்களகவே மாற்றப் பட்டுள்ளமை இனவாத நோக்கு நிறைந்ததத்தே.

பரண வித்தாரன போன்ற தொல் பொருள் பேராசிரியர்கள் வரலாற்று திரிபு வாத்தத்தை மேற் கொண்டனர் என்றே சொல்ல வேண்டும்.

திருகோணமலை வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் சொர்க்கபுரி என்று சொல்லும் அளவுக்கு கல்வெட்டுகளும் தொன்மைக் கால வாழ்வியல் ஆதாரங்களும் கலாசார சின்னங்களும் நிறந்த இடம். மக்கள் பண்டைய காலங்களில் வாழ்ந்த இடங்கள் காடுகளில் மறைந்து கிடக்கின்றன. அந்த வகையில் 1929 ஆம் ஆண்டளவில்



தொல் பொருளியல் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்ட இடம் வெல்கம் விகாரை எனப்படும் இராஜ இராஜப் பெரும் பள்ளியாகும். பௌத்தர்கள் இதனை வில்கம் விகார என அழைத்தாலும் தமிழர்கள் இதனை நாதனார் கோயில் என அழைக்கின்றனர்.

கோயில் போன்ற அமைப்புகளும் விகாரைக்குரிய அழிபாடுகளும் திரவிடக் கட்டிடக் கலை மரபுகளையும் உள்ளடக்கியதாக இந்தக் கட்டிடத் தொகுதி காணப்படுகிறது. அரண்மனை கோயில் விகாரை என மூன்று கட்டிடத் தொகுதியின் அடையாளங்களாக பரவிக் கிடக்கின்றன இங்கு கிடைக்கும் தொல் பொருளியல் சான்றுகள்.



திருகோணமலை நகரத்திலிருந்து சில கல் தொலைவில் இந்த பழைய நகரம் காணப்படுகிறது. யாழ்ப்பாணம் செல்லும் பாதையில் பன்குளத்துக்கு முன்னதாக கன்னியாவைத் தாண்டிப் போகும்போது நாம் இராஜ இராஜப் பெரும் பள்ளியை அடைய முடியும்.



பிராமிக் கல் வெட்டுக்களும் தமிழ் கல்வெட்டுக்களும் இந்த இடத்தின் வரலாற்றுக் காலத்தை உறுதிப்படுத்துகின்றன கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் கட்டப்பட்டு கி.பி இரண்டாம் நூற்றண்டு காலகட்டங்களில் பராமரிக்கப்பட்டு நான்காம் ஐந்தாம் நூற்றாண்டு காலகட்டங்களில் பராமரிப்பு இன்றி அழிபாடுகளைக் கண்டுள்ளமையும் அறிய முடிகிறது.

கி.பி.ஒன்பதாம் நூற்றண்டில் சோழ மன்னர்களின் ஈழம் மீதான படையெடுப்பு திருகோணமலை முழுவதையும் தங்கள் ஆழுகைக்கு கீழ் கொண்டு வந்தமையும் தமிழர் பகுதி எங்கும் அவர்கள் ஆட்சிக்கு சான்றாக கல்வெட்டுக்களும் கட்டிட எச்சங்களுமாக உள்ள இடங்களில் இராஜ இராஜப் பெரும் பள்ளி எனும் நாதன் கோயில் முக்கியம் பெறுகிறது. இங்கு உள்ளது போலவே சேற்று வில்(சேருவாவில ) விகாரையில் உள்ள தமிழ் கல்வெட்டு இராஜ இராஜ சோழன் அதனை புனரமைத்த கதையைக் கூறுகிறது.

இந்த இடத்துக்கு வந்த சோழர்கள் இதனை புனரமைத்து இராஜ இராஜப் பெரும் பள்ளி எனவும் பெயரிட்டு பல வகையான கொடையும் அளித்ததாக பேராசிரியர் பத்மநாதன் தன்னுடைய இலங்கை தமிழ் சாசனங்கள் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இராஜ ராஜசோழன், இராஜேந்திர சோழன் ஆகியோரின் கல்வெட்டுக்களும் சோழப் பிரதானிகளின் கல் வெட்டுக்களும் இதில் அடங்கும். இங்கு பதினாறு கல் வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன. சுற்று வட்டாரத்தை மேலும் ஆய்வு செய்கிற போது இன்னும் பல கல் வெட்டுக்கள் வெளியே வரலாம். இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள் பல தானம் வழங்கப்பட்டதையும் கொடை அளித்தமைப் பற்றியுமே பேசுகின்றன.

கட்டிட இடிபாடுகள் ஈழத்தில் வேறு இடங்களில் கிடைக்காத பல பாவனைப் பொருட்கள் கல்லில் செய்யப்பட்டதாக அடையாளம் காணப்படுகின்றன.
இந்த இடம் ஒரு வழிபாட்டுத் தலமாகவும் அரன்மனைத் தொகுதியை அண்மித்ததாகவும் ஒரு வணிக மையத்தை கொண்டதாகவும் இருந்திருக்க கூடிய பண்புகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நகைகளை பாதுகாக்கும் கல்

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்



பெட்டகம் குளிக்கப் பயன்படுத்தப்படும் கற்தொட்டி, சித்திர வடிவக் கற்களும் குண்டான் வடிவிலான குடைந்து தோண்டி எடுத்த தனியான கல் குண்டானும் இங்குள்ள சிறப்பம்சங்களாகும்.

பிரதானமான கட்டிடத் தொகுதி கோயில் போன்ற அமைப்பையே சுட்டி நிற்கிறது அதற்கடுத்ததாக இருக்கும்பகுதியே விகாரையின் அமைப்பை கொண்டுள்ளது. பெரும்பாலான கட்டிட இடிபாடுகள்



சோழர் காலக் கட்டிடப் பாணியயையே பின்பற்றியுள்ளமை தமிழர் கலாசார அடையாளங்களின் நீட்சியை சொல்லி நிற்கிறது.

“வெல்காமமே” பின்னர் “வெல்கம்” என மாறியதாக சிலரின் கருத்துக்களும் கவனத்துக்கு உரியதே. ஈழத் தமிழர்களின் வரலாற்றில் இராஜ இராஜப் பெரும் பள்ளி தமிழர்களின்



அடையாளங்களில் ஒன்று என்பதை மறுப்பதற்கில்லை.

## சிறை



கூண்டுக்குள்
உன்னை வைத்து
கூடி நின்று
பார்ப்பார்கள்
குத்திக் கூடக்
கேட்பார்கள்
வாய் திறக்க விடமாட்டார்
ஒப்புக் கொள்ளச்
சொல்லியே
மிதிப்பார்

ஏன் என்று
கேட்க நாதியற்று
நீ
ஏங்கிக் கொண்டே
கிடப்பாய்
சில நாள்கள்
சென்ற பின்
உணர்வின்றி
நடப்பாய்
ஊரையும் உறவையும்
மனைவி மக்களையும்
நினைத்தே கழிப்பாய்

நல்லதும் கெட்டதும்
சிறையோடு கழிய
நல்ல நாட்களில்
மற்றையவர்
வெளியேற
நீ மட்டும் இருப்பாய்
சிறையில்
மூத்த கைதியாக

கொலைகாரன் என்றாலும்
மன்னிப்பு உண்டு
நீதான் அரசியல் கைதியே
அரசாங்கம் மாறினாலும்
மாறாத சட்டம் இது.

நிலாந்தி சசிகுமார்
மட்டக்களப்பு

# சேலைகட்டிய பெண்களை நம்பக்கூடாதாம்!

## தமிழ் இலக்கியம் அப்படிச் சொல்கிறதாம்!!

### என்ன இது?

பிரச்சினைக்குரிய விடயமாயிருக்கிறதே! என்று பலரும் வியக்கலாம். சேலை கட்டுகின்ற பெண்களுக்கு இந்தத் தலைப்பைக் கண்டதும் சீற்றம் எழலாம். சேலைத் தலைப்பை இழுத்துச் சொருகிக்கொண்டு எழுதியவன் யாரென்று என்னைத் தேடி உதைக்கவும் வரலாம். சேலை கட்டுவதை வெறுக்கின்ற பெண்கள் சிறிது சந்தோசத்துடன் வெறும் வாய்க்கு அவல் கிடைத்ததுபோல, தமது கட்சிக்கு ஆதாரம் ஒன்று கிடைத்துவிட்டது என்று, ஆர்வத்துடன் இக்கட்டுரையை வாசிக்கலாம். பல்வேறு நிலைமைகளில் வெவ்வேறு உணர்வுகளில் அமிழ்ந்துள்ள ஆண்களோ என்னதான் எழுதப்பட்டிருக்கிறதென்று அறியும் உந்தலில் ஒருமுறை வாசிக்க முயலலாம்.



விடயம் இதுதான். சேலைகட்டிய மாதரை நம்பக்கூடாது என்று குறிப்பிடும் பழைய பாடல் ஒன்றிருப்பது பலருக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கின்றேன். வீட்டுக்குள்ளே அதைக் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள துணிவில்லாவிட்டாலும் வெளியிலே அப்படிப்பேசுவதில் ஆனந்தம் கொள்கின்ற ஆண்கள் இல்லாமல் இல்லை. வீட்டுக்குள்ளேயே சத்தம் வெளிவராமல் அந்தப்பாடலை முணுமுணுத்துத் தம்மனதளவில் திருப்திப்படுபவர்களும் உண்டு.

அந்த நாட்களில், நான் சிறுவனாக இருந்த காலத்தில், நமது கிராமப்புறங்களில் பெருசுகள் தண்ணிபோட்டுவிட்டு தெருவில் வரும்போது உரத்துப் பாடிக்கொண்டுவருவது இப்போதும் எனக்கு நினைவிருக்கிறது. தள்ளாடித் தள்ளாடி அவர்கள் நடந்துவரும்போது தமக்குப் பிடிக்காத அல்லது வேண்டாதவர்களின் வீடுகள் அண்மிக்கும்போது அவர்களுக்குக் குத்தலாகவும், குதர்க்கமாகவும் ஏதாவது பாடல்களைப் பாடி வேண்டுமென்றே வலுச் சண்டைக்கு இழுப்பவர்களும் உண்டு. பாடல்களென்றால் சினிமாப் பாடல்களல்ல. எல்லாம் பழைய இலக்கியப்பாடல்கள்தான். கம்பர், அவ்வையார், காளமேகப்புலவர் இப்படிப் பலரின் பாடல்களையும் இடம், பொருள், ஏவலுக்குத் தகுந்தபடி பாடுவார்கள். பலர் நாட்டுப் பாடல்களோடேயே ஆட்டம் போடுவார்கள். அவ்வாறான வேளைகளில் தங்கள் வீடுவந்துவிட்டால் மனைவியைச் சீண்டிப்பார்ப்பதற்காக சிலர் அதற்கேற்றவாறு பாடுவதும், பின்னர் வீட்டுக்கு வந்ததும் மனைவியும், பிள்ளைகளும் அவரின் போதை தெளிவதற்காக, நாட்டுத் தமிழில் சொல்வதானால் வெறி முறிவதற்காக, கொய்யாமரத்தின் இலைகளைக் கசக்கி மணக்கக் கொடுப்பதும், தேசிக்காயைத் தலையிலே பிழிந்து பின்னர் முழுகவார்ப்பதும் கிராமங்களில் சில வீடுகளின் அடிக்கடி நடைபெறும் நிகழ்வுகள். அப்படிப்பட்ட வேளைகளில் சிலர் மனைவியைச் சீண்டுவதற்காகவும் சிலர் குடும்பத்தில் குழப்பம் வந்த வேளைகளில் குத்திக்காட்டுவதற்காகவும் ஒரு பாடலைப்பாடி உதாரணம் காட்டுவார்கள். சில இலக்கியவாதிகள் மேடைகளில்கூட இந்தப்பாடலை எடுத்துக்காட்டிப் பேசுவதுமுண்டு. சரி அது என்னபாடல்? இதோ, விவேகசிந்தாமணி என்றும் பழந்தமிழ் இலக்கியத்தில் இடம்பெறும் அந்தப்பாடல் இதுதான்: ஆலகால விடத்தையும் நம்பலாம் ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம் கோலமாமத யானையை நம்பலாம் கொல்லும்வேங்கைப் புலியையும் நம்பலாம் காலனார்விடு தூதரை நம்பலாம் கள்ளர்வேடர் மறவரை நம்பலாம் சேலைகட்டிய மாதரை நம்பினால் தெருவில்நின்று தியங்கித் தவிப்பரே.



(2) இனிப் பாடலின் கருத்தைப் பார்ப்போம். ஆலகாலம் எனப்படும் கொடிய நஞ்சு, ஆழத்தை அறியமுடியாதபடி பெருக்கெடுத்தோடும் ஆறு, மதங்கொண்ட யானை, பிற உயிர்களைக் கொன்று புசிக்கும் புலி, நமது உயிரைக்கவர்வதற்காகப் பாசக்கயிற்றுடன் வருகின்ற இயமதூதர்கள், கள்வர்கள், மிருகங்களை வேட்டையாடும் வேடர்கள், மற்றவர்களைக் கொல்லும் மறவர்கள் ஆகிய எதுவும் நம்பக்கூடியவை அல்ல. எல்லாமே நமக்குத் தீமைபயப்பவை. நமது உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்துபவை. ஆனால் அத்தகைய கொடியனவற்றை நம்பினாலும்கூடப் பரவாயில்லை, சேலைகட்டிய பெண்களை மட்டும் நம்பவே கூடாது. நம்பினால் தெருவிலே நின்று பிச்சை

சட்டத்தரணி, பாடும் மீன்,
சு.ஸ்ரீகந்தராசா

எடுக்கப்போய் பிச்சையும் கிடைக்காமல் வருந்தித் தவிக்கவேண்டிவரும் என்பது இந்தப்பாடலின் கருத்து.

அப்படியானால் சேலைகட்டாமல் வேறு ஆடைகளை அணியும் பெண்களை நம்பலாமா என்று ஒரு குதர்க்கமான கேள்வி எழலாம். இந்தப்பாடல் எழுந்த காலத்தில் சேலைதான் தமிழ்ப் பெண்களின் பிரதான ஆடையாக இருந்திருக்கிறது. எனவே சேலை கட்டிய மாதர் என்பது ஒட்டுமொத்தமாகப் பெண்கள் இனத்தையே குறிக்கிறது. ஆகவே பாடலின் கருத்து பெண்களையே நம்பக்கூடாது என்பதுதான் என்று பெரும்பாலான தமிழ் அறிஞர்கள், ஆர்வலர்கள்கூட கருதுகின்றனர். பாடலைப் படிக்கும் எவருமே அந்த முடிவுக்கே வருகின்றனர். ஆகவே விவேகசிந்தாமணியை எழுதிய புலவர் பெண்களையே நம்பக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தித்தான் இந்தப்பாடலை இயற்றியுள்ளார் என்ற முடிவுக்கே நாம் வரவேண்டியுள்ளது.

தமிழ்மொழியிலேயுள்ள பல்லாயிரக்கணக்கான பழந்தமிழ் இலக்கியங்களிலே விவேகசிந்தாமணியும் ஒன்றாகும். பல்வேறுவகைச் சிந்தாமணிகள் உள்ளன. சீவக சிந்தாமணி, சோதிட சிந்தாமணி, அபிதான சிந்தாமணி என்பன அவற்றுட் சிலவாகும். இவற்றிலே விவேக சிந்தாமணி என்பது நீதிக்கருத்துக்களையும், வாழ்வியலுக்கு உகந்த அறிவுரைகளையும் கூறும் பாடல்களைக் கொண்டது. இது ஒரு கதையல்ல, காவியமல்ல, கற்பனையல்ல. தனிப்பாடல்களின் திரட்டாகவுள்ள இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு விடயத்தை அறிவுறுத்துவனவாகவுள்ளன. சில விடயங்கள் பல பாடல்களில் திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டுள்ளன. நல்லதைச் செய்யவேண்டும், அல்லதைத் தவிர்க்கவேண்டும், உள்ளதைச் சொல்லவேண்டும், உடல்நலம் பேணவேண்டும் என்றிவ்வாறு பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்ற இருநாறு பாடல்கள் இன்று கிடைக்கப்பெறும் விவேக சிந்தாமணியிலே உள்ளன.

மிகவும் கவலைக்குரிய விடயமென்னவென்றால் இந்த நூலை எழுதிய புலவர்யார் என்று தெரியவில்லை. ஒருவரா அல்லது பலரா என்பதும் புரியவில்லை. பாடியவர் யாரென்று அறிய முடியாத இலக்கியங்கள் தமிழிலே இதுபோன்று வேறும் சில உள்ளன.

விவேகசிந்தாமணியைப் பொறுத்தவரை மனிதகுலத்திற்கு நன்மை பயக்கக்கூடிய அறிவுரைகளையே எல்லாப் பாடல்களும் எடுத்தியம்புகின்றன. அப்படியிருக்கும்போது ஆணும் பெண்ணும் சேர்ந்த மனித குலத்தில் பெண்களுக்கெதிரான வசைகளைக்கூறும் கருத்துக்களை ஓர் அறிவார்ந்த இலக்கியம் கொண்டிருக்குமா? பெண்களில்லாவிட்டால் ஆண்கள் எப்படிப் பிறக்கமுடியும்? எப்படி வாழமுடியும்? எழுதிய புலவரின் தாயும் ஒரு பெண்தானே. தாயையே நம்பக்கூடாதென அவர் எழுதியிருப்பாரா? இந்த இடத்தில்தான் நாம் இந்தப் பாடலைக் கூர்ந்து நோக்கவேண்டும்.

**கோபப்படுபவர்கள் கொஞ்சம் பொறுமையாகப் படியுங்கள். இறுதியிலும் கோபம் நின்றால் ஆசிரியர் பொறுப்பல்ல...**

செய்யுட்களிலும், மரபுக் கவிதைகளிலும் எதுகை, மோனை, இயைபு என்பன ஓசை நயம் சிறப்பதற்குக் காரணமாக அமைபவையாகும். இப்பாடலில் உள்ள



எதுகைச் சிறப்பைத் தருவவை முதலாம், மூன்றாம், ஐந்தாம், ஏழாம் வரிகளில் வருகின்ற முதலாவது சொற்களான ஆலகால, கோலமாமத, காலனார், சேலைகட்டிய என்பனவற்றில் உள்ள இரண்டாவது எழுத்தான "ல" என்பதாகும். முதல் மூன்று சொற்களிலும் "ல " என்னும் எழுத்தே வருகிறது. ஆனால் கடைசிச் சொல்லில் "லை"வந்திருக்கிறது. எதுகைச் சிறப்பில் இது தவறெதையும்

## சேலை கட்டிய வேறு சேலகட்டிய வேறா?

ஏற்படுத்திவிடவில்லையென்றாலும், சொல்லில் குற்றமில்லை இருந்தாலும் அது மன்னிக்கப்படலாம் பொருளில்தான் குற்றமிருக்கிறது என்ற திருவிளையாடல் திரைப்படத்தில் நக்கீரன் சொல்வதுபோல, இந்தப் பாடலின் கருத்தை உன்னிப்பாகக் கவனிக்கின்றபோது புலவர் கடைசிச்சொல்லிலும் " ல "என்னும் எழுத்தையே வைத்துப் பாடியிருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனென்றால் பொருளில் குற்றம் வரும்படியாகப் புலவர் பாடியிருக்கமாட்டார். (3) எனவே ஏட்டுச்சுவடிகளைப் பிரதிபண்ணியவர்களோ அல்லது அச்சுப்பதிப்பிட்டவர்களோ இந்தத்தவறை விட்டிருக்கலாம். மேலும் மூலத்திலிருந்து பிரதிபண்ணும்போது, பிரதிபண்ணியவர்கள் சேலைகட்டிய மாதர் என்பதுதான் சரியாக இருக்கவேண்டும்' என்றும் சேலகட்டிய என்பது ஓர் எழுத்துப்பிழை' என்றும் நினைத்து, திருத்தி எழுதுவதாக எண்ணித் தாமாகவே சேலை' என்று மாற்றி எழுதியிருக்கலாம்.

இப்பொழுது "சேலகட்டிய" என்பதன் கருத்தைப் பார்ப்போம். சேல் என்பது கயல்மீனைக் குறிக்கும். கெண்டை என்பது அதன் மற்றொரு பெயர். இந்தப்பாடலில் சேல் என்பது பெண்ணின் கண்களைக் குறிக்கின்றது. சேலகட்டிய பெண்கள் என்றால் கண்களை அகட்டிய பெண்கள் என்று பொருள். அதாவது தனது கண்களை அகட்டிக் கவர்ச்சிகரமாகப் பார்க்கின்ற பெண்கள் என்பது கருத்தாகின்றது.

இதில் இன்னுமொரு விடயத்தையும் உன்னிப்பாக நோக்கவேண்டும். அகன்ற கண்களையுடைய பெண்களை இங்கே குறிப்பிடவில்லை. காதளவோடிய கண்கள், சேல்போன்ற கண்கள், கயல் பேன்ற விழிகளையுடைய பெண்கள் என்றெல்லாம் பெண்கள் வர்ணிக்கப்படுகின்றார்கள். அவையெல்லாம் அழகானவை. அந்தப்பெண்களுக்கு இயற்கையாகவே அமைந்தவை. அவர்களைச் "சேலகன்ற" மாதர்' என்று சொல்லவேண்டும். ஆனால் "சேல் அகட்டிய" என்னும்போது ஒரு நோக்கத்திற்காகத் தாமாகவே கண்களை அகட்டிக் கவர்ச்சிகாட்டுகின்ற பெண்கள் என்று நாம் கொள்ளவேண்டும். அப்படிப்பட்டபெண்கள் யார்? அவர்கள்தான் கணிகையர்! அதாவது விலைமாதர்! எனவே விலைமாதரை நம்பி அவர்களோடு உறவுவைத்துக் கொண்டால் தெருவில் நின்று பிச்சைஎடுக்க வேண்டிவரும், பிச்சையும் கிடைக்காமல் வருந்தித் தவிக்கவேண்டியும்வரும். ஆகவேதான் நம்பக்கூடாத பல விடயங்களைச் சொல்லி அவற்றையெல்லாம் நம்பினாலும்கூட, விலைமாதரை நம்பக்கூடாது என்று மனித சமுதாயத்திற்கு அறிவுரை சொல்லியிருக்கிறார் புலவர்.

இந்த முடிவுக்கு வருவதற்கு அதே விவேகசிந்தாமணியிலுள்ள இன்னுமொருபாடல் நமக்குத் தக்க சான்று தருகின்றது.

படியின் அப்பொழுதே வதைத்திடும் பச்சை நாவியை நம்பலாம் பழிநமக்கென வழிமறித்திடும் பழைய கள்ளரை நம்பலாம் கொடும் மதக்குவடென வளர்ந்திடு குஞ்சரத்தையும் நம்பலாம் குலுங்கப்பேசி நகைத்திடுஞ்சிறு குமரர் தம்மையும் நம்பலாம் கடையிலக்கமது எழுதிவைத்த கணக்கர் தம்மையும் நம்பலாம் காக்கைபோல்விழி பார்த்திடுங்குடிக் காணியாளரை நம்பலாம் நடைகுலுக்கியும் முகம்மினுக்கியும் நகைநகைத்திடும் மாதரை நம்பொணாது மெய்நம்பொணாதுமெய் நம்பொணாதுமெய் காணுமே.'

இந்தப்பாடலில் "நடைகுலுக்கியும் முகம்மினுக்கியும் நகைநகைத்திடும் மாதர்"என்பது விலைமாதர்களையே குறிக்கின்றது. அவர்களை நம்பவே கூடாது, நம்பவே கூடாது, முக்காலும் நம்பக்கூடாது என்று அறுதியிட்டுச் சொல்கிறது இந்தப்பாடல்.

(4) இதுமட்டுமன்றி இன்னுமொரு பாடலும் புலவரது நோக்கத்தை நன்கு புலப்படுத்துவதாயுள்ளது.



வெம்புவாள் விழுவாள் பொய்யே, மேல்விழுந்தழுவாள் பொய்யே தம்பலம் தின்பாள் பொய்யே, சாகிறேன் என்பாள் பொய்யே அம்பினும் கொடிய கண்ணாள் ஆயிரம் சிந்தையாளை நம்பினபேர்கள் எல்லாம் நாயினும் கடை ஆவாரே.'

இப்பாடலிலே "ஆயிரம் சிந்தையாள்" எனக்குறிப்பிடப்படுவது விலைமாதையே. ஏனென்றால் அவளுக்கென்றொரு மனம் இல்லை. அதாவது அவளது நெஞ்சிலே பலருக்கு இடமுண்டு. எத்தனையோ பேர் வருவார்கள் எத்தனையோ பேர் போவார்கள். அவர்கள் எல்லோருக்கும் ஏற்றபடி நடக்கும் பலமனம்கொண்டவள் அவள். அதனால்தான் "ஆயிரம் சிந்தையாளை" என்று ஒருமையில் சொல்லி, "நம்பினபேர்கள்" என்று பன்மையில் குறிப்பிடுகிறார் புலவர். மிகவும் அற்புதமான சொற்பிரயோகம். மனைவியை நம்பிய கணவன் என்று சொல்லலாம். மனைவியை நம்பிய கணவர்கள் என்று சொல்லமுடியுமா? பாஞ்சாலிக்கு மட்டுந்தான் அது பொருந்தும். நமது தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொருந்துமா?

எனவே சேலகட்டிய மாதரைத்தான் நம்பக்கூடாது. சேலைகட்டிய மாதரை நம்பலாம். நம்பவேண்டும் ஏனென்றால் தாயும் பெண், தாரமும் பெண் அல்லவா? தமிழ் இலக்கியம் நம்மைத் தவறாக வழிநடத்தவில்லை. இந்தப்பாடலைத் தவறாக எழுதிக்கொள்வதையும், தப்பான கருத்தை அதற்கேற்ப எடுத்துக்கொள்வதையும் தவிர்ப்போமாக.



## "இலங்கை உட்பட பல நாடுகளை கடன் கொடுத்து பணிய வைக்கும் சீனா"



பலகோடிக்கணக்கான டொலர்களை கடனாகக் கொடுத்து அதன் மூலம் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளில் சீனா அரசியல் ஆதாயம் தேட முனைகிறது என்று அமெரிக்காவின் அரசுத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒன்று கூறியுள்ளது.

இது குறித்து அமெரிக்காவின் சிஎன்என் செய்திச் சேவை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

"கடன்புத்தக இராஜதந்திரம்" என்னும் தலைப்பில் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் இரு கல்விமான்களால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையில், இலங்கை, பாகிஸ்தான் போன்ற 16 நாடுகள் இலக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும், மிகவும் பாதிக்கப்படக் கூடிய நிலையில் அவை இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் வழங்கப்படுகின்ற சில கடன்கள் திருப்பி அடைக்க முடியாத நிலையை எட்டும் போது சீனா அதனைப் பயன்படுத்தி, "கேந்திர முக்கியத்துவம் மிக்க சொத்துக்களை அகப்படுத்தவும், அல்லது கடனாளி நாட்டின் மீது அரசியல் செல்வாக்கை செலுத்தவும் வழி ஏற்பட்டு விடுகின்றது" என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

இது சீன அரசாங்கம், இந்து சமுத்திரம் மற்றும் பசுபிக் கடல் ஆகிய பிரதேசங்களில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளை சுற்றி தனது செல்வாக்கை விஸ்தரிக்க உதவுகிறது என்றும் தென்சீனக் கடலில் தனது செல்வாக்கை மேலும் பலப்படுத்தவும் இது வழி செய்கிறது என்றும் அந்த கல்விமான்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

வனுவட்டுவில் தமது இராணுவ பிரசன்னத்துக்கு சீனா ஏற்பாடு செய்யப்போவதாக வந்த செய்திகளை அடுத்து, அவுஸ்திரேலிய பிரதமர் மல்கம் டேர்ண்புல் பெரும் கவலை வெளியிட்டிருந்தார்.

இலங்கையில் துறைமுக அபிவிருத்திக்காக கடன்கொடுத்து அதனை 99 வருட குத்தகைக்கு சீனா எடுத்துள்ள நிலையில், அது அரசாங்க கட்டுப்பாட்டில் இருக்கும் பட்சத்தில், எதிர்காலத்தில் அது இராணுவ தேவைக்கு பயன்படுத்தப்படும் ஆபத்து இருப்பதாக இந்த அறிக்கையை எழுதியவர்களில் ஒருவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

# கை வீசம்மா கை வீசு : ஒரு ஆரோக்கிய டிப்ஸ் மற்றும் வைத்தியம்

நசீம் ஹிக்மத்

"கை வீசம்மா கை வீசு.
கடைக்குப் போகலாம்
கை வீசு.
முட்டாய் வாங்கலாம்
கை வீசு..."

இந்த பால போதினி பாடலை தமிழ் படித்த பாமரன் முதல் பண்டிதன் வரை அறிந்திருப்பர்.

ஃபேஸ்புக்கில் பழைய போட்டோக்கள் நோண்டப்படுவது போல் இந்த அதரப் பழைய தமிழ் ரைம் கிளறியெடுக்கப்பட காரணம் அது பற்றிய புதிய புரிதல்தான்.



இந்தப் பாடல் மிகப்பெரிய ஒரு ஆரோக்கிய டிப்ஸை அசால்டாக கூறுகிறது. அதை விளக்கத்தானா இந்தப் பதிவு என்று அவசரப்பட்டு விட வேண்டாம். பதிவில் இன்னொரு செய்தியும் இருக்கிறது.

சில காலமாக எனது வலது தோள் மற்றும் புஜத்தில் வலி. ஒரு ஆயுர்வேத வைத்தியர் உட்பட ஐந்து டாக்டர்களிடம் காட்டிவிட்டேன். அலோபதி டாக்டர்கள் வலி நிவாரணி மற்றும் வாயு மாத்திரைகளும் கையில் பூச ஜெல்லும் எடுக்கச் சொல்வார்கள். ஒரு டாக்டர் என்னை பரிசோதித்த போது "டாக்டர் இது rotater cuff syndroma?" என ஆங்கிலத்தில் கேட்டேன். அவர் முகத்தை பெரிய ஆச்சரியக் குறியாக்கிக் கொண்டு, "how do you know that" என்றார். கூகுள் செய்து கண்டு பிடித்தேன் என்று கூறினேன்.

அந்த பிரச்சினைதான் உங்களுக்கு என்று அவர் சொன்னதும் மனதுக்குள் எனது வைத்திய அறிவை நானே தட்டிக்கொடுத்துக் கொண்டேன். அந்த டாக்டர் பிஸியோ தெரபி செய்யச் சொன்னார். தெரபிஸ்டிடம் போனதும் அவர் சில பயிற்சிகளை கற்றுத் தந்தார். பின்னர் வீட்டில் பயிற்சி எடுப்பதற்காக டம்பள்ஸ் மற்றும் டெரா பேண்ட் வாங்கச் சொன்னார். டம்பள்ஸ் கைக்கு பயிற்சி எடுக்க பாவிக்கும் இரும்புத் துண்டு. ரப்பரினால் தயாரிக்கப்பட்ட டெரா பேண்டு இழுவை பயிற்சிக்கு.

இந்த ரப்பர் பேண்ட் வேறுபட்ட வலுவில் கிடைக்கிறது. அரை மற்றும் ஒரு கிலோ டம்பள்ஸுடனும் வலு குறைந்த டெரா பேண்டுடனும் அர்னோல்ட் ஸ்வெஸ்நெகர் நினைப்பில் வீடு வந்த எனக்கு எனது இல்லாளிடம் பரிசாக கிடைத்தது ஒரு விழியோர ஏளனப் பார்வை.

அந்த பார்வையின் அர்த்தம் "இது எத்தனை நாளைக்குன்னு பார்ப்போம்". ஒரு பத்து நாள் இடைவிடாத பயிற்சியின் பின்னர் டம்பள்ஸும் டெரா பேண்டும் பழைய செருப்பு போல மூலையில் முடங்கின. எனது மனையாளின் ஆருடம் பொய்க்கவில்லை.

இந்த நிலையில் வலி இடைக்கிடை தனது இருப்பை தெரியப்படுத்திக் கொண்டே இருந்தது. சுதேச வைத்தியத்துக்கு ஒரு வாய்ப்பு கொடுப்பதற்காக ராஜகிரியிலுள்ள ஆயுர்வேத ஆஸ்பத்திரி போனேன். அங்கே ஒரு டாக்டரம்மா குடிக்க கஷாயமும், கரைத்து குடிக்க குளுசையும், பூச எண்ணெய்யும் அத்துடன் சூரணமோ காரணமோ என்று கூறி இன்னுமொரு அயிட்டமும் தந்தார். அதை முட்டையின் வெள்ளைக் கருவில் கலந்து மிக்ஸராக்கி கைக்கு பத்திட வேண்டும். ஒரு தடவை பத்து போட்டு, கையில் வெண்கரு வழிந்து தலையணையும் படுக்கையும் நானும் நாறிப் போனதே மிச்சம். ஒரு முட்டை நாசம். (ஆம்லட் போச்சே).



இதற்கிடையில் மேலும் கூகுளை சுரண்டியதில் எனது வலிக்கு காரணம் frozen shoulder பிரச்சினை என்பதை உணர்ந்தேன். rotater cuff syndroma எனும் எனது ஆரம்ப டயகனைஸ் பிழையானது. (டாக்டர்களுக்கே பிழைப்பதில்லையா, நாம எம்மாத்திரம்?). இப்போது யூ டியூப் சபாரி.

அதில் frozen shoulder க்கான பலவிதமான பயிற்சிகளை வீடியோவில் பார்த்து சிலதை செய்தேன். அப்படியொரு சஞ்சாரத்தின் போதுதான் இந்த பிரச்சினைக்கான அக்யூபஞ்சர் வைத்தியம் குறித்த ஒரு வீடியோ பார்த்தேன்.

முழங்கையருகில் இரு பள்ளங்களாக இருக்கும் ஸ்பாட்டில் மறு கையின் இரு விரல்களை வைத்து அழுத்திக்கொண்டு கையை எட்டு முறை மடிக்க வேண்டும். இதை சொன்ன டாக்டர் ஐயாதான் மேலே சொன்ன "கை வீசம்மா.. " ரைமை நினைவுபடுத்தினார். நடக்கும்போது கைகளை வீசி நடக்க வேண்டும். அப்போது தோள்பட்டை தசைகள் இறுகாது frozen shoulder க்கு நிவாரணமளிக்கும் என்று அந்த பாலர் பாட்டிலுள்ள பயனை விளக்கினார். (இனி இந்த பாடல்களை புறக்கணித்து விடாதீர்கள்.)

எனக்கு சிறு வயது முதலே மருத்துவத்தில் ஈடுபாடு இருக்கிறது. அரைக் கால்சட்டை அணியும் காலத்தில் விளையாடும்போது ஏற்படும் சிராய்ப்புகள், காயங்களுக்கு தெருவோரத்தில் கிடக்கும் ஒரு செடியின் இலைகளை எடுத்து ஒரு கல்லில் வைத்து இன்னொரு கல்லால் நசுக்கி சாற்றை விட காயம் மாயமாகும். இதைவிட இன்னொரு வைத்தியமும் எனக்குத் தெரியும். இரு விரல்களில் எச்சைத் துப்பி அதை காயத்தின் மீது தடவ எச்சிலில் உள்ள ஒரு சக்தியால் அது குணமாகும். இவையெல்லாம் எனது சிறு பராய கண்டுபிடிப்புகள். Oh what a genius I am..

அலோபதி, ஹோமியோபதி, அக்யூபஞ்சர், ஆயுர்வேதம், கை வீச்சு வைத்தியம், எச்சி துப்பி மருத்துவம் என எவ்வளவு சங்கதிகளை அறிந்திருக்கிறேன். இப்படிபட்ட நான் சும்மா இருக்கலாமா? நான் என்ன சொல்ல வருகிறேன் என புரிந்து கொண்டிருப்பீர்கள்.

ஆம்.. நானும் மருத்துவ course ஒன்றை ஆரம்பிக்கப் போகிறேன். இதில் இணைபவர்கள் மூணே நாளில் முழு வைத்தியராகலாம்!
கைவைத்தியம் முதல் எச்சித்துப்பி வைத்தியம் வரை கற்று மூணே நாளில் முழு வைத்தியராக கூகிள் ஆண்டவரை நாடுங்கள்

## குறுக்கெழுத்துப்போட்டி இல:–05

அரங்கம் இரா. தவராஜா.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | |
| | ■ | | ■ | 4 | | 5 |
| | ■ | | ■ | | 6 | ■ |
| | 7 | 8 | ■ | 9 | | |
| ■ | 10 | | | ■ | | ■ |
| 11 | | ■ | | | | 12 |
| 13 | | | 14 | ■ | ■ | |

### இடமிருந்து வலம்:
01. கடைத்தெரு
03. விக்ரம் நடித்த திரைப்படம், கடவுள்.
04. இஸ்லாமியர்கள் விண்ணப்பத்தை இப்படி அழைப்பார்கள்.
09. கடினமானது குழம்பிவிட்டது.
10. அதிகம் சாப்பிடுபவர்களை இப்படியும் அழைப்பார்கள்.
11. இதன் சிறகினிலே நந்தலாலாவின் கரிய நிறம் இருக்கிறது. ஆனால் இறுதியெழுத்தை இழந்து விட்டது.
13. துணி குழம்பிக் கிடக்கிறது.

### மேலிருந்து கீழ்:
01. அறியாமல் செய்கின்ற பிழையான செயலை இப்படிச் சொல்வார்கள்.
02. அருச்சுனன்
03. விக்ரமாதித்தனை கொன்றவன்.
04. அறிஞர் அண்ணாவின் நல்வழிக்கருத்தில் முன்னிலைச் சொல்.
07. யானையின் மூக்கு
11. வனம்
12. குரைக்கும் நாய் _ _க்காது.

### வலமிருந்து இடம்:
06. வதங்கல் கடைசி எழுத்தில்லை.
08. பொம்மை.
12. நட்புக்கு இலக்கணம், துரியோதனின் நண்பன்.

### கீழிருந்து மேல்:
05. அப்பாவின் சகோதரி.
14. குதிரை.

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 07.06.2018க்கு முன்னர் அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.
அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி, மட்டக்களப்பு.

சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.

## கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் 1993 சாதாரண தர மற்றும் 1996 உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் வைபவம்



கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் 1993 சாதாரண தரம் மற்றும் 1996 உயர்தரம் பயின்ற மாணவர்களின் ஒன்றுகூடல் வைபவம் 20.05.2018 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலின் கிறிஸ்டல் போல்ரூம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.





# தினமும் நஞ்சை உண்ணும் மக்கள்!
## வைத்தியசாலையே வாழ்விடமாய் போன சோகம்!

படுவான் பாலகன்

நாமே, நமது தலையில் மண்ணை அள்ளிப் போடுற நிலையாப்போச்சு! வைத்தியசாலை, வைத்தியசாலை என்று ஏறி, இறங்கிற நிலையுமாய் ஆகிட்டு. இப்படி போன முப்பத தாண்டுவதே கஸ்டமாகத்தான் இருக்கும்போல. என தும்பங்கேணி சந்தியில் காலைவேளையில் சாமித்தம்பியும் குஞ்சித்தம்பியும் சைக்கிளில் நின்று பேசிக்கொண்டு நின்றனர்.

சாமித்தம்பி வேளாண்மை செய்வதில் கெட்டிக்காரர். வேளாண்மை செய்யவென்று ஆரம்பித்தால் வயலிலே எந்தநேரமும் கிடப்பார். களைபிடுங்குவது, தண்ணீர் பாய்ச்சுவது, வக்கடை கட்டுவது, பசளை இடுவது, எண்ணெய் விசுறுவது என ஏதாவது வேலையை செய்து கொண்டிருப்பார். காலையில் எழும்பினால் வயலுக்குள்தான் நிற்பார். மாட்டைக் கொண்டு உழவுசெய்தும், சூடுமிதித்தும், கம்பெடுத்து உப்பட்டி அடித்தும்,



சாமித்தம்பியைப் பற்றி பிறகு பேசுவோம். தும்பங்கேணி சந்தியில் நின்று காலைவேளையில் இருவரும் நீண்ட நேரமாக என்ன பேசினார்கள் என்பதனை பார்ப்போம்.

30 வருடத்திற்கு முன்பு செய்த வேளாண்மைச் செய்கைக்கும், தற்போதைய வேளாண்மை செய்கைக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மூன்று தசாப்தத்திற்கு முன்பு, நிறைவாக மனிதவலுக்களே அதிகம் தேவைப்பட்டன. அவை இன்று

### முற்றுப்புள்ளி வைக்க ஒன்றுசேருமா சமூகம்?

பட்டறை கட்டி நெல்லைப் பாதுகாத்த அனுபவத்தினையும் கொண்ட வயதான ஒருவர்தான் சாமித்தம்பி. வேளாண்மை செய்வதில் பட்டறிவு கொண்டவர். குஞ்சிதம்பியோ, உழவு இயந்திரத்தினால் உழவு செய்து வேளாண்மை செய்ய ஆரம்பித்த காலத்தின் பின்தான் சுயமாக வேளாண்மை செய்ய ஆரம்பித்தவர். சாமித்தம்பி மூன்று தலைமுறையை கண்டவராக இருந்ததினால் தனது அனுபவத்தினை யாரிடமாவது கொட்டித் தீர்க்க வேண்டுமென்ற எண்ணமிருந்தது. ஆனால் ஆறுதலாக இதுபற்றி பேசுவதற்கு நேரம் கொடுக்க யாரும் எண்ணுவதில்லை. அவ்வாறு யாரும் சாமித்தம்பியிடம் பேச வந்தாலும் நீண்ட நேரமாகவிருந்து பேசுவதில்லை. தமக்கு வேறு வேலைகள் இருக்கின்றன என்று கூறி தப்பித்துச் செல்வதுபோன்று சென்றுவிடுவர். இதனால் சாமித்தம்பி போன்ற பெரிய நூலகங்கள் எல்லாமே அடைக்கப்பட்டதாகிவிட்டன.

இல்லாமல் சென்று இயந்திரத்தின் பயன்பாடு அதிகரித்திருக்கின்றது. இதனால் வேலையில்லாப்பிரச்சினை உருவாகி படுவான்கரைமக்கள் பெரும்பான்மையாக மத்திய கிழக்கு நாடுகளிலே தொழில்புரிந்து கொண்டிருக்கின்றனர். நீண்ட காலத்து நெல் விதைகள் இல்லாமல் சென்று குறுகிய கால நெல்லினங்களே உற்பத்தி செய்யப்படுகின்றன. விரைவாக நெல் உற்பத்தியை பெற்றுவிட வேண்டுமென்ற எண்ணம் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ளது. அதேவேளை வேளாண்மை செய்கை ஆரம்பித்தது முதல் அறுவடை செய்து வீடுகொண்டு வரும் வரை பல பாடல்களையும் பாடி மகிழ்கின்ற, கதைகளை பேசி சந்தோசமடைகின்ற தருணங்கள் இல்லாமல் சென்றிருக்கின்றது. இவ்வாறு விவசாய செய்கையில் இருந்து நழுவிய பல செயற்பாடுகளை குறிப்பிட முடியும்.

அதைவிடுத்து, சாமித்தம்பியும், குஞ்சித்தம்பியும் ஏன் நமது தலையில் நாமே மண்ணை அள்ளி போட்டுவிட்டோம் என்று கூறினர் என்பதை பார்ப்போம்; படுவான்கரையில் சிறுபோக விவசாய செய்கைக்காக நெல் விதைக்கப்பட்டு பயிர்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. நெற்பயிர்களுடன் களைகளும் வளர்கின்றமையும் வழமை. இப்போதும் நெற்பயிர்களுடன் களைகள் வளர ஆரம்பித்துள்ளன. இதனை கட்டுப்படுத்துவதற்காக களைநாசினிகளை விசிறுவதற்கு விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். ஏதோ, ஏதோ பெயர்களைக் கூறி விசுறுகின்றனர். இத்தோடு நிறுத்தினால் பறவாயில்லை. நோய் ஏற்பட்டால் வேளாண்மை குடலையாக இருக்கின்ற போது, நெல்மணி நிரம்புகின்ற நேரங்களில் எல்லாம் ஏதும் நோய்கள் ஏற்பட்டுவிட்டால் கிருமிநாசினிகள் விசுறுகின்றனர். அத்தோடு நிறுத்திவிடுவதில்லை. பக்கத்தில் உள்ள வயலில் நெல் விளைந்து விட்டால், தனது வயலில் விளையவில்லையாயின் உடனடியாக நெல்லினைப் பழுக்க வைப்பதற்காகவும் ஏதோ ஒருவகை எண்ணெயை விசுறுகின்றனர். மூன்று மாதத்திற்குள் வேளாண்மை விளைகின்றது. இதற்கு இடையில் குறைந்தது மூன்று தடவைகளாவது நாசினிகளை விசுறுகின்றனர். பின்னர் அந்த நெற்களையே அரிசியாக்கி உணவு உண்கின்றனர். இதனால் நாமே நஞ்சை ஊற்றி நாமே அருந்திக் கொண்டிருக்கின்றோம். என்பதைதான் நமது தலையிலே நாமே மண்ணை அள்ளி போடுகின்றோம் என்று சாமித்தம்பி கூறினார்.

சாமித்தம்பி நாசினிகள் விசுறுவதை மட்டும் கூறி, குற்றம்சுமத்திவிட்டு நிறுத்தவில்லை. தமது காலத்தில் நோய்களை விரட்ட களைகளை கட்டுப்படுத்த என்ன செய்தார்கள் என்ற விடயத்தினையும் கூறினார்.

படுவான்கரைப் பகுதியில் வேளாண்மைச் செய்பவர்களிடம், எப்போதும் இறைநம்பிக்கை மேலோக்கியிருக்கும். வேளாண்மை செய்ய ஆரம்பித்தது தொடக்கம், அறுவடை செய்யும் வரைக்கும் இறைவழிபாடுகளிலே ஈடுபட்டிருப்பர். வேளாண்மை செய்கையில் மேற்கொள்ளும்

### நவீன உரமும் பூச்சி நாசினியும் உடலுக்கு பாதகமாகின்றன

ஒவ்வொரு விடயங்களின் போதும் இறைவழிபாட்டை மேற்கொண்டதன் பின்பு தமது காரியங்களை மேற்கொள்வர். களைகளை அகற்ற களைகளை பிடுங்குவர். நோய்களை கட்டுப்படுத்த கோயிலில் வழங்கப்படும் தீர்த்தத்தினை கொண்டு விசுறுவர். சாம்பலைக்கொண்டு விசுறுவர், வேப்பைச் சாறுகளை விசுறுவர். இவ்வாறு இயற்கையை கொண்டும், நமது நம்பிக்கையின் அடிப்படையிலும் விசுறுவர். நோய்கள் அனைத்தும் நீங்கிவிடும். அறுவடையின் போது சிறந்த விளைச்சல் கிடைக்கும். அரிசியிலும் நச்சுத்தன்மையில்லை. இதனால் உடலாரோக்கியம் பெறும். ஆனால் தற்போது, நமக்கு தெரிந்தே, நாமே ஒவ்வொரு நாளும் நஞ்சை குடித்துக்கொண்டிருக்கின்றோம். இதனால் நோய்களுக்கு ஆளாகின்றோம். அன்றைய காலத்;து மனிதர்களின் வாழும் வயதெல்லை 75க்கு மேல் இருந்தது. தற்போதைய காலத்தில் 30வயதை கடப்பது என்பதும் பாரிய பிரச்சினையேயாகும். என்றார் சாமித்தம்பி. இருவரும் கதைத்துக்கொண்டிருக்கும் நேரம் வெப்பமும் அதிகரிக்கத் தொடங்கியது இருவரும் அவ்விடத்தினை விட்டு சென்றனர். நாம் மாறாதவரை நமது வாழ்நாள் குறைவில் மாற்றமில்லை. மாறினால் மாற்றத்தினை ஏற்படுத்த முடியும். வாழ்ந்து காட்டிய சமூகம் இருக்கும் போது, அதிகம் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. அன்றைய செய்கைமேற்கொள்ள ஒன்று சேர்வோம்.

# சின்னவவுளாமடுவில் சிதைவுண்டநிலையில் சிவலிங்கக்கோவில்!



அடர்ந்த காட்டினுள் சிதைவுண்ட நிலையில் சிவலிங்கக்கோவிலும் குடியிருப்புகளும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் தெற்கில் சின்னவவுளாமடு என்றொரு காட்டுப்பிரதேசம் உள்ளது. இது பொலநறுவைக்கு சமீபமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சின்னவவுளாமடு காட்டுப்பகுதியில் இந்த சிதைவடைந்த சிவலிங்கக்கோயிலுக்கான எச்சங்களும் குடியிருப்புகளின் எச்சங்களும் காணப்பட்டன.

திருகோணமலையைச் சேர்ந்த டாக்டர் சதீஸ் மற்றும் தொல்பொருளியலாளர் என்கேஸ்.திருச்செல்வத்தின் இந்து அமைப்பினைச் சேர்ந்த நிசாந்தன் உள்ளிட்டோர் அண்மையில் அங்கு





சென்று இந்த எச்சங்களைக் கண்டுள்ளனர்.

இது சோழர்காலத்திற்கும் முந்தியதாக இருக்கலாமென அவர்கள் கருத்துவெளியிட்டனர். சிவலிங்கத்தின் மேல்பகுதி சிதைவுற்றதால் சரிவர காலத்தைக் குறிப்பிட முடியவில்லையென்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

# 11 தமிழர் கடத்தல்:
## முன்னாள் கடற்படை அதிகாரிக்கு சிவப்பு எச்சரிக்கை பிடியாணை

தொடர்ச்சி...

ஒருவரான கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்காவின் விளக்கமறியலை நீதிபதி ஜூன் 31ஆம் திகதி வரை நீடித்தார்.

அதேவேளை இந்த வழக்கின் இன்னுமொரு குற்றவாளியான கடற்படையின் முன்னாள் அதிகாரி சந்தன பிரசாத் ஹெட்டியாராட்சி நீண்ட நாட்களாக தலைமறைவாக இருக்கிறார். அவருக்கான பிணையாணையை வலுப்படுத்திய நீதிமன்றம் அவருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த வழக்கில் காணாமல் போனவர்களுக்காக ஆஜராகும் சட்டத்தரணி திருமதி அசல செனிவிரத்னவுக்கு தொலைபேசி மூலம் உயிராபத்து எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# இறைச்சிக் கடை தேவை : பகிரங்கக் கோரிக்கை




மட்டு மாநகரப் பொதுச் சந்தையில் கடந்த அரை வருடமாக கோழி இறைச்சிக்கடைகள் இரண்டும் மூடப்பட்டே இருக்கின்றன.

காரணம் : மாநகரசபையின் தீர்மானப்படி அமைந்த கூறு இக்கடைகளுக்கான விலைக்கோரலினை ஆசையின் நிமித்தம் எடுத்துவிட்டு, ஆதாயம் பெறமுடியாமல் நஷ்டம் அடைந்ததால், தொடர்ந்தும் இக் கூறு விலைக்கு ஏலத்தில் எடுக்கமுடியாமல் நடத்தியவர்கள் அதனைக் கைவிட்டுவிட்டார்கள். இதனால், வரியிறுப்பாளர்கள் பொதுச் சந்தையில் கோழியிறைச்சியை பெற்றுக்கொள்ள முடியாமல் சிரமப்படுகின்றார்கள்.



சரி, இதன் காரணிகளில் நம் பார்வையை செலுத்திப் பார்ப்போம்.

பிரிக்கப்பட்ட இறைச்சிக் கடைகள்:

---------------------------------------

முன்பு மட். மாநகர பொதுச்சந்தையில் கோழி இறைச்சி விற்பனை செய்யப்பட்டபோது இருதயபுரம், நாவற்குடா, கூளாவடி மற்றும் எல்லை வீதியில் (4 கடைகள்) கோழியிறைச்சி விற்பனை இருக்கவில்லை. இப்போது இவ்விடங்களில் இறைச்சி பகிரங்கமாக விற்கப்படுவதால் பொதுச்சந்தையில் விற்ற இறைச்சிக் கோழிகளின் எண்ணிக்கை எட்டாக பிரிக்கப்பட்டு, இவைகளின் மொத்த எண்ணிக்கையில் எட்டிலொரு பங்கே சந்தையில் விற்பனையாகின்றது.

ஏல விலை கொடுத்து அதை எடுத்து நடத்த ஏலாநிலை

---------------------------------------

மாநகர சபையின் முதலாவது ஏலம் 20.12.2017ல் முடிவுற்றது. ஆகக் குறைந்த ஏலத்தொகையாக எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (850, 000 ரூபா) கோரப்பட்டது. அதனால் யாரும் விண்ணப்பிக்கவில்லை.

பின்பு 31.01.2018ல் இரண்டாவது முறையாக ஏற்கனவே கோரப்பட்ட கூறு விலையில் எழுபதாயிரத்து எண்ணூற்றி முப்பத்தி நான்கு ரூபாவை (70834 ரூபா) குறைத்து, ஏழு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து நுற்றி அறுபத்தாறு ரூபாவுக்கு ஏலம் விடப்பட்டது. அதற்கு யாரும் விண்ணப்பப்படிவமே பெறவில்லை.

யதார்த்தமாக இதன் மீது பார்வையை செலுத்துவோம்.

விண்ணப்ப படிவம்:- 2000ரூபா
மாத வாடகை(3500 X 12) :- 42000ரூபா
கேள்வித் தொகை:- 779,166ரூபா
வருட மொத்தம்:- 823,166 ரூபா

போயா தினங்கள் கழித்து நாளொன்றுக்கு (823166 / 352) 2332ரூபா.

மாநகர பொதுச்சந்தையில் நாளொன்றுக்கு வாடகையாக தீர்மானிக்கப்பட்டுள்ள தொகை 2332 ரூபா.

அதேவேளை எல்லை வீதியில் அமைந்துள்ள கோழிக் கடைகளின் நடத்துனர்களால் கொடுக்கப்படும் வாடகை விபரம்:-

கடை வாடகை :-250ரூபா
நாளொன்றுக்கு மாநகரவரியாக :- 150ரூபா
ஆக மொத்தம் :- 400ரூபா

பொதுச் சந்தை காலை எட்டு மணி தொடக்கம் மதியம் பனிரெண்டு மணி வரையும், நாலு மணித்தியாலம் வியாபாரம் நடைபெறும். எல்லை வீதிக் கடைகள் காலை எட்டுமணி தொடக்கம் இரவு எட்டுமணி வரையும் பனிரெண்டு மணித்தியாலங்கள் வியாபாரம் நடைபெறுகின்றது.



பொதுச் சந்தை நாலு மணித்தியாலத்துக்கு 2332ரூபா
எல்லை வீதி கடைக்கு 400ரூபா

இப்படியிருந்தால் பொதுச் சந்தையில் யாராவது கோழி இறைச்சி விற்க வருவார்களா?

## மட்டு மாநகரசபை கவனிக்குமா ?

இவைகளை கணக்கிட்டு, அதன் தாற்பரியத்தையும், தரவுகளையும் மாநகர பிதாவுக்கு தரவேண்டியது மாநகர சபை கணக்காளரின் கடமையல்லவா? அவரும் சம்பளம் வாங்கும் ஊழியர் தானே!

பொதுச் சந்தை இருக்கும் வட்டாரத்திலிருந்து கோழியிறைச்சி வாங்க கூளாவடி போகவேண்டி இருக்கின்றது. இனியாவது சகலரும் கவனம் எடுத்து கோழியிறைச்சி கிடைக்க நல்லவழி காண்பியுங்கள்.

அதேவேளை பொதுச் சந்தையில் மாட்டிறைச்சிக் கடை ஒன்றும் ஆட்டிறைச்சிக் கடையொன்றும் மாத்திரமே இயங்குவதால் பொதுமக்களுக்கு இதை விட்டால் மாற்றீடு இல்லை. இறைச்சியை தேர்வு செய்து வாங்க மாற்றிடம் கிடையாது. கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்தானே.

பொதுச்சந்தையில் இருக்கும் கோழியிறைச்சிக் கடையிரண்டும், மாட்டிறைச்சிக் கடையிரண்டும் செயற்படத் தொடங்கினால் மாத்திரமே அது மாநகர வரியிறுப்பாளர்களுக்கு செய்யும் பெரிய உபகாரமாக இருக்கும். வரியை அறவிடுவது மட்டுமல்ல மக்களின் மனத்தையும் சம்பாதிக்க வேண்டியது மாநகர சபையின் கடமையல்லவா.



# வண்ணத்துப்பூச்சி சமாதானப்பூங்காவின் 21வது குழ சிறார் விழிப்பூட்டல் நிகழ்வு

மட்டக்களப்பு வண்ணத்துப்பூச்சி சமாதானப்பூங்கா கடந்த 21 வருடகாலமாக சமூகத் தொண்டாற்றி வரும் ஒரு உள்ளூர் நிறுவனமாகும்.

நமது நாடு யுத்த மேகத்தால் சூழப்பட்டிருந்த காலமான 1996ம் வருடம் புரட்டாதி மாதம் 11ம் திகதி தனது பணியினை தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகத்தினருடன் ஆரம்பித்த பூங்காவானது எவ்வித அச்சமுமின்றி நாடு தழுவிய ரீதியில் சிறார்களை மையப்படுத்தி தனது பணியினை முன்னெடுத்து வந்தது.





**நகுலேஸ்**

பூங்காவானது சிறார்கள் மற்றும் இளைஞர்களுடன் உணர்வு ரீதியாக, சிந்தனை ரீதியாக கூடவே பயணிக்கின்றது. நல்லிணக்கமுள்ள சமநிலையான வாழ்வு வாழக்கூடிய ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்புவதே தமது பணி என்று அது பிரகடனம் செய்கிறது.

அந்த வகையில் கடந்த 12.05.2018 சனிக்கிழமை சிறார்களின் 21வது குழுவுக்கான சமூக விழிப்பூட்டல் நிகழ்வினை இலுப்படிச்சேனை அம்பாள் வித்தியாலய சிறார்கள் மூலமாக நிகழ்த்தியது. தெரிவு செய்யப்பட்ட 60 பேர் கொண்ட சிறுவர் குழுவுடன் கடந்த 2017 ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்ட முறைசாராக்கல்வியினூடான உள வலுவூட்டல் நிகழ்வு சிறப்பாக முடிவுக்கு வந்தது.

இந்நிகழ்வின் மூலம் சிறார்கள் தம் கல்வி மற்றும் எதிர்கால வாழ்க்கையை ஆரோக்கியமானதாக முன்னெடுத்துச் செல்லக்கூடியவகையில் உருவாக்கம் பெற்றிருக்கின்றனர்.

மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வில் 60 சிறார்களும் பங்குபற்றியிருந்தனர்.



பூங்காவின் நிறைவேற்று இயக்குனர் அருட்தந்தை போல் சற்குணநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழவில் பாடசாலை அதிபர் ரகுபதி அவர்களும் பிரதி அதிபர் கிருஷாந்தன் மற்றும் விஞ்ஞான ஆசிரியர் விக்டர் ஆகியோரோடு பெற்றோர்கள், கிராம மக்கள், நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்

## கள்ளக் காதல் சொல்லும் பாடல்கள்!

**சட்டத்தரணி, பாடும் மீன், சு.ஸ்ரீகந்தராசா**

கள்ளக்காதல் சம்பந்தமானவைதான் என்று தெள்ளத்தெளிவாக உணரக்கூடிய பல்வேறு பாடல்களும் மட்டக்களப்பின் நாட்டுப்பாடல்களிலே உள்ளன. ஒருவனும், ஒருத்தியும் பெற்றோருக்கோ அல்லது மற்றோருக்கோ தெரியாமல் காதலித்தல் கள்ளக்காதல் அல்ல. காதலர் இருவர் கருத்தொருமித்துவிட்டால் அது இரகசியமாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும் சரி அது நல்ல காதல்தான்.

ஆனால் அந்த இருவரும் முறையற்ற உறவுமுறை உள்ளவர்களாகவிருந்தால், அல்லது முறைகெட்ட தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டவர்களாயிருந்தால் அவர்களுக்கிடையே நிலவுகின்ற காதலே கள்ளக் காதல் என்று கொள்ளப்படுகிறது. அத்தகைய பாடல்கள் சிலவற்றை இந்தப் பகுதியில் சுவைக்கலாம்.

கள்ளக் காதலனைச் சந்திக்கும் ஒருத்தி, தனது கணவனை ஆழ்ந்த நித்திரையில் ஆழ்த்திவிட்டு வருவதைக் குறிப்பதுபோல ஒரு பாடல்.

கஞ்சா உதிர்த்திக்
கறிசமைத்து உண்ணவைத்து
பஞ்சுத்தலையணைமேல்
படுக்கவைத்து நான் வந்தேன்

அவள் மனதுள்குள் இப்படிப் பொருமுகிறாள்.

வாண்டதெல்லாம் இந்த
வயிற்றுக் கொடுமையினால்
இருமல் தலைவலியாம் - கிழவனிடம்
என்ன சுகம் எந்தனுக்கு

அதனால்தான் உன்னிடம் என்னைக் கொடுத்தேன் என்று கள்ளக் காதலனிடம் சொல்லுகின்றாள்.

ஆண்மைக்கரசே
அருளுக் கிருப்பிடமே
தருமத் திருவுருவே - உன்னைச்
சந்திக்க ஓடி வந்தேன்

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் கள்ளக்காதல் என்று ஒன்று குறுக்கிட்டு அதிலே வீழ்ந்துவிட்டால், எவ்வளவு நல்லவனாகக் கணவன் இருந்தாலும்கூட, தவறான வழியில் தன்னோடு இணைகின்ற கள்ளக்காதலன்தான் ஒருத்தியின் மனதில் கணவனையும் விடஉயர்ந்தவனாகத் தென்படுவான்.

கள்ளக் காதலின் விளைவாகக் கருத்தரித்துவிட்ட ஒருத்தியின் உள்ளக் குமறல் ஒன்று இங்கே இப்படிக் கேட்கிறது. தன் காதலனிடம் சொல்கிறாள்



பூத்து மலர்ந்து
பூவாசங் கொண்டிருக்கேன்
பூத்த மரம் காய்க்குமென்றால்
பூவலொன்றே கைதருகும்

அவ்வாறு நடந்துவிட்டால், தன் வயிற்றிலே தங்கிவிட்ட கரு குழந்தையாக வளர்ந்துவிட்டால், பூவலிலே விழுந்து உயிரை மாய்த்துக்கொள்வதைத் தவிரத் தனக்கு வேறு வழியில்லை என்று கூறுகின்றாள். அதற்கு அவனது பதில் இப்படியிருக்கிறது.

பழிகள் வந்தாலும்
பத்தெட்டிறுத்தாலும்
காப்பேனே நானும்
கவலைவிடு கண்மணியே

என்மேல் பழிச்சொல் வந்தாலும் கவலையில்லை, எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை நான் உன்னைக் காப்பாற்றுவேன், நீ கவலைப்படாதே என்று அவன் ஆறுதல் சொல்கின்றான். அவள் மீண்டும் தன் நிலைமையை அழுத்திக் கூறுகின்றாள்.

வந்து வழி பண்ணிடுங்கோ
வம்புக்கிடம் வையாதீங்கோ - இந்தப்
பூத்த மரம் காய்க்குமென்றால்
பூவலென்றே கை தருகும்

விடயம் வெளியில் தெரிய வருவதற்கிடையில் வந்து ஒரு “வழி பண்ணிவிடுங்கள்“ என்று அவளும், அதற்காகப் பழியைத் தாங்கவும், பணம்செலவு செய்யவும் தயாராக இருப்பதாக அவனும் சொல்வதிலிருந்து இவர்களுக்கிடையே நிலவுவது கள்ளக் காதல்தான் என்பதை ஊகிக்க முடிகிறது.

கள்ளக் காதலில்கூட, கருத்தொருமித்த காதல் மட்டுமன்றி, ஒருதலைக் காதலும் உண்டு. கல்யாணமான ஒருத்தியிடம் தனது காம இச்சையை வெளியிடும் ஒருவனின் வாய்ச்சொல்லாக வரும் இந்தப்பாடல் இதில் எந்தவகையானதாகவும் இருக்கலாம். கிராமங்களில் போடியார், வன்னியனார், விதானையார் என்றிவ்வாறு பிரமுகர்களாகவிருந்து அதிகாரம் செலுத்தி வாழ்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சாதாரண குடும்பப் பெண்களிடம் சரசமாடுவதும், தங்கள் இச்சைக்குப் பணியவைப்பதும் அந்தக் காலங்களில் எல்லா இடங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன. அவ்வாறான சந்தர்ப்பமொன்றின்போது பாடப்பட்டதாகவே இப்பாடல் தோன்றுகின்றது.

வஞ்சிக் கொடியே
மனதுமெச்சு உன்னோட
பொழுது தங்கி விளையாட - உங்கட
புருசன் எங்க போனதுகா

தனது எண்ணத்தை இவ்வாறு அவன் வெளியிட்டதும், பதிலேதும் சொல்லாமப் அவள் பட்டென்று கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே போய்விடுகிறாள். வெளியே நின்று மேலும் அவன் பாடுகின்றான்.



பூட்டுப் பலமோ
புருசனுட தத்துவமோ
தாப்பாழ் பெலமோ - என்னைத்
தள்ளிவிட்டுக் கதவடைக்க

ஒருதலைக்காதலால் அல்லது காமநோக்கத்தில் தவறான எண்ணத்தோடு தன்னை அணுகுகின்றவனில் உள்ள வெறுப்பால், கோபத்தால் அவனிடமிருந்து தப்பித்துக்கொள்ளும் எண்ணத்தால் அவள் கதவைச் சாத்தியிருக்கிறாள்.

இன்னுமொரு சந்தர்ப்பத்திலும் இந்தப் பாடல் இடம்பெற்றிருக்கலாம். அவர்களிடையே கள்ளக்காதல் நிலவும் பட்சத்தில், நேரம் சரியில்லை என்பதால், கணவன் வருகின்ற நேரமாயிற்று என்பதால் அல்லது வேறு ஏதாவது காரணத்தால் கள்ளக் காதலனை உள்ளே எடுக்காமல் கதவை அவள் மூடியிருக்கலாம்.

என்னை என்னைப் பார்த்து நீங்க
ஏகாந்தம் பேசாதீங்க
சின்ன எசமான் கண்டால் - என்ர
சீட்டைக் கிழிச்சிடுவார்

வேலைக்காரிமேல் இச்சைகொண்ட, வீட்டுக்காரர்களில் ஒருத்தன்மேல் சீறிப்பாய முடியாத வேலைக்காரி இப்படிச் சொல்லித் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்தாளா? அல்லது இடம் பொருள் பார்க்காமல் இப்படி கண்ட கண்டமாதிரிநடந்து காரியத்தைக் கெடுத்துவிடவேண்டாம், நமது விடயம் வெளியிலே தெரிந்துவிட்டால் என் வேலைக்கு வினையாகிப்போகும் என்று ஏற்கனவே கள்ளக்காதலில் ஈடுபட்டிருந்த வேலைக்காரி தன் காதலனை எச்சரித்தாளா? இரண்டுவிதமாகவும் இந்தப்பாடலை எடுக்கலாம்.

கொட்டுகிறது மழை. வட்டையிலே அவன். கட்டுகிறான் அணை. யாரவன்? கணவனா? இல்லை! கணவனாக இருந்தால் சோவென்று பெய்யும் மழையிலும், தொடர்ந்து வரும் குளிரிலும் தன்னைத் தவிக்கவிட்டு, அவன் அங்கே வயலிலே வாய்க்கால் கட்டிக்கொண்டு நிற்பானா? என்ன செய்வது? அவன் சோர நாயகன்தானே? வெளியிலே சொல்லவும் முடியவில்லை. உணர்ச்சிகளை வெல்லவும் முடியவில்லை என்று தனக்குள்ளேயே மெல்லுகிறாள்.

இந்த மழைக்கும்
இனிவாற கூதலுக்கும் -
என்
சொந்தப் புருசனெண்டா
சுணங்குவாரா
வட்டையிலே !

இந்தப் பாடல் இன்னுமெரு விதமாகவும் எழுந்திருக்க இடமுண்டு. மழைக்காலத்தில், குளிர் நேரத்தில் கட்டிய மனைவியை வீட்டிலே தன்னந்தனியே தவிக்கவிட்டு, வயல்வேலை முடிந்து தாமதமாக வீடுவரும் கணவனிடம், அவனின் மனைவி “எந்த ஒரு சொந்தப் புருசனும் இந்தக் குளிர்காலத்தில் இப்படிச் சுணங்கலாமா? “ என்று ஊடல்கொண்டு சற்றுச் சூடாக இப்படிக் கேட்கிறாள் என்றும் சொல்லலாம். எப்படி எழுந்திருந்தாலும் அற்புதமான ஒரு பாடல் இது!

# சொறுவாமுனை ராமகிருஸ்ணா விளையாட்டுக் கழகம் நடாத்திய எல்லே சுற்றுப் போட்டி

**(விளாவூர் நிருபர்)**

மட்டக்களப்பு - மண்முனை மேற்கு பிரதேசத்திற்குற்பட்ட சொறுவாமுனை ராமகிருஸ்ணா விளையாட்டுக் கழகம் தனது 25வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கிராம மக்களின் அனுசரணையுடன் மாபெரும் எல்லே சுற்றுப் போட்டியினை 12ம்,13ம் திகதிகளில் நடாத்தியிருந்தார்கள்.

இந்த எல்லே சுற்றுப் போட்டியில் பதினைந்து கழகங்கள் பங்குபற்றியிருந்தன. இறுதிப் போட்டிக்கு சொறுவாமுனை மண்ணில் அதிக வெற்றிகளை தன்வசப்படுத்திய கழகங்களான விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகமும். ஆறுமுகத்தான் குடியிருப்பு காந்தி விளையாட்டுக் கழகமும் தெரிவாகியிருந்தன.

இறுதிப் போட்டி முப்பது பந்துகளை கொன்டதாக நடைபெற்றது. முதலாம் இடத்தினை ஆருமுகத்தான் குடியிருப்பு காந்தி விளையாட்டுக் கழகமும், இரண்டாம் இடத்தினை விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகமும், மூன்றாம் இடத்தினை சவுக்கடி ஆதவன் விளையாட்டுக் கழகமும், நான்காம் இடத்தினை சொறுவாமுனை ராமகிருஸ்ணா விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொன்டனர்.

இந்த விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு ராமகிருஸ்ணா விளையாட்டுக் கழக தலைவர் பெ.உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு அதிதிகளாக மண்முனை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் த.ராமகிருஸ்ணன், நாவற்காடு நாமகள் வித்தியாலய அதிபர் த.கோபாலப்பிள்ளை ஆசியோர் வருகை தந்திருந்தனர்.




விளம்பர அனுசரனை

Vijay Construction & Co.
Leading Construction Company – Eastern Province & Island wide No. 01 Distributor – Nestle Lanka PLC.
130/1, Trinco Road, Batticaloa
Proprietor:
Dheshakeerthi
Mr. V. Ranjithamoorthy

அருள் பெற அழைக்கின்றோம்



மட்டுநகர் பிரமாண்ட காட்சியறை
065-2223092



# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்..

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 13

**தமிழ்க்கவி**

பின்நேரம் மூண்டுமணிக்கெல்லாம் நாங்கள் படப்பிடிப்பு தயார் செய்து எங்கட லெக்கேசனுக்குப் போக ஆயித்தம் ஆனா ரங்கனக்காணேல்ல. நான் பிரதியில அவனுக்கெண்டு எழுதின வசனங்களை மற்றாக்களின்ர வசனங்களுக்க மாத்துவம் இனி என்ன செய்யிற, இந்தப்பேய்ன இப்பிடி செய்வானெண்டு ஆர்கண்ட "சரிதம்பி நடவுங்க சமாளிப்பம் எண்டு கமராக்காரப் பெடியளிட்ட சொல்லிப் போட்டு நான் முன்னுக்கு நடந்தன் . பகல் வெளிச்சத்தில எடுக்கிற காட்சியள். நேரம் போனா இருண்டு போம். விட்டு நாளைக்கு மிச்சம் எடுக்கிலும் எனக்கு கமரா இண்டைக்குத்தான் பதிவு. அதோட முதல் எடுததுக்கும் மற்ற நாள் எடுக்கிறதுக்கும் லைற்றிங் மாறுபடும். இப்பத்தையில் நவீன தொழில்நுட்ப கருவியள் அப்ப ஏது வீ. எச் எஸ்ஸுக்கு அடுத்து வந்த மொடல், நாங்கள் லொக்கேசனுக்க போய் இடம் செற்பண்ண ...எடபாவி பின்னால நிக்கிறான். "என்னடாப்பா நான் நல்லாப்பயந்திட்டன்" எண்டன். படப்பிடிப்புக்க நான் சொன்னது,

"வசனம் நான் தாறன் அதை நீ உங்கட ஊர்க்காறரைப்டபோல கதைக்கவேணும்." ஏன்ன கயிட்டப்பட்டும் அவனால ஏலயில்ல ஒண்டில் யாழ்ப்பாணத்தமிழ் கதைச்சான் அல்லது மலையகத்தமிழ் கதைச்சான். "வாறது வரட்டும் நீ எடடா தம்பி" எண்டிட்டு எடுத்தம்.

"என்னக்கா இப்பிடி செய்துட்டாய் எண்டான் கூட நடிச்ச ஆறுமுகம். எடேய் எனக்குத்தேவை கருத்து மட்டுந்தான். அது வந்தாக்காணும். நான் வன்னி, நீ யாழ்ப்பாணம், இவன் மட்டக்களப்பு ஒரு கலவை நல்லா இருக்குமெண்டு பாத்தன் இனி என்ன செய்யிற அவனுக்கு படிப்பிக்கிறது என்ர வேலையில்ல" எண்டு சொன்னன்.

ஆனா நடந்ததென்ன. எடுத்த காட்சியள எடிட்பண்ணக்கதான் பாத்தன். வெகுவா இயல்பாக் கதைச்சிருக்கிறான். கதை கிடக்கட்டன் அவன்ர முகபாவங்கள், எழுதின வசனம் பேசுற மாதிரி இல்லாம இயல்பா தன்னட்டவாரம் கதைக்கிறமாதிரி அப்பிடி ஒரு அழகா இருந்திச்சு. பிறகென்ன தன்ர வேலையளத் தூக்கிப்போட்டிட்டு வாராவாரம் ஒழுங்கா வந்திடுவான். அதுக்காக பணமும் வாங்க மாட்டான்.

இப்பிடியே போனாலும் அவனுக்கெண்டு ஒரு நல்ல வேல கிடைச்சிட்டுது. இயக்கம் சினிமாப்படங்கள சனம் பாக்க அனுமதி குடுத்திட்டுது ஆனா ஒண்டு. தயாரிச்சு வாறதெல்லாத்தையும் அப்பிடியே பாக்க ஏலாது. அதையெல்லாம் திரைப்பட வெளியீட்டுப்பிரிவில போட்டுப்பாத்து, அதிலவாற ஆபாசக்காட்சியள் எண்டு அவை கருதிற காட்சியளை வெட்டிப்போட்டு, அவையட அதாவது திரைப்பட வெளியீட்டுப்பிரிவு வெளியிட்டது எண்ட முத்திரையோடதான் வெளியால விடுவினம். அதெல்லாம் திரைப்பட வெளியீட்டுப்பிரிவின்ர கொப்பிக்கடையிலதான் கிடைக்கும். ஒளிநாடாத்தான் சீடி அப்ப வரயில்ல. ரெண்டுமூண்டு பேரை படம்பாத்து கருத்து சொல்ல வைச்சிருந்தான். வைச்சிருந்தான் எண்டா ரங்கன்தான் திரைப்பட வெளியீட்டுப்பிரிவுப் பொறுப்பாளார்; இந்தப்பிரிவு ஒரு பெரிய வருமானந்தாற பிரிவாத்தான் இருந்தது.

இப்ப ரங்கனும் தான் விரும்பின ஒரு போராளிய திருமணம் செய்திட்டான். ஒரு ஆம்பிளைப்பிள்ளையும் பிறந்திட்டுது. அவன்தனிய இயக்கத்தின்ர மாத வழுங்கல்ல தங்கியிருக்காமல் கோழி வளக்கிறதிலயும் கவனம் செலுத்தினான். அதுக்கெண்டு அவன்ர குடும்பத்தோட உதவியா தங்கியிருந்த உறவினர்கள ஈடுபடுத்தினான்.

இயக்கத்துக்கு பெருமளவு பணத்தை சேர்க்க இவனுக்கு பலவழிகள் இருந்தது. திரைப்பட வெளியீட்டுப்பிரிவால தணிக்கை செய்யப்படாத படங்களை ஆரும் பாத்தா காட்டினா அது தண்டனைக்குரிய குற்றம் எண்டத ஒவ்வொரு படப்பிரதியிலும் காட்சிப்படுத்துவாங்கள். ஆனா உந்த வவுனியாவுக்குள்ள போற சனம் சில நேரம் எல்லா சோதனைச்சாவடியளையும் சுத்திப்போட்டு புதுப்படக்கொப்பியளக் கொணந்திருங்கள். பாருங்களன் தபால் பொதியளே தவால் கந்தோரால கொண்டர முடியாத காலம். இந்த படக்கொப்பியள் வந்திடும்.

இதுகளப்பிடிக்கவெண்டே சந்து பொந்தெல்லாம் பொடியளுக்கு பயிற்சி குடுத்து விட்டிருப்பான் ரங்கன். பிடிபட்டினமோ...தொலைக்காட்சிப் பெட்டி பறிமுதல் படம் காட்டினவர் பாத்தவர் எல்லாருக்கும் சிறைத்தடுப்பும் காட்டினவருக்கு ஒரு பெருந் தொகை அபராதமும் உண்டு. அது பத்தாயிரம்முதல் அம்பதாயிரம்வரை ஆக்களின்ர பெறுமதிக்கு தக்கமாதிரி வரும்; பின்ன இந்த வருமானம் தமிழீழத்தின்ர தேசிய நிதிக்குள்ள போகாது தனிப்பட தமிழிச்செல்வன்ர கைக்குப் போகும் முழுசாப்போகுமா எண்டது தெரியேல்ல.

தமிழ்ச்செல்வன் அதை ஏழைபாளையா இருக்கிற பிரிவுப்பொறுப்பாளர்களுக்கு குடுப்பார் அதுகும் முழுதாப்போகுமோ தெரியாது. இப்பிடி லட்சக்கணக்கில வருமானம் வாற பிரிவெண்டாலும் அதின்ர பொறுப்பாளர் எண்டாலும் நான் அவனுக்கு அம்மாதான். என்ர எல்லாவிசயத்திலயும் தலையிட்டு யோசினை சொல்லுவான் அடிக்கடி சந்திக்க கிடைக்காட்டியும் எப்பவாவது சத்திச்சா எனக்கு உபசாரம்தான்.

எனக்குத்தெரிய அம்மானோட இருந்தவன் எண்டது மட்டுமில்ல, அம்மானில இனி இல்லையெண்ட விசுவாசமும் வைச்சிருந்தவன்தான்; ஆனா, பிரிவெண்டு வரயுக்க அம்மான் செய்தததை அவனால ஏற்கவே முடியேல்ல. பேசப்போனால் அந்தக்கதைய விட்டுரு என்பான். திரைப்பட வெளியீட்டுப்பிரிவு இறுதிப்போர் தொடங்கி கட்டாய ஆட்சேர்ப்பு தொடங்கி நடந்த போது இவனும் அந்த ஆள்பிடிக்க ஒருவனாகிட்டான். திரைப்பட வெளியீட்டுப்பிரிவா இருக்கயுக்கயே சனம் அவனில செம காண்டா இருந்தவைதான். இப்ப அந்தப்பகை பல மடங்காயிட்டுது. இறுதிப்போரில எல்லாப்போராளியளோடயும் அவனும் புனர்வாழ்வு முகாமுக்கு போனான். அங்கயும் பிடிபட்டு விரும்பாமயே இயக்கத்துக்கு கொண்டு போனபிள்ளையளும் இப்ப புலியாத்தானே தடுப்பில இருக்குதுகள். அதுகளின்ர மனவெறுப்பையும் அவன் இயக்கத்தில வைச்ச விசுவாசத்துக்கு விலையாத்தான் வாங்கினான்..

குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடை மெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர் படை பலம் பங்களா வாழ்க்கை பலமுனை திறமை. தனிவாகனம் எடுபிடிகள் நிறைந்த வாழ்க்கையை அவன் விரும்பி ஏற்கேல்ல ஆனா இப்ப எங்கோ குக்கிராமத்தில தன்ர மனிசிபிள்ளையோட அவன் சுகமாக இருக்க வேணும் எண்டதுதான் என்ர விருப்பம்.

அவனப்பத்தி எழுதயுக்க எனக்கு அவனோட இருந்த உறவென்ன எண்டதில் பெரிய ஆதங்கம் வருது. அவன் எனக்கொரு மகன்போலதான். என்னவோ போங்க போரில பிள்ளையளப்பறி குடுத்த எங்களுக்கு, போராளியளப்பாக்கிற நேரமெல்லாம் நம்ம பிள்ளையளும் இப்பிடித்தானே எண்ட ஒரு மாயை அவ்வளவுதான்.


> **அதுகளோட சிலநாள் பேசிப்பழகினா காணும் திண்டதையும் கக்கிக் குடுக்குங்கள்.**

மட்டக்களப்பால வந்த சாதாரணப்போராளியள் நம்ம ஊருப்போராளியளப்போல இல்ல மட்டக்களப்பு பொம்பிளப்பிள்ளையள் தண்ணிவெந்நீ இல்லாம மணலாத்துக் காட்டுக்க நிண்டு, முள்ளியவளை பூதன் வயலுக்க கிடந்த அன்பரசி படை முகாமுக்கு நடந்தேவருங்கள். அந்தப்பக்கம் பஸ் ஓடுறேல்ல ஓடினாலும் அதுகள் ஏறாது. பின்ன கொஞ்ச நஞ்சத்தூரமே. இருவது கிலோமீட்டருக்கும் மேல. கேட்டா நமக்கு பழகிப்போச்சு எண்டு சாதாரணமா சொல்லுங்கள். அதுகளோட சிலநாள் பேசிப்பழகினா காணும் திண்டதையும் கக்கிக் குடுக்குங்கள். அவ்வளவில நெருங்கீருங்கள். ஆனா அதே மட்டக்களப்பு போராளியளுக்கை பொறுப்பில இருந்தவை நேர்மாறாத்தான் நடந்தவை. என்ன இடம்விட்டு இடம் வந்த பிள்ளையள் திரும்பவும் ஊருக்கு போகமுடியாது. விரும்பினாலும் மற்றப்பிரதேசப் பிள்ளையளப்போல வீட்டுக்கும் போக முடியாது இதுதான் இறுதி. என்ன செய்யலாம்?

---

## கடுகுக்கதை
## தண்டிக்கப்பட்ட பேனா

இரு நாட்கள் நடந்த அகோர யுத்தத்தில் எதிரி நாட்டு இராணுவத்திடம் பிடிபட்டுப் கொண்டார் கவிபாடும் கவிஞர் தூயதேவன்.





"நான் எதுவித குற்றமும் செய்யவில்லை, துப்பாக்கி தூக்கி நான் சன்டை போடவுமில்லை தங்களில் யாரையும் கொல்லவுமில்லை என்னிடம் என் பேனாவைத் தவிர எதுவித சொத்துமில்லை. ஆகவே என்னை கொல்லாமல் விடுதலை செய்வதே யுத்த நியாயமாகும்" என்று தன் விடுதலைக்காக வாதிட்டார் கவிஞர் தூயதேவன்.

எதிரிநாட்டுத் தளபதி கூறினான் "ஆயுதங்கள் கொண்டு போரிடவரும் போராளிகளை விட நீ ஆபத்தானவன். போர் புரிகின்ற துணிச்சல் உன்னிடமில்லையே தவிர, கவிகள் பாடி மற்றவர்களிடம் போர் வெறியைத் தூண்டுகிறவன் நீ". அதனால் உன்னை விட்டுவிட முடியாது. ஏனேனில் நீயொரு "பேனாப் போராளி"," என்று கூறி தன்டனையை நிறைவேற்றும்படி கட்டளையிட்டுவிட்டு பின்வருமாறு கூறினான்.



**கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா**

> **வேட்டுத் தீர்த்து போரிடுபவன் "ஆயுதப் போராளி" பாட்டுப்பாடி போரைத் தூண்டுபவன் "பேனாப் போராளி"**

# இந்துப் பண்பாட்டில் கவனிக்கப் பட வேண்டிய பக்கம்-1

**(மட்டக்களப்பின் இந்துத் தெய்வங்களையும் வழிபாட்டினையும் மையப் படுத்திய சில சிந்தனைகள்)**

மட்டக்களப்பு மாவட்டம் சிறுதெய்வ வழிபாட்டிற்கு மிகவும் பெயர்பெற்ற இடமாகும். இங்குள்ள இந்து மக்களிடையே பிரதான ஓட்டத்தில் காணப்படும் சமய நெறியும் இதுவே. கடந்த இதழில் குறிப்பிடப்பட்டபடி மட்டக்களப்பிலே மாரியம்மன், காளியம்மன், திரௌபதியம்மன், கண்ணகியம்மன், கடலாச்சியம்மன், படபத்திரகாளியம்மன், பிரத்திர காளியம்மன், முத்துமாரியம்மன், பத்தினியம்மன், பேச்சியம்மன் எனப் பெண் தெய்வங்களும் வைரவன், நாகதம்பிரான், பெரிய தம்பிரான், நரசிங்க வைரவர், குமாரர், வதனமார், மாறா. புள்ளிக்காரன், தெவுத்தன் என்ற ஆண் தெய்வங்களும் வணங்கப்படுகின்றனர்.






மட்டக்களப்பிலே பெண் தெய்வங்களே அதிலும் மாரியம்மன் கோயில்களே

## தெய்வமாக உருவேறி ஆடுபவர்களுடம் மக்கள் நேரடியாக பேசி உறவாடுவர்

அதிகம். மட்டக்களப்பில் வருடாவருடம் இச்சிறு தெய்வக் கோயில்கள் விமரிசையாகத் திறக்கப்பட்டு உற்சவம் நடைபெறும். கோயிலைத் திறத்தல் கதவு திறத்தல் என்றும் உற்சவத்தினை சடங்கு என்றும் மட்டக்களப்பு மக்கள் அழைப்பர். மட்டக்களப்பில் கண்ணகியம்மன் சடங்கும், அதில் நடக்கும் குளிர்த்தியும் தனித்துவமானவை.

இச்சிறு தெய்வ உற்சவங்கள் (சடங்குகள்) 3 நாட்கள், 5 நாட்கள், 7 நாட்கள் என கோயிலுக்குக் கோயில் வித்தியாசப்படும். வைகாசி மாதம் தொடக்கம் புரட்டாதி மாதம்வரை மாறிமாறி மட்டு நகரின் கிராமங்கள் சடங்குக் கோலமாகவே

## ஆடலும், இனிய பாடல்களும் நிறைந்த வழிபாட்டு முறை

இருக்கும். சடங்கு நாட்களின் அளவு, கோயிலின் தன்மை அதனை நடத்தும் மக்கள் அவர்களது பொருளாதாரப்பலம் என்பவற்றிக்கிடையே வேறுபாடு காணப்படும். இக்கோயிலில் பூசை புரிபவர்கள் ஆரம்பத்தில் கூறியதுபோலவே பூசாரிகள் என அழைக்கப்படுவர். ஒரு கோயிலுக்கு ஒருதலைப் பூசாரியும் அவருக்குத் துணையாக ஓரிரு பூசாரிகளும் அமர்த்தப்படுவார்கள். பக்ததி முறையிலேயே தாம் இப் பூசையைச் செய்வதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

கோயிற் சடங்கு முறையில் கதவு திறந்த பின் கும்பம் வைத்து தம்பணம் செய்து, கும்பத்திற்கு மந்திர வலிமையினால் தெய்வ உருக்கொடுத்து அல்லது தெய்வத்தை கும்பத்தில் வரவழைத்து பூசை பண்ணுவதாக இவர்கள் கூறுகிறார்கள். மந்திர உற்சாடனங்கள், அட்சரக்கோடுகள் என்பனவே கிரியைகளின் போது பயன்படுத்தப்படுகின்றன. மந்திரத்தால் தெய்வமே ஆடும் வரை ஆடவைத்தல், கட்டுதல் வாழ்த்துதல், அதனை வெட்டுதல், எழுப்புதல் என்பன இச்சிறு தெய்வக் கோயில்களில் இடம்பெறும்.

மக்கள் உடல்வளம், உளவளம், பொருள்வளம், மழைவளம், பிள்ளைவளம் வேண்டி இப்பூசைகளில் ஈடுபடுவர். இச்சடங்குகளில் இறுதி நாள் ஒன்றில் கடலுக்குச் சென்று கும்பம் சொரிவதாக இருக்கும் அல்லது தீப்பாய்வதாக இருக்கும் அல்லது பள்ளயமாக (பழம்சோறு படைத்தலும் கொடுத்தலும்) இருக்கும். அல்லது பொங்கலாக இருக்கும். அல்லது ஆடு, கோழி பலி கொடுத்தலாக இருக்கும்.

இறுதி நாள் சடங்குடன் கோயில் மூடப்படும். அடுத்த வருடம் தான் மீண்டும்



கோயில் திறபடும்.

இச்சிறு தெய்வக் கோயில் அமைப்புக்கள் தனித்துவமானவை. இக்கோயிலுகளுக்கென அமைக்கப்படும் பந்தல்கள், தோரணங்கள், குருத்தோலை அலங்காரங்கள் அம்மனை அலங்கரிக்கும் விதம் (அம்மனின் முகங்களை மாத்திரம் வைத்து அதற்குப் போல அடுக்குச் சாத்தி முழுப்பெண்ணுருவமாகக் காட்டும் முறை) கும்பத்தின் முன்னால் மடை (வாழைப்பழம், கமுகம் பூ, வெற்றிலை) முதலியன வைக்கும் முறை தெய்வத்தை வரவழைக்க உச்சரிக்கப்படும் மந்திரம், சூலங்களை வைக்கும் முறை, சூலங்களையும், மடைகளையும், ஏந்திய வண்ணம் பூசாரியார் தெய்வம் ஏறி ஆடுவோர் புடைசூழக் கோயில் வலம் வரும் முறை, அதற்கு பக்தர்கள் கற்பூரச் சட்டி தாங்கிச் செல்லும் முறை, பெண்கள் எழுப்பும் குரவை ஒலி. தெய்வம் ஏறி



ஆட்டுவோரை ஆட்டுவிக்க பக்தர்களால் பாடப்படும் காவியம், தாலாட்டு, அம்மானை ஊஞ்சல் முதலான பாடல்கள், கண்ணகி அம்மன் கோயில்களில் பாடப்படும் கண்ணகி அம்மன் குளிர்த்தி பாடல்கள், மாரி அம்மன் கோயிலிற் பாடப்படும் மாரி அம்மன் காவியம், மாரி அம்மன் குளிர்த்திப்பாடல்கள் என்பன இச்சிறு தெய்வ வணக்க வழிபாட்டு முறைகளின் தனித்துவமான செயற்பாடுகளும் பாடல்களுமாகும்.

இச்சிறு தெய்வக் கோயில்களிற் பாடப்படும் பாடல்கள் தேவாரம் போல பக்தியும், கனிவும், வேண்டுதலும் நிறைந்தவை. அம்மா,அம்மா என அம்மனை நெஞ்சுக்கு நெருக்கமாக அழைத்து விழிப்பவை. இக்கோயில்களிற் பாவிக்கப்படும். உடுக்கு, பறை, சிலம்பு, அம்மனைக்காய், சேகண்டி, சிலம்பு, சவணிக்கை என்பன இத்தெய்வங்களை ஆடவைக்க இசைக்கப்படும் வாத்தியங்களாகும். இவை இந்து மக்களின் இசைப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும்.

சிறுதெய்வம் ஏறி ஆடும் தெய்வக்காரருடன் மக்கள் நேரடியாக பேசி வழிபடுவர். அவர்களில் மாரி, காளி, கண்ணகி முதலாம் தெய்வங்களைக் கண்டு அத்தெய்வங்களை அம்மா, ஆச்சி, தாயே, சாமி என்று நெருக்கிய உறவு கொண்டாடி நெருக்கமான ஒரு குடும்ப உறவு நிலையிலேயே அத்தெய்வகளுடன் தொடர்பு கொள்வர்.

## அம்பாறை மாவட்ட கூடைப்பந்தாட்டச் சாம்பியனாக காரைதீவு அணி தெரிவு!

தேசிய இளைஞர் சேவைமன்றம் நடாத்திய அம்பாறை மாவட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான மாவட்டமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் காரைதீவு அணி 49க்கு 10 என்ற அடிப்படையில் கல்முனை தமிழ் அணியை வெற்றிபெற்று மாவட்ட சாம்பியானகத் தெரிவானது.

இம்மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டப்போட்டி கல்முனை உவெஸ்லி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இளைஞர்சேவை மன்ற அம்பாறை மாவட்ட அதிகாரி எம். முபாறக் முன்னிலையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் காரைதீவு அணியும் கல்முனை தமிழ் அணியும் மோதின.



காரைதீவு நிருபர் சகா

இறுதியில் 49க்கு 10 என்ற அடிப்படையில் காரைதீவு மாவட்ட சாம்பினாகத் தெரிவுசெய்யப்பட்டது.

காரைதீவு அணி கடந்த பலவருடங்களாக கூடைப்பந்தாட்டத்தில் மாவட்ட சாம்பியனாகத் தெரிவாகி, சாதனை படைத்துவருவது தெரிந்ததே.

கடந்தாண்டு தேசியமட்டப்போட்டியில் பங்கேற்ற காரைதீவு அணி, இரண்டு புள்ளியால் தோல்வியைத்தழுவியது.





இம்முறை தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் தேசியமட்டவிளையாட்டுப்போட்டி அடுத்தமாதம் காலியில் நடைபெறவிருக்கிறது. அப்போட்டியில் காரைதீவு அணி பங்கேற்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.



# மெர்க்குரிப் பூக்கள் தந்த பாலகுமாரன்



தமிழின் பிரபல எழுத்தாளரும் சினிமா வசனகர்த்தாவுமான பாலகுமாரன் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 72.

ஏற்கனவே இருமுறை இருதய அறுவை சிகிச்சை செய்திருந்த பாலகுமாரன், நுரையீரலில் ஏற்பட்ட தொற்றின் காரணமாக, சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவந்தார். ஆனால், அந்த சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சென்னை மயிலாப்பூரில் வசித்துவந்த பாலகுமாரனுக்கு கமலா, சாந்தா என இரு மனைவியரும் ஒரு மகனும் ஒரு மகளும் உண்டு. தஞ்சாவூரில் திருக்காட்டுப் பள்ளி அருகே உள்ள பழமார்நேரி என்ற கிராமத்தில் 1946ஆம் ஆண்டு ஜூலை ஐந்தாம் தேதி பிறந்த பாலகுமாரன், பள்ளி இறுதிப் படிப்புவரை மட்டுமே படித்தவர். பிறகு டா∴பே என்ற தனியார் நிறுவனத்தில் பணியாற்றிவந்த அவர், 1969வாக்கில் கவிதைகளை எழுதத் துவங்கினார். முதலில் கசடதபற இதழிலும் பிறகு வெகுஜன இதழ்களிலும் அவர் எழுத ஆரம்பித்தார்.

அதன் பிறகு சிறுகதைகளிலும் பிறகு நாவல்களிலும் கவனம் செலுத்த ஆரம்பித்த பாலகுமாரன், இதுவரை 274 நாவல்களை எழுதியிருக்கிறார். நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார் அவர். எழுத்தாளர் சாவி நடத்திவந்த சாவி இதழிலும் சிலகாலம் பாலகுமாரன் பணியாற்றியிருக்கிறார். ஆசிரியராக இருந்த தன்னுடைய தாய் சுலோச்சனாவிடமிருந்தே பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்றுக்கொண்டதாகக் குறிப்பிடும் பாலகுமாரன், துவக்க காலத்தில் ஆனந்த விகடன், கல்கி ஆகிய இதழ்களில் தொடர்ச்சியாக எழுதினார்.

### சினிமா பங்களிப்பு

சினிமாவிலும் குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்புச் செய்திருக்கும் பாலகுமாரன், இயக்குனர் கே. பாலச்சந்தரிடம் உதவி இயக்குனராகவும் பணியாற்றியவர். சிந்து பைரவி, புன்னகை மன்னன், சுந்தர சொப்பனங்களு ஆகிய படங்களில் பாலச்சந்தருடன் பணியாற்றினார் பாலகுமாரன். நாயகன், குணா, செண்பகத் தோட்டம், ஜென்டில்மேன், காதலன், கிழக்கு மலை, பாட்ஷா, சிவசக்தி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட படங்களுக்கு வசனம் எழுதிய பாலகுமாரன், பாக்யராஜ் நடித்த இது நம்ம ஆளு படத்தையும் இயக்கியுள்ளார்.

இவருடைய நாவல்களில் மெர்குரிப் பூக்கள், இரும்புக் குதிரைகள் ஆகியவை மிகவும் குறிப்பிடத்தகுந்த படைப்புகளாகும்.

"கல்கியில் வெளிவந்த இரும்புக் குதிரை ஒரு மிகச் சிறந்த படைப்பு. எல்லாவற்றுக்கும் மறுபக்கம் உண்டு என்பதை அந்த நாவல் காட்டியது. அடித்தள மக்களைப் பற்றிய மத்திய தர வர்க்கத்தின் கருத்துக்களை புரட்டிப்போட்டது. குதிரையைப் பற்றிய நிறைய கவிதைகள் அந்த நாவலின் ஊடே இருந்தன. கல்கி மாதிரியான ஒரு வெகுஜன பத்திரிகையில் அதைச் செய்தது பெரிய சாதனை" என்கிறார் எழுத்தாளரும் பத்திரிகையாளருமான மாலன்.

### இளைஞர்களை பெரிதும் பாதித்த எழுத்தாளர்

உடையார் என்ற பெயரில் ராஜராஜ சோழனைப் பற்றியும் தஞ்சைப் பெரிய கோவிலைப் பற்றியும் 6 பாகங்களில் இவர் எழுதிய நாவல் இவருடைய குறிப்பிடத்தக்க படைப்புகளில் ஒன்று. "அவரை நவீன எழுத்தாளர் இல்லை என்று சொல்ல முடியாது. நாவலில் கவிதைகளைப் பயன்படுத்தியதே ஒரு நவீன முயற்சிதானே. பிற்காலத்தில் ஆன்மீகத்தைச் சொல்ல அவர் தன் எழுத்தைப் பயன்படுத்தியது குறித்து பலருக்கு விமர்சனம் இருக்கலாம். ஆனால், அது அவருடைய தேர்வு" என்கிறார் மாலன்.

80களின் துவக்கத்தில் இளைஞர்களை வெகுவாக பாதித்த எழுத்து பாலகுமாரனுடையது என்கிறார் எழுத்தாளரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளருமான து. ரவிக்குமார்.
தமிழ் கலாசாரத்தில் ஈடுபாடு "மெர்க்குரிப் பூக்கள் வடிவமைப்பிலும் நேர்த்தியிலும் மிகச் சிறந்த படைப்பு. அந்தத் தொடர் வெளிவந்த காலத்தின் இளைஞர்களின் மனநிலையை அது வெகுவாகப் பாதித்தது. தமிழ்க் கலாசாரம் தொடர்பான விஷயங்களில் மிகுந்த தேர்ச்சியும் ஈடுபாடும் இருந்தது அவருக்கு. அதைப் படிக்க வேண்டும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். இவரை ஜெயமோகனோடு ஒப்பிட்டால், பல முயற்சிகளில் பாலகுமாரன் மேலானவர். காரணம், தமிழ் மரபு மீது அவருக்கு இருந்த புலமைதான் காரணம்" என்கிறார் ரவிக்குமார். பாலகுமாரன் கடந்த பல வருடங்களாகவே ஆன்மீகம் குறித்து எழுதுவது, யோகி ராம்சுரத்குமார் சத்சங்கம் என்ற பெயரில் ஆன்மீகக் கூட்டங்களை நடத்துவது எனச் செயல்பட்டுவந்தார். "பாலகுமாரன் தன் ஆன்மீகத்தை மற்றவர்களின் மீதான வெறுப்பாக மாற்றவில்லை. அது மிக முக்கியமானது" என்கிறார் ரவிக்குமார்.

-- நன்றி பிபிசி

## 'மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி உள்ளிட்ட நகரங்களிலுள்ள இராணுவ முகாம்கள் விரைவில் அகற்றப்படும்'

மட்டக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக பொலிஸ் மற்றும் இராணுவத்தினர், பாதுகாப்புப்படையினரின் வசம் உள்ள காணிகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன். அதிலுள்ள பிரச்சினைகளும் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த செயலாளர்,

"யுத்தம் முடிவடைந்த பின் 58000 ஏக்கர் காணிகள் மொத்தமாக பாதுகாப்புப் படையினர் வசம் இருந்தது. அதில் 9896 அரசாங்கக்காணிகளையும், 18702 தனியார் காணிகளையும் -மொத்தமாக 28599 ஏக்கர் காணிகளை - இதுவரை இராணுவம் விடுவித்திருக்கிறது. மேலதிகமாக அரசாங்கக்காணிகளை உடனடியாக வெளியேறுவதற்கு வாய்ப்பில்லாத காரணத்தினால், இன்னும் தனியார் காணிகள் 7650 ஏக்கர் காணிகள் பாதுகாப்புத் தரப்பினர் கையில் இருக்கின்றன.

அவற்றில் தற்பொழுது எடுத்த நடவடிக்கைகளின் படி அண்ணளவாக 3000 ஏக்கர்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2778 ஏக்கர் அவர்களுடைய கைகளில் இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.
மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில், மக்களுக்குத் தேவையில்லாத அரசாங்கக்காணிகளை தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்கு பிரதேச செயலாளர்களும், அரசாங்க அதிகாரிகளும் அனுமதித்ததின் பேரில் இராணுவ முகாம்களையும், அதனையண்டிய பிரதேசங்களையும் வைத்திருப்பதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

ஆனால் எது எது மக்களுக்கு முக்கியமாகத் தேவையாக இருந்ததோ, அல்லது அரசாங்கத்திற்குத் தேவையானதாக இருந்ததோ அவ்வாறான காணிகள் அடையாளம் காணப்பட்டுக்கின்றன. அவ்வாறான காணிகளுக்கு மாற்றீடான காணிகளைக் கொடுத்தபின் அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு உத்தரவாதம் வழங்கியிருக்கிறார்கள்.

அவர்களுக்கும் அந்தக் காணிகளை மாற்றம் செய்யும் பொழுது கட்டடங்களைக் கட்டுவதற்கு பொருள் வசதி தேவையாக இருக்கின்றது. அவ்வாறான தாமதங்கள் இருப்பதனால் சில இடங்களில் 6 மாதங்களுக்குள் விடுவிப்பதற்கும் சில இடங்களில் ஒருவருட காலத்துக்குள் விடுவிப்பதற்கும் அவர்கள் இணங்கியிருக்கிறார்கள்." என்றார்

## "கொழும்பு மேயரின் வாசஸ்தல கழிவறைகளை திருத்த 5 கோடி"

கொழும்பு மேயரின் உத்தியோகபூர்வ வாசஸ்தல கழிவறைகளை நவீனமயப்படுத்த 5 கோடியே 70 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபை கூட்டத்தில் மாநகர உறுப்பினர் சுமித் பசப்பெரும கூறியுள்ளார்.

மாநகர பொதுக் கழிவறைகள் மிகவும் மோசமாக நிலையில் இருக்கையில், வரியிறுப்பாளர்களின் பெருந்தொகைப் பணத்தை இவ்வாறு விரயம் செய்வது தவறு என்று அவர் கூறியுள்ளார்.

இதற்குப்பதிலளித்த மேயர் ரோசி சேனநாயக்க, 4 வருடகாலமாக பயன்படுத்தப்படாமல் சீரழிந்து போய் இருந்த கழிப்பறைகளை திருத்த தான் முடிவெடுத்ததாகவும், கொழும்பு நகர் எங்கிலும் பழுதடைந்த கழிப்பறைகளை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

## "யுத்த சூழலில் இடம்பெயர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் சத்தியக் கடதாசி சமர்ப்பித்து மேன்முறையீடு செய்ய முடியும்" - ஆளுனர்

தொடர்ச்சி... விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் இதன் போது தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனை செவிமடுத்த ஆளுநர் அவ்வாறான அசாதாரண நிலைமைகளைக் கருத்தில் எடுத்து அவர்களுக்கு நியாயம் வழங்கப்படும் என்று கூறியதோடு, இந்த விடயத்தைத் தெரியப்படுத்துவதான ஒரு சத்தியக் கடதாசியை சமர்ப்பிக்குமாறும், அந்த சத்தியக் கடதாசியின் கீழ்ப்பகுதியில் குறித்த பகுதி கிராமசேவகர் குறித்த காலப்பகுதியில் அப்பிரதேசத்தில் இடப்பெயர்வு நடைபெற்றதை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.
அத்துடன் 17 திகதி வரையாக இருந்த மேன்முறையீடு செய்வதற்கான இறுதித் திகதி 31ம் திகதி வரை நீடிக்கப்படுவதாகவும், உண்மையான தொண்டர் ஆசிரியர்களுக்கு நியாயம் வழங்கப்படும் என்றும் வலியுறுத்தினார்.



## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

# கவிஞர் சண்முகம் சிவலிங்கம் நினைவுகள்

முருகபூபதி

எவரும் எதிலிருந்து தப்பினாலும் மரணத்திலிருந்து தப்பமுடியாது. ஆனால், தமக்கு மரணம் எப்படி வரவேண்டும் என்ற விருப்பத்தை சொல்வார்கள். அமைதியான, எவருக்கும் தொல்லை தராத, அழுந்தாத, நாள் கணக்கில் படுக்கையில் கிடந்து அவலப்படாமல், நித்திரையிலேயே உயிர் போய்விடவேண்டும் என்று விரும்புபவர்களைத்தான் பார்க்கின்றோம்.

“இரவிலோ பகலிலோ உறங்கி, அந்த உறக்கத்திலேயே எந்தச்சலனமும் இன்றி அமைதியாக உயிர்பிரிந்துவிட வேண்டும்“ எனச்சொல்பவர்களில் இதனை வாசிக்கும் நீங்களும் ஒருவராக இருக்கலாம்.

அவ்வாறு மறைந்து விடுபவர்களை Silent Attack வந்து போய்விட்டார்கள் என்போம்.

ஈழத்தின் மூத்த படைப்பாளியும் பலரதும் ஆசிரியப் பெருந்தகையுமான சண்முகம் சிவலிங்கம் அவர்கள் தமது மரணம் குறித்து தீர்க்கதரிசனத்துடன் வாழ்ந்தவரா...? என்ற எண்ணம் அவரது பின்வரும் கவிதையை படித்ததும் வருகிறது.

நான் மறைந்துவிடுவேன்;
நான் இருந்தேன் என்பதற்கு
எந்தத்தடயமும் இருக்காது. ஆனால்,
எனது இருப்பு
காற்றுக்குள் ஊதியிருக்கும்.
அதை நீங்கள் காணமாட்டீர்கள்.
எனது இருப்பின் வன்மம்
அவலங்களின் சின்னமாயிருக்கும்.
அதை நீங்கள் அறியமாட்டீர்கள்
தொலைக்காட்சியில்
வானொலியில்புகைப்படத்தில்
அல்லது ஒரு பாராட்டுக்கூட்டத்தில்
என்னை மலினப்படுத்த முடியாது.
ஒன்றும் இல்லாமைக்குள்
எனது ஒரு கண்
என்றும் ... சிவப்பாய் இருக்கும்.


சண்முகம் சிவலிங்கம் இந்தக்கவிதைக்கு “ இருப்பின் வன்மம்“ என்று தலைப்பிட்டுள்ளார்.

அவரை அவர் பிறந்து வாழ்ந்த கிழக்கிலங்கையில் கல்முனை - பாண்டிருப்பு பிரதேசத்தில் அவருக்குப்பிரியமான சைக்கிளுடனேயே காண்பார்கள். வழக்கமாக இரவில் அருகில் இருக்கும் நண்பர்களை பார்க்கச்செல்வார். வீடு திரும்பி, இரவு உணவுக்குமேல் நெடுநேரம் எழுதுவார். படிப்பார். அதன்பிறகு உறக்கத்துக்கு செல்வார். அப்படி ஒரு நாள் இரவு உறங்கச்சென்றார். மறுநாள் அவரது மனைவி திருமதி தங்கராணி சிவலிங்கம் அவரை துயில் எழுப்பச்சென்றார். அவரது உறக்கம் கலையவில்லை. கணவர் ஆழ்ந்த உறக்கத்திலிருப்பதாக நினைத்துக்கொண்டு, மனைவி தனது வீட்டுவேலைகளில் மூழ்கினார். மேலும் அரைமணி நேரம் காத்திருந்துவிட்டு மீண்டும் கட்டிலருகே சென்று தட்டி எழுப்பினார்.


சண்முகம் சிவலிங்கம

அவர் எழும்பவே இல்லை. 20-04-2012 ஆம் திகதியன்று இரவு அவர் உறங்கிய இரவே, அவரது கடைசி இரவு. அவர் விரும்பியிருந்தவாறே அவர் மறைவு சம்பவித்திருக்கிறது. அது அவருக்கு கிட்டிய கொடுப்பினை. சண்முகம் சிவலிங்கம் மறைந்தார் என்ற செய்தியை லண்டன் பி.பி.சி. தமிழோசையில் கேட்டதன் பின்னர் அவரது மனைவியுடன் தொலைபேசியில் உரையாடி கவலையை தெரிவித்தேன்.

கிழக்கிலங்கையின் மூத்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம், 1939 ஆம் ஆண்டில் பிறந்து 2012 ஆம் ஆண்டில் திடீரென மறைந்தார். 1972 முதல் எனக்கு நண்பராக விளங்கியிருக்கும் சண்முகம் சிவலிங்கம் பற்றியும் விரைவில் வெளியாகவுள்ள எனது காலமும்




கணங்களும் நூலில் விரிவாக பதிவுசெய்துள்ளேன்.


அவர் எப்பொழுதும் வித்தியாசமாகச் சிந்திப்பவர். அவரது பிள்ளைகள் ஆறு ஆண்மக்கள். அதில் ஒருவரை இராணுவம் சுட்டுக்கொன்றது. துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நடந்தது அறிந்து வெளியே சென்ற மகனை அவர் தேடிச்சென்றார். அவர் கண்முன்னாலேயே சிலரது சடலங்கள் ட்ரக்கில் செல்வதையும் பார்த்திருக்கிறார். அதில் அவரது மகனும் ஒருவர் என்பது விடிந்த பின்பே அவருக்குத் தெரியவந்தது. என்னிடம் மகனின் இழப்பு குறித்து அனுதாபம் தேடும் உணர்வோடு 2005 இல் அவர் பேசவில்லை. மகனின் மரணத்திலிருந்து அவர் அக்கால கட்டத்திற்கேயுரிய பிரத்தியேக சமூகச்செல்வாக்கைத் தேடவில்லை. அதிலிருந்து அவர் மலினப்படுத்த முடியாத பிறவி என்பது தெளிவாகின்றது.

மீண்டும் ஒரு கிழக்கிலங்கை பயணத்தில் பாண்டிருப்புக்குச் சென்றேன். அன்று இரவு நானும் நண்பர் நற்குணசிங்கமும் அவரது வீடு தேடிச்சென்று கேட்டை தட்டும் வரையில் நான் வருவது அவரது மனைவிக்கும் மகனுக்கும் மருமகளுக்கும் தெரியாது.

அவர் மறைந்து ஓராண்டு காலத்தின் பின்னர் வெளியான நினைவு வெளி என்ற மலரை திருமதி சண்முகம் சிவலிங்கம் தந்தார். அதில் அவரது கவிதைகள், கட்டுரை, சிறுகதை வெளியாகியிருக்கின்றன.

மலரை வெளியிட்டவர்கள் அவருடைய பிரியமான சைக்கிளின் படத்தையும் அதில் பதிவு செய்துள்ளனர். அதன் நாயகன் இன்றி வழக்கம்போல் அது மௌனித்து நிற்கிறது.

அதில் அவரது வன்மம் படிந்திருக்குமா...? என்பது




தெரியவில்லை.

கடந்த ஆண்டு (2017 ) மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்திலிருந்து புறப்படத்தயாரானபோது ஒரு அன்பர் என்னிடம் வந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, தாம் வெளியிடும் விருந்து கலை, இலக்கிய இதழைத் தந்தார்.

எனது கைக்கு வந்தது கிழக்கிலங்கை பாண்டிருப்பிலிருந்து இருமாதங்களுக்கொருமுறை வெளியாகும் விருந்து. வெல்லும் தமிழ் - எங்கள் வெல்லத்தமிழ் என்ற கவித்துவ மகுடத்துடன் இதனை வெளியிட்டுவரும் அதன் ஆசிரியர் அகரம். செ. துஜியந்தன் இதழையும் தன்னையும் அறிமுகப்படுத்திக்கொண்டார்.

எனக்குத்தரப்பட்டது அதன் மூன்றாவது இதழ். இவ்விதழ் வெளியாகும் ஊரில் பிறந்து வளர்ந்து, இலக்கியப்பணியும் ஆசிரியப்பணியும் புரிந்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம் அவர்களை நினைவுகூரும் வகையில் குறிப்பிட்ட விருந்து வெளியாகியிருக்கிறது.

எனக்குக் கிடைத்த விருந்து இதழில் கவிஞர் சடாட்சரன், ஜெஸ்மி எம்.மூஸா ஆகியோரும் அவரைப்பற்றி எழுதியிருக்கின்றனர்.

சண்முகம் சிவலிங்கம் அவர்களை அடிக்கடி கொழும்பில் நண்பர் இலக்கிய விமர்சகர், கவிஞர் பேராசிரியர் எம். ஏ. நுஃமான் அவர்களின் கொள்ளுப்பிட்டி அறையில் சந்திப்பேன்.


மனைவியுடன் சண்முகம் சிவலிங்கம்

அக்காலப்பகுதியில், புதுக்கவிதை வீச்சுடன் எழுந்திருந்தது. அதனை ஏற்பதா? நிராகரிப்பதா? என்ற விவாதங்களையும் இலக்கிய இதழ்கள் தொடக்கியிருந்தன. பல புதிய கவிஞர்கள் புற்றீசலாக வெளிக்கிளம்பி, புதுக்கவிதைகளை எழுதிக்குவித்தனர்.

அவர்களுக்கு தமிழ்நாடு வானம்பாடி கவிஞர் குழாமும் உத்வேகம் தந்திருந்தனர். நண்பர் (அமரர்) கவிஞர் ஈழவாணன் 1975 இல் அக்னி என்ற புதுக்கவிதை சிற்றிதழை நடத்தினார்.

அதன் முதல் இதழ்வெளியீட்டு அரங்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திருமதி பாலம் லக்ஷ்மணன் தலைமையில் நடந்தபோது, சண்முகம் சிவலிங்கம், நுஃமான் ஆகியோருடன் நானும் உரையாற்றியிருக்கின்றேன்.

இலக்கணத்தை தெரிந்துகொண்டு அதனை மீறவேண்டும் என்ற வாதப்பிரதிவாதங்கள் மேலோங்கியிருந்த காலப்பகுதியிலும் அதற்கு முன்னரும் பின்னரும் எழுதியவர் சண்முகம் சிவலிங்கம்.

எமது முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசிய ஒருமைப்பாடு மாநாடு 1974 இல் கொழும்பில் பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்தபோது, இரண்டாம் நாள் நடைபெற்ற நிகழ்ச்சியில் கவிஞர் இ. முருகையன் தலைமையில் கவியரங்கும் இடம்பெற்றது.

அதில் கவிதை சமர்ப்பித்த சண்முகம் சிவலிங்கம், தேசிய ஒருமைப்பாடு ஒருவழிப்பாதையல்ல என்ற தொனிப்பொருளில் கருத்துக்களை முன்வைத்திருந்தார். எதிர்காலத்தில் எங்கள் தேசத்தில் நேர்ந்துவிடக்கூடிய அபாயங்களை அவர் அன்றே தீர்க்கதரிசனமாக முன்வைத்தார்.

எனது இலக்கிய நண்பர்கள் வட்டத்திலிருந்து அவரும் விடைபெற்றார். நினைவுகள்தான் எஞ்சியிருக்கின்றன.

( பயணங்கள் தொடரும்)



# கட்டிளமைப் பருவ உளநலம்




டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

இறைவன் படைப்பில் ஆணுக்கு துணையாக பெண்ணையும் இவர்கள் இருவர் ஊடாக சந்ததியையும் உருவாக்கினார். கிறிஸ்தவர்களின் வேதாகமத்தின் கூற்றுப்படி; ஆதாம், ஏவாள் என்போரே முதல் பெற்றோர். ஏவாளின் ஆசைக்கு உட்பட்டு சபிக்கப்பட்ட மரத்தின் கனியை உட்கொண்டு கடவுளின் கோபத்திற்கு உட்பட்டதாக அது கூறுகின்றது. சிவனும், உமையுமாக “அர்த்த நாதீஸ்வரர்“ உருவில் அமையப்பெற்றதாக இந்து புராணங்கள்,காவியங்கள் இதிகாசங்கள் தொடக்கம் கூறுகின்றன. இவை முதல் தற்கால சினிமா படங்கள்வரை காதலைப் பற்றி பலவிதங்களில் பேசுகின்றன.

எனவே காதல் என்பது “கல்தோன்றி மண்தோன்றா.. காலமாக அமையப்பெற்று வருகின்ற ஒரு உயிரிரன, உயிரியல் செயற்பாடாகும்.

பல சோதனைகளையும், சாவல்களையும் தாண்டியே காதல் இறுதியில் கல்யாணத்தில் முடிவுறுகிறது. அந்தக் கல்யாணம் எவ்வித தடைகளும் இன்றி தொடர்ந்தால் குடும்ப வாழ்க்கை வெற்றிகரமாக அமைகிறது. திருமணத்திற்கு அத்திவாரமாக காதலை நோக்கலாம். மிகவும் பரந்துபட்ட பொருட்கோடல் கொண்ட காதலின் நீளம், அகலம், ஆழம் மிகக்கூடியது. அது “ஜோதியாக“ நின்ற சிவனின் அடி முடியாக அல்லது “மரியானாவிலும்“ ஆழமாக, “எவரெஸ்ண்டின் உயரமாக அமையலாம்.

சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி,குண்டுலகேசி மணிமேகலை உள்ளிட்ட பண்டைய தமிழ் காப்பியங்கள் காதலின் அருமை, பெருமைகளை நன்றாக எடுத்துக்காட்டுகின்றன. காதலிப்பதோ காதல் வயப்படுவதுதோ ஒன்றும் தவறான செயல் அல்ல என்பதே இவற்றின் பொருளாகும்.

கட்டிளமைப்பவரு மாற்றங்களோடு ஆண், பெண் இருபாலாரிலும் ஏற்படக்கூடிய ஒரு ஈர்ப்பை இது குறிக்கிறது. இருந்தபோதும் இக்காலப்பகுதி இவ்வயதெல்லையில்

*உரிய வயதுக்கு முன்னதான காதல் பெரும்பாலும் வெற்றிக்கம்பத்தை அடையமுன் மயங்கி விழும் ஓட்ட வீரனின் நிலையாகிறது*

வருகின்ற, வாழ்க்கையின் அர்த்தத்தை தீர்மானிக்கின்ற இரண்டு தீர்மானம் மிக்க போட்டி பரீட்சைகளுடன் இது தொடர்புபட்டது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியவர்கள் என வயதில் மூத்தவர்கள் அனைவரினதும் பெரும் கவலை காதலினால், கட்டிளமைப்பருவத்தினரின் இலக்கு திசைமாறிவிடுமோ? என்பதாகும். அதில் உண்மை இல்லாமலும் இல்லை.

இயற்கையாக ஏற்படுகின்ற இவ்வீர்ப்பு படிப்படியாக பல படிநிலைகளைத் தாண்டி காதல் ஆகிறது. இங்கு எத்தனை காதல் ஜோடிகள் அதில் வெற்றி கண்டார்கள்? பொதுவாககல்லூரி காலம் முடிந்து பல்கலைக்கழகம், உயர்கல்வி வளாகங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்களில் ஏற்படுகின்ற காதல், அதன் வயது, அனுபவம், பொருத்தமான தேடல், கடைசிவரை கொண்டு செல்லல் என்பவற்றுடன் தொடர்புற்று சோதனைகள், சவால்கள், விருப்பு, வெறுப்புக்கள் யாவும் தாண்டி கல்யாணத்தில் நிறைவுறுகிறது. அதற்கு முதல் ஏற்படுகின்ற காதல் பெரும்பாலும் வெற்றிக்கம்பத்தை அடையமுன் மயங்கி விழும் ஓட்ட



## காதலிக்கக் கற்றுக்கொண்டு காதல் செய்வீர்!

வீரனின் நிலையாகிறது.

ஒரு நெடுந்தொலைவு ஓட்டவீரன் முறையான பயிற்சி, சரியானபோசாக்கு, மனவுறுதி, வெற்றி மனப்பான்மை, மெதுவாக ஆரம்பித்து படிப்படியாக வேக அதிகரிப்பு இறுதியில் துரித வேகத்தில் இலக்கடைகிறான். “கென்ய“ வீரர்களின் மரதன் ஓட்டம், “யமேக்கா“ குறுந்தூர வீரர்களில் இருந்து வேறுபட்டது. இது போலவே காதலும் பல்வேறு படிநிலைகளை கடந்தே வெற்றியிலக்கை அடைகிறது.

இங்கு ஆயத்தப் பருவம், காதலிக்கும் பருவம், சோதனையில் ஈடுபடுத்தும் பருவம் இறுதியில் வெற்றிகரமாக முன்னோக்கி செல்லல் அல்லது இடையில் நிற்றல் ஆகிய படிநிலைகளினூடே அமைகிறது. இக்காலப்பகுதியை வெற்றிகரமாக கடப்போர் நீண்டகாலம் காதல் உறவில், எத்தனை சவால்கள் வந்தாலும் அவர்கள் அதில் திட உறுதியுடன் நிலைத்திருப்பார்கள். சோதனைக் காலத்தில் வருகின்ற சவால்களை நேர்முகமாக முகம் கொடுக்க முடியாதோர் அதில் தோல்வி கண்டு ஒருசாரார் பின்வாங்கி, மீண்டும் ஒரு காதலிற்கு ஆயத்தப்படுத்துவர், மறுசாரர் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க விளைவர். அவ்வாறு ஏற்படுகின்ற தற்கொலை முயற்சிகளும்,

**காதலிக்கும் பருவ வயதினரை கண்டித்தல், தண்டித்தல், அம்பலப்படுத்துதல், அதுவோர் குற்றச்செயலாக நோக்குதல், துரோகம் விளைவிப்பதாக அணுகுதல் என்பன எதிர்மறையான விளைவுகளேயே ஏற்படுத்தும்.**

தற்கொலை மரணங்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்து வருவது குறிப்பாக தமிழ் சமூகத்தில் வருந்துவதற்குரியது. காதலின் பல்வேறு வகைகளில் அதைத் தூண்டுவதில் உடல் கவர்ச்சி, ஆடைகள், சிகை வடிவமைப்பு, கையாழுகின்ற சாதனங்கள், உடனடித் தேவைகளை புர்த்தி செய்தல் என்பவற்றை மையப்படுத்தியதாக அமைகிறது. இங்கு காதல் என்பதற்கு மேலாக குறுகிய தேவைகளை அடைவதை நோக்கமாக கொண்டு அமையும். அத்தேவை முடிய காதலும் விடைபெற்று விடும். இங்கு குறிப்பிட்ட ஒருசாரார் பொதுவாக பெண்கள் ஏமாற்றப்பட்டு, சில வேளைகளில் வேண்டத்தகாத கர்ப்பமாகவும் முடிவுறும்.

இரண்டாவது வகை காதல், பிந்திய கட்டிளமைப்பருவத்தில் வயது, அனுபவம் சரியான தீர்மானம், ஏற்றுக்கொள்ளக்கூடிய முடிவுகளுடன் தொடர்புறுகிறது. இங்கு ஆளுமை, ஆர்வங்கள், மிகப் பொருத்தம், அந்தஸ்து, சுயகௌரவம் போன்ற பலவற்றின் அடிப்படையில் தேர்வு அமைகிறது. இத்தேர்வு இறுதி இலக்கை நோக்கி நகருவதற்கு வாய்ப்பு அதிகம். இங்கு குறுகிய பாலியல்சார் தேவைகளிற்கு மேலாக பெரும்பாலான பொருத்தங்கள் நன்றாக வாய்க்கப் பெற்றதாக அமைகிறது. ஈற்றில் பெற்றோர், பெரியவர் ஆசியுடன் எல்லா விருப்பங்களும் பொருத்தங்களும் சரிவந்து ஊரறிய கல்யாணம் நடைபெறும்.

பருவமாற்றத்தோடு பெற்றோர், ஆசிரியர்கள் தங்கள் பிள்ளைகளுடன் காதல் அது ஏற்படுத்தும் ஈர்ப்பு, அதனால் வரக்கூடிய விளைவுகள் என்பவற்றை மனம் திறந்து கதைக்க வேண்டும் கதைப்பதறகான சந்தர்ப்பதையும் கொடுக்க வேண்டும். காதலிக்கும் பருவ வயதினரை கண்டித்தல், தண்டித்தல், அம்பலப்படுத்துதல் அதுவோர் குற்றச்செயலாக நோக்குதல், துரோகம் விளைவிப்பதாக அணுகுதல் என்பன எதிர்மறையான விளைவுகளேயே ஏற்படுத்தும்.

காதலிக்கூடிய பொருத்தமான வயதெல்லை குறிப்பாக அவ்வாறான ஒரு தேடலை பல்கலைக்கழகம், உயர்கல்வி நிறுவனம் என்பவற்றில் செய்வதிலும் பாடசாலைக் காலத்தில் ஏற்படுத்துவதிலும் உள்ள பாதக நிலைமைகளை எடுத்துக்காட்டலாம். பொருத்தமான சம்பவங்களைக்கூட அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படியாக கலந்துரையாடலாம். பாடசாலை காலத்தின் பிரதான இலக்கடைய காதல் எவ்வாறு ஒரு கவனக்கலைப்பானதாக அமைகிறது போன்ற விடயங்களை அவர்களுடன் தர்க்க ரீதியாக கலந்துரையாடலாம்.

திரைப்படங்கள், சினிமாக்களில், நாடகங்களில் வருகின்ற காதலின் உண்மை நிலைமைகளை அவர்கள் ஊடாகவே வெளிக் கொணரலாம். ஆசிரியர் பெற்றோர் கட்டிளமைப்பருவ வயதினருக்கு உளவள ஆலோசகராக மாறுவதே கட்டிளமைப்பருவத்தின் பல்வேறு பிரச்சினைகளை நல்ல விதமாக கையாள்வதற்கு உதவும்.

### காதலில் ஈடுபடுகின்ற கட்டிளமைப்பருவத்தினர் கவனத்துக்கு:

வாழ்க்கையின் பிரதான இலட்சியத்தை அடையும் வரை, கல்விக்கும், பரீட்சைக்கும் பெறுபேறுகளிலுமே அதிக முக்கியத்துவம் கொடுப்பது. பெற்றோரின் விருப்பு, வெறுப்புக்களையும், மனநிலைகளையும் முன்கூட்டியே அறிந்து அதற்கு மிகத் தகுதியானவரை தேர்வு செய்வது. தனியாக சந்திப்பது, மறைவிடங்கள், பொழுதுபோக்கு இடங்கள், கடற்கரைகளில் சந்திப்பது போன்றவற்றை தவிர்த்தல், மிகக்கூடிய இடைவெளியை வைத்துக்கொள்ளுதல், நெருக்கம் கூடும் போது அது வேறொரு தேவைக்கு இட்டுக்செல்லும், அப்போது பெண் பிள்ளைகள் அதிகம் பாதிக்கப்பட நேரிடலாம். பாலியல் கவர்ச்சியை, தூண்டலை ஏற்படுத்தக்கூடிய ஆடைகள், அலங்காரங்களை தவிர்த்துக் கொள்ளுதல். சரியான தொடுகையாயினும் உடல் தொடுகை, தழுவுதல் என்பவற்றை தவிர்த்துக்கொள்ளுதல், திருமணத்திற்கு பின் செய்யக்கூடியவற்றை முன் செய்வதற்கு முற்றுப் போடுதல், வாரத்தில் ஒரு தடவை, மாதத்தில் இரு தடவை நேராக பேசுதல் என சுய கட்டுபாடுகளை ஏற்படுத்திக் கொள்ளுதல். எப்போதும் இந்தக்காதல் இடையில் முறியலாம் என்பதை நினைவில் கொள்க. அவசர கால கர்ப்பத் தவிர்ப்பு முறைகளை வைத்தியர்கள் ஊடாக அறிந்து வைத்திருத்தல்.

இவை காதலிக்கும் காலத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு பிரச்சினைகளை தவிர்க்க உதவும். பாரதியாரும் “காதலினால் மானுடர்க்குக் கவலைபோம். களிப்புண்டாம் ஆதலினால் மானுடனே காதல் செய்வீர்“ என காதலுக்கு பச்சைகொடி காட்டுகின்றார். இங்கு காதலிக்க கற்றுக்கொண்டு காதல் செய்வது கட்டிளமைப்பருவ உளநலமேம்பாட்டை விருத்தி செய்வதாக அமையும்.










**FCC வழங்கும் இவ்வார சிந்தனை!**

**வெற்றி ஒரு விபத்தல்ல. அதேபோல் தோல்வியும் விபத்தல்ல. உண்மையில் வெற்றி என்பது முன்னரே அறியக் கூடிய ஒன்று. அது தன் தடங்களை விட்டுச் செல்கிறது.**

FCC SUPER MALL
4 Wings for Uplift Your life

உங்களின் வாழ்வை மேம்படுத்த நான்கு இறக்கைகள்...

PHARMACY – TIP-TOP HEALTH CARE SINCE 1937
SUPER MARKET – FOURAMS CITY CENTRE
BUDGET SHOP – FOURAMS CASH & CARRY
CAFETERIA – FCC Cafe & Bakers

வாங்குங்கள் சேமியுங்கள் கொண்டாடுங்கள்

ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியவசிய பொருட்தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்

இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு.
Tel: 065 22 22 722, Hot Line: 077 20 72 722 e-Mail: tiptopph @gmail.com